விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 17 ஞாயிற்றுக்கிழமை (01.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 072

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# செப்ரெம்பர் மாத அறிக்கை வலுவானதாக அமையும் !

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்ற மீறல்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து தயாரிக்கப்பட்ட அறிக்கை மார்ச் மாத அமர்வில் சமர்ப்பிக்கப்படாதமை கவலையளிக்கிறது. இருப்பினும் அடுத்த செப்ரெம்பர் மாதம் அந்த அறிக்கை வலுவானதாக அமையும் என எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு ஐ.நா. அதிகாரியிடம் வலியுறுத்தி கூறியுள்ளனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட அரசியல் விவகாரப் பிரதிநிதி ஜெப்ரி பெல்ட்மன். நேற்று சனிக்கிழமை இலங்கை வந்தடைந்தார். இலங்கை வந்த அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்று மாலை சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பிலேயே மேற்படி விடயத்தை அவர்கள் ஐ.நா. அதிகாரியிடம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் நேற்று மாலை ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட அரசியல் விவகாரப் பிரதிநிதி ஜெப்ரி பெல்ட்மன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (எ-11)

## சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த முயற்சி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தேர்தல் முறை என்பதை ஒரே நேரத்தில் திருத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் தேவை எனவும் அதுவே தனது நிலைப்பாடு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். 15 ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணை ஆணைக்குழு

### குச்சவெளி விஜயம்

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு அதனை விசாரணை செய்யும் ஜனாதிபதியின் ஆணைக்குழுவினர் நேற்று குச்சவெளி பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

நேற்றும் இன்றும் மற்றும் நாளை ஆகிய மூன்று நாட்கள் முழுவதும் குச்சவெளி 15 ஆம் பக்கம் பார்க்க....



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று மாலை ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட அரசியல் விவகாரப் பிரதிநிதி ஜெப்ரி பெல்ட்மன் சந்தித்து கலந்துரையாடிய போது...

## லண்டன் செல்லும் ஜனாதிபதி மகாராணியையும் சந்திப்பார்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 7 ஆம் திகதி லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவருடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் செல்லவுள்ளார்.

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் அழைப்பை ஏற்று லண்டன் செல்லும் இவர், வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் இடம்பெறும் பொதுநலவாய வார கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனிப்பட்ட பார்வையாளராகச் சந்திக்க இணக்கம் தெரிவித்துள்ள பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் அவருக்கு மதியபோசன விருந்து அளித்து கௌரவிக்கவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைக் கட்டியெழுப்புவது தொடர் 15 ஆம் பக்கம் பார்க்க....

## 6 மாத காலத்தினுள் மீள்குடியமர்வு !

### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்திற்கு தேவையற்ற காணிகள் அனைவற்றிலும் 180 நாட்களிற்குள் மக்கள் மீள்குடியேற்படுவர் என மீள்குடியேற்றப் புனர்வாழ்வு மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாயில் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு 15 ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் நிலையக் காணியை விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டம்

### இளவாலையில் இன்று ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள தனியார் காணிகளினை விடுவிக்கக்கோரி அப்பகுதி மக்கள் இன்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்று காலை 9.00 மணியளவில் இளவாலை பொலிஸ் நிலையம் முன்பாக ஆரம்பமாக இருக்கும் போராட்டத்திற்கு பலரின் ஆதரவினை அம்மக்கள் கோரியுள்ளனர்.

தற்போது இளவாலை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள வீட்டின் சுவாமி அறையினை உடைத்து மலசல கூடம் 15 ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
உலகமே திரும்பிப் பார்க்கும் எங்கள் இடம்
SAMSUNG
SMGUA32H5100
6000ரூபா பண்டமாற்று விலைக்கழிவு
ரூபா69,999
DELL
DELL-NB-I3
வட்டியின்றிய கொடுப்பனவு
ரூபா83,299
இல-106 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-021 221 9291
இல-125 கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். தொ.பே:-0212242335
இல-17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே:-0212283755
இல-149 கண்டி வீதி, வவுனியா. தொ.பே:-0778561406
(C-172)
SHT-1691P
2000ரூபா விலைக்கழிவு
ரூபா19,299
SL-ECO72
இலவசம் STAND FAN
ரூபா41,999
SL-SWMFR72
10000ரூபா பண்டமாற்று விலைக்கழிவு
ரூபா43,999

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகபூர்வ அறிவிப்பு

வடக்கின் அச்சகதாரராக மிளிரும்

## கரிகணன் நிறுவனம்

தனது அச்சுப்பதிப்புச் சேவைகள் அனைத்திற்கும்

## மார்ச் 01 முதல் அதிரடி விலைக் குறைப்பு

உத்தியோகபூர்வ அறிவிப்பு

### இந்த விலைக் குறைப்பினை நம்பித்தான் ஆகவேண்டும்

### இது எவ்வாறு சாத்தியம்???

வாடிக்கையாளர் நலன் கருதி **அச்சிடல் செலவினை குறைக்கும் நோக்குடன் கரிகணன்** நிறுவனம் 02.12.2012 ஆம் ஆண்டு நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அச்சுச் சேவை ஆய்வாளர் **அல்பேட் எமிங்** அவர்களுடனும் KPMG நிறுவனத்துடனும் தனது இவ் **விலைக்குறைப்பு ஆய்வினை** (Research) மேற்கொண்டது. இவ் ஒரு வருட கால ஆய்வின் தீர்வாக எம்மால் உள்வாங்கப் பட்டுள்ள **புதிய முறையிலான அச்சு இயந்திரத் தொழில் நுட்பங்கள்** எமது அச்சிடல் செலவினை குறைத்துள்ளமையினால், **எம்மால் உயர்ந்த தரத்திலும், குறைந்த செலவிலும்** வாடிக்கையாளர்களின் அச்சுத்தேவையினைப் பூர்த்தி செய்யமுடியும்.

- ✓ புதிய அச்சு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு புதிய தொழில் நுட்பத்தின் மூலம் அச்சுப்பதிப்புச் செய்யப்பட்டு தீர்வு காணப்பட்டது.
- ✓ 01.08.2014 பரீட்சார்த்தமான அச்சுப்பதிப்பு; ஆரம்ப தீர்வு வெற்றி
- ✓ 01.01.2015 முதல் விலைக் குறைப்பு ஆரம்பம்
- ✓ 01.03.2015 முதல் உத்தியோகபூர்வ அறிவிப்பு




### இவ் விலைக் குறைப்பினை

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் மற்றும் கல்விச் சமூகத்தினர் (பாடசாலை மாணவர்கள்) அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

எந்த ஒரு விடயத்திற்குமான தீர்வு நீண்டகால ஆய்வின் அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றது அவ்வாறான தீர்வே நீடிக்கக்கூடியது.





**NO DISCOUNT | NO CREDIT**

எதிர்பார்த்து காத்திருங்கள்

**MAY 1** முதல் மாபெரும் மாற்றம் Digital துறையில்

Why us???

**Harikanan**

PRINTERS OF THE NORTH

Lowest Price | Best Quality | Fast Delivery | 100% Satisfaction

#681, K.K.S Road, Jaffna, Sri Lanka. T +94 21 222 2717|8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும்

# வள்ளுவர் விழா

காலம்:- 01.03.2015 ஞாயிறு காலை , மாலை
இடம்:- ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபம்
டச்சு வீதி, சாவகச்சேரி.

**அனைவரும் வருக! பயன்மிகப் பெறுக!**

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொள்வாம்"

முகவரி கம்பன் குடில், கிராம்புவில், சாவகச்சேரி

**காலை 9.00 மணி**
மங்கல விளக்கேற்றல்
திரு. ஆ.தங்கவேலு தம்பதியினர்
(அதிபர், யா/ கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை)
கடவுள் வாழ்த்து
திரு. எம்.கலைச்செல்வன் அவர்கள்
தலைமையுரை
திரு. அ.கைலாயபிள்ளை அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர், யா/ சாவ. இந்துக் கல்லூரி)
தொடக்கவுரை
திரு. கா.சண்முகநாதன் அவர்கள்
(செயலாளர், நகரசபை, சாவகச்சேரி)
வரவேற்புரை
திரு.க.ஈஸ்வரன்
நூல் வெளியீடு
மாணிக்கவாசகர் வரலாறு- ஓர் அகச்சான்றுக் கண்ணோட்டம்
(ஆசிரியர் சிலேடைக் கவிரத்தினம் க.கணபதிப்பிள்ளை)
நூல் அறிமுக உரை
திரு.பா.விக்கினேஸ்வரன்
வெளியீட்டுச் சிறப்புரை
கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்

**இலக்கிய ஆணைக்குழு**
நடுவர்: கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்
வள்ளுவன் வழித்தடத்தில் வல்லமை காட்டிய பெருங்கவிஞன்

| இளங்கோவே! | கம்பனே! | வில்லியே! | பாரதியே! |
|---|---|---|---|
| திரு. ச.மார்க்கண்டு | திரு. வே.ஞானசம்பந்தன் | திரு. வே. உதயகுமார் | திரு. அ.வாசுதேவா |

**மாலை 2.30 மணி**
மங்கல விளக்கேற்றல்
திரு.இ.கைலைநாதன் தம்பதியினர்
(ஓய்வுநிலை அதிபர்,யா/ சாவ. இந்துக் கல்லூரி)
கடவுள் வாழ்த்து
திருமதி புஸ்பராணி நகுலேஸ்வரன் அவர்கள்
வரவேற்புரை
திரு. பா.செந்தூரன்
தலைமையுரை
திரு. கு.சிவானந்தன் அவர்கள்
(ஓய்வுநிலை கோட்டக்கல்வி அலுவலர், சாவகச்சேரி)
தொடக்கவுரை
திரு.க.சண்முகலிங்கம் அவர்கள்
(ஓய்வுநிலை முகாமையாளர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)
ஆன்றோர் கௌரவம்
கண்டாவளைக் கவிராயர்
சித்தர் குமாரவேலு இராசையா
வழக்காடு மன்றம்
வழக்கு: வர்க்கப் பாகுபாட்டிற்கு வழிவகுத்த வள்ளுவர் குற்றக்கூண்டில்
நீதிபதி:- கம்பவாரிதி இ.ஜெயராஜ்.

குற்றம் சுமத்துபவர்கள்
பேராசிரியர் தி.வேல்நம்பி
விரிவுரையாளர் திரு.ச.லலீசன்

மறுப்பவர்கள்
கவிஞர் த.நாகேஸ்வரன்
கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்

நன்றியுரை:- திரு.க.நடேஸ்வரன்

| பெருந்தலைவர் | அமைப்பாளர் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|---|
| திரு. த.நாகேஸ்வரன் | திரு.அ.வாசுதேவா | திரு.சோ.கோகுலன் | திரு.க.நடேஸ்வரன் | திரு.பா.விக்கினேஸ்வரன் |


# மைத்திரி மகளும் தேர்தலில் போட்டி

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மூத்த மகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அவர் பொலனறுவை மாவட்டத்தில் எதிர்வரும் பொது தேர்தல் மூலம் அரசியலுக்குள் பிரவேசிக்க உள்ளதாகவும் அதில் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கீழ் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக கூறப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேன அரசியலில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அவரின் மகள் செயற்பாட்டு ரீதியான அரசியலை ஆரம்பிக்க உள்ள தாகவும் அந்த சிங்கள ஊடகம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் தனது பிள்ளைகள் எவரையும் அரசியலுக்கு கொண்டு வரப் போவ தில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அவரது மகள் அரசியலில் ஈடுபட போவதான இந்த செய்தி வெளியாகியுள்ளது. (இ-5)


## தேவை

பிரபல நிறுவனத்திற்கு தொலைபேசி எழுதுவினைஞர், கணக்கீடு, கணனி பிரிவுகளுக்கு யுவதிகள் தேவை. உயர் சம்பளம் வசதிகள் வழங்கப்படும்.
076 707 5789 (9598)

## திருமண தேவைகளுக்கான கார்




தொடர்புகளுக்கு:-
0773747825, 0212228984

## காணி விற்பனைக்கு

மானிப்பாயிலுள்ள வில்லியம் மெதடிஸ் சேர்ச் அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (சி-187)
தொடர்புகளுக்கு:- 077 258 6091


# சட்ட உதவி ஆணைக்குழுவின் நடமாடும்சேவை இன்று யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சட்ட உதவி ஆணைக்குழு வின் நடமாடும் சேவையும் இலவச சட்ட உதவியும் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு சட்டநாதர் சிவன் கோயில் முன்பாகவுள்ள கல்வி யங்காடு சங்கிலியன் மன் றத்தில் இடம்பெ றவுள்ளது.

இந்தச் சட்ட உதவி ஆணைக் குழு வின் நடமாடும் சேவையில் குடும் பவன் முறை, தாப ரிப்பு, விவாகரத்து, காணி தொடர்பான இலவச சட்ட ஆலோ சனைகளும் மற்றும் பிறப்பு இறப்பு விவாக இறப்புச் சான்றிதழ் தொடர்பான ஆலோ சனைகளும் பிற சட்ட ஆலோசனைக ளும் வழங் கப்படவு ள்ளன. (இ-3-5)


## துயர் பகிர்வு

**அமரர் திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை**

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.வா.விநாயக மூர்த்தி அவர்களின் அன்பு மாமியார் அமரர் திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை அவர்களின் மறை வினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (சி-182)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொற்றாவத்தை
அ.மி.த.க.பாடசாலை, வல்வெட்டித்துறை.

## அழகுக்கலை பயிற்சி

யாழ். பியூட்டி அக்கடமியும் ஒறிபிளேம் யாழ். சேவை நிலையமும் இணைந்து மகளிர் தினத்தை முன்னிட்டு மீண்டும் மிக குறைந்த கட்டணத்தில்...

- ஒரு மாத கால அழகுக்கலைப் பயிற்சிகள்– பதிவுக்கட்டணம் உள் ளடங்கலாக 2990/– மட்டுமே. மேலதிக கட்டணங்கள் அறவிடப் படமாட்டாது
- 3 மாத கால டிப்ளோமா அழகுக்கலைப் பயிற்சிகள்– 20% கட்டணக் கழிவில்.
- கேக் ஐசிங் பயிற்சிகள்– 20% கட்டணக்கழிவில்.

என அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு மேற்படி பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 08.03.2015 அன்று ஞாயிறு 10.00 மணிக்கு
கிழமை நாள் புதிய பிரிவுகள் 10.03.2015 அன்று திங்கள் 10.00 மணிக்கு

பதிவுகளையும் மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள அலுவலக நேரத்தில் வருகை தரவும்...
நிறுவன அமைவிடத்தினை அறிந்து கொள்வதற்கு தொடர்பு கொள்ள 021-4546 026

இல.616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவை முன்)
ORIFLAME SWEDEN


# இராசி பலன்

01.03.2015
மாசி 17, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 5.16 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 2.34 மணிவரை
இராகுகாலம் 4.58-6.28 மணிவரை
சுபநேரம் 9.28-10.58 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், கொடுக்கல்-வாங் கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலை யொன்றில் அக்கறை காட் டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்,புதிய முயற்சி யொன்றில் ஆர்வம் காட்டுவீர் கள், காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகும், பெரிய மனி தர்களின் தொடர்புகள் அதிகரி க்கும், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறு வீர்கள், விலையுயர்ந்த பொருட் களை கவனமாக கையாள்வது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.

**சிம்மம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சியை வழங்கும், பொருளா தார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், திறமைகள் வெளிப்படும், அரைகுறை யாக இருந்த பணிகளை மீதியும் தொட ர்வீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**துலாம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தேகாரோக்கியத் தில் தெளிவு பிறக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்:** அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதி கிடைக்கும், தேவை யற்ற சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வரவும் செலவும் சமமாகும், வேலைச் சுமை கூடும்.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிக ரிக்கும், தொலைபேசி மூலம் எதிர் பார்த்த தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** நாவன்மையால் நல்லபெயர் கிடைக்கும், கடமையில் கண்ணும் கருத்துமாக இரு ப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாம ர்த்தியமாகப்பேசி சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சிகண்டு பெருமையடைவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்க வர்களிடம் ஆலோசனை பெறு வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்:** உறவினர்களால் எதிர்பார்த்த உதவி கள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்திதரும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொ ள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இனத்தைப் பலவீனப்படுத்தும் சூழ்ச்சிகள் இன்றும் தொடர்கின்றன

இன்றும் எமது இனத்தை பலவீனப் படுத்துவதற்கான பல்வேறு சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இதன் மூலம் எமது தாகத்தை தணித்து விடலாமென சில சக்திகள் கனவு காண்கின்றன என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன். மாகாண சபை உறுப்பினர்களான சிவயோகன் சுகிர்தன் ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டில் பெறப்பட்ட பொருட்களை கையளிக்கும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு சிறிதரன் மேலும் உரையாற்றுகையில்.

எமது சமூகம் பல்வேறு காலகட்டத்தில். பல்வேறு அரசியல். பொருளாதார நிலைமைகளை தாண்டி வந்துள்ள நிலையில் இப்பொழுதும் ஒருவகையான அரசியல் சூழ்ச்சிக் காலத்தில் வாழ தலைப்பட்டிருக்கின்றோம். கால ஓட்டத்தில் இது நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளபோதும் எம்மிடையே இருக்கக் கூடிய விழிப்புணர்ச்சிதான் எம்மை எமது நிலையில் தக்க வைத்து அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும்.

இன்றும் எமது இனத்தை பலவீனப் படுத்துவதற்கான பல்வேறு சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இதன்மூலம் எமது தாகத்தை தணித்து விடலாமென சில சக்திகள் கனவு காண்கின்றன. இந்த நிலையில் நமது பயணம் தெளிவானதாகவும் இராஜதந்திரம் மிக்கதாகவும் இருக்க வேண்டியதாக இருக்கின்றது.

இதில் வெறுமனே பங்காளிகள். அரசியல்வாதிகள் மட்டுமல்ல மக்களும் ஊடகங்களும் பங்காளிகளாக திறம்பட செயலாற்ற வேண்டியிருக்கின்றது. பிரிவினைகளுக்கும் குரோதங்களுக்கும் நம்மிடையே இடம் கொடுக்காமல் பயணிப்பதே நமது இனத்திற்கு சிறந்தது என்றார். (இ-23)

# குப்பை பிரச்சினையைத் தீர்த்த கோத்தாவுக்கு முதல்வர் நன்றி

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பு நகர அபிவிருத்திக்காக வழங்கிய ஆதரவிற்காக அவருக்கு நகரசபை சார்பில் பாராட்டுக்கள் வழங்க வேண்டும் என கொழும்பு நகர முதல்வர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நகர சபையின் மாதாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு நகரத்தில் காணப்பட்ட மெற்றிக்தொன் அளவான குப்பைகளை அகற்றி குப்பை பிரச்சினையை முழுமையாக தீர்த்து வைத்ததன் காரணமாக இன்று கொழும்பு நகரம் அழகுடன் காணப்படுகின்றது.

அது நகர மக்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும் என கொழும்பு நகர முதல்வர் மேலும் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார். (இ-5)




# பேசும் படம் - 39

இடம்:-சித்தன்கேணி



உனக்கு நான் துணை, எனக்கு நீ துணை
நிம்மதியாக உறங்கு மனிதா!

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
**அல்லது நேரில்.**

அனுப்பியவர்: தமிழ் சித்தன்கேணி

# யாழில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த மத்திய,மாகாண அரசுகள் கவனம் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் அடி நாதமாக விளங்குகின்ற அரசியல். சமூக. கலாசார ரீதியான விடயங்களில் மத்திய. மாகாண அரசுகள் காலதாமதமின்றி மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று அகில இலங்கை சைவ மகா சபை கோரியுள்ளது.

அரசியல் கைதிகள் விடுதலை. மீள் குடியேற்றம். நிலமற்றவர்களுக்கு நிலப் பகிர்வு. போதைப் பொருட்களைக் கட்டுப் படுத்தல். இளவயதுக் கர்ப்பம் போன்ற விடயங்களில் உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் மேற்படி சபை வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அகில இலங்கை சைவ மகா சபை நேற்று 28 ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் பிரதானமாக நான்கு மதங்களும் பின்பற்றப்படுகின்றதும் சமூக. கலாசார. அரசியல் விடயங்களில் ஆன்மீக வழிகாட்டல்களோடு பங்களித்து வருகின்றமையும் நாம்யாவரும் அறிந்ததே. இருப்பினும் வரலாற்று ரீதியான தொல்லியல் ஆய்வுகள் இலக்கியங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்ற இலங்கையின் ஆதி வழிபாடாகிய சிவ வழிபாட்டை பின்பற்றப்படுகின்ற சைவத் தமிழர்களுடைய வகிபாகம் ஏனைய மதத்தவர்களுடன் ஒப்பிடுகையில் குறைவானதாக காணப்படுவது வருந்தத்தக்கது.

ஆனாலும் சைவ சமயத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரு சமய அமைப்பு என்ற நிலையில். மூன்று தசாப்தகால யுத்தத்தினாலும் அதன் பின்னரான விளைவுகளினாலும் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற. சைவ சமயத்தை தாய் மதம் ஆகவும் பிரதான வாழ்வியல் நெறியாகவும் கொண்டிருக்கின்ற தமிழர்கள் சார்பாக எமது கரிசனையை வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

எமது மக்களின் அடி நாதமாகிய உரிமைப் போராட்டத்திற்கு அப்பால் அத்தோடு மிகவும் பின்னிப் பிணைந்திருக்கின்ற அத்தியாவசியமான பிரச்சினைகள் சிலவற்றில் மத்திய. மாகாண அரசுகளின் காத்திரமான முன்னகர்வுகளையும் நடவடிக்கைகளையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

அரசியல் கைதிகளின் துரித விசாரணை மூலமான விடுதலையும் மற்றும் காணாமற் போனவர்களின் பிரச்சினையை முழுமையாக தீர்த்து வைத்தலும் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தலும். நிலம் அற்ற ஏழைகளிற்கு காணிகளை பகிர்ந்தளித்தல்.

நலிவுற்ற நிலையில் வாழ்ந்து வரும் விசேட தேவையுடையவர்கள். பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான நிரந்தர நலத் திட்டங்களை உடனடியாக ஆரம்பித்தல்.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாடசாலை மாணவர் உள்ளிட்ட இளைய தலைமுறையினர் மது. போதைப்பொருள் பயன்படுத்தலை அறவே ஒழிப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல். எண்ணெய்க் கழிவுகளால் மாசுபடுத்தப்பட்டிருக்கின்ற யாழ்ப்பாணம். வலிகாமம் பகுதி மக்களிற்கான குறுங்கால. நீண்டகால மாற்று குடிநீர் திட்டங்களை முன்னெடுத்தலும் சுத்திகரிப்பிற்கான பொறிமுறையை ஆரம்பித்தலும்.

கலாசார பிறழ்வுகள். இள வயது கர்ப்பங்கள் என்பவற்றை தடுப்பதற்கு இளையோர் மத்தியில் அறநெறிக் கல்வியை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகளை வலுவூட்டுதல். சமயத்தலங்கள். பாடசாலைகளிற்கு அண்மையில் மது. புகை அற்ற பிரதேசங்களாக பேண நடவடிக்கை எடுத்தலும் தொடர்ச்சியாக கண்காணிப்பு பொறிமுறையை ஏற்படுத்தலும்.

மாற்றங்கள் பற்றிபேசப்படுகின்ற இத்தருணத்தில் தமிழ் மக்களின் சமூக. கலாசார. அரசியல் சார்ந்த மேற்படி விடயங்களில் உடனடி மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலைத் தீர்மானம் ஐ.நா.சபை ஆணையாளருக்கு

## வடக்கு மாகாணசபை அனுப்பி வைப்பு

(கொழும்பு)

**வடக்கு மாகாண சபையில் கடந்த 10 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான தீர்மானத்தின் பிரதிகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், பொதுச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உண்மையான அழிவுகளையும் இழப்புக்களையும் விளங்கிக் கொண்டு நீதியான நியாயமான முறையில் செயற்பட வேண்டியது அவசியம். இலங்கைக்கு எதிரான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை வெளியிடப்படவிருந்த நேரத்திலேயே இந்த பிரேரணை கொண்டுவரப்பட்டு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதனை அனுப்பி வைப்பதனூடாக விசாரணை அறிக்கை மேலும் வலுப்படுமன்றே எதிர்பார்த்திருந்தோம். அந்த அறிக்கையை வெளியிட வேண்டுமென தமிழ்த் தரப்புக்கள் கோரி வந்திருந்த நிலையில் இதனை ஒத்திவைக்குமாறு அரச தரப்பினர்கள் கோரி வந்தனர்.

மார்ச்சில் வெளியிடாமல் செப்டெம்பர் மாதத்தில் வெளியிடுவதாக பிற்போடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளமையானது, ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கின்றது. அதனை ஏற்கனவே திட்டமிடப்பட்டது போன்று மார்ச் மாதத்திலேயே வெளியிடப்பட வேண்டுமென்று நாங்கள் கோருகின்றோம். அவ்வாறு வெளியிடுவதனையே தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

நீதி கிடைக்குமா? என்ற ஏக்கத்துடன் இருந்த மக்கள் சர்வதேசத்தை நம்பினர். அந்த நம்பிக்கையிலேயே இன்று நீதிக்காக காத்திருக்கின்றனர். ஆயினும் இதனை செப்டெம்பர் மாதத்துக்கு பிற்போடப்பட்டு அறிக்கை தாமதமாக வெளியிடுவதாக இருந்தால், குறிப்பிட்ட காலப்பகுதியில் தொடர்ந்தும் இலங்கைக்கு வருகை தந்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதனூடாக கிடைக்கின்ற சாட்சியங்களையும் உள்ளடக்கியதாக செப்டெம்பரில் அறிக்கை வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். அறிக்கை பிற்போடப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதனை மார்ச் மாதத்திலேயே வெளியிட வலியுறுத்தியும் பல்கலைக்கழக சமூகம் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து பேரணியொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்தன. இதற்கு நாமும் ஆதரவு தெரிவித்தோம்.

இலங்கை மீதான விசாரணை அறிக்கையானது மார்ச் மாதத்திலேயே வெளியிட வேண்டும். இதுவே நீண்டகாலமாக காத்திருக்கின்ற தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நீதியாக அமையும். இதனையே சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டியதும் அவசியமாகும். தமிழினத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் அநீதிகளுக்கு தமிழ் மக்கள் நீதி வேண்டி நிற்கின்றனர்.

இதனை இலங்கை அரசு வழங்காது என்ற காரணத்தினாலேயே சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்கள் சென்றனர். சர்வதேசத்தை நம்பியுள்ள தமிழ் மக்களை சர்வதேசம் கைவிடாது பாதுகாத்து நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கையாக தற்போதும் இருப்பது இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீதி, நியாயம் கிடைக்க வேண்டும் என்பது ஆகும். இதனை விடுத்து இலங்கை அரசின் உள்நாட்டு விசாரணையில் எந்தவித நம்பிக்கையும் இல்லை. இதனை வரலாறுகள் எமக்கு தெளிவாகவே எடுத்துக்கூறுகின்றன" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியவர் பலி!

மாத்தறை - வல்கம பகுதியில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# இருவர் கைது

களுத்துறை பிரதேசத்தில் நிதி மோசடியில் ஈடுபட்ட இருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் போலி காசோலையைப் பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

50 வயதுடைய இருவருமே சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# முகாமையாளர் சடலமாக மீட்பு

காலி பஷார் வீதியிலுள்ள இலங்கை வங்கிக்கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் பி.டபிள்யூ.ஆரியசிறி (வயது- 56) என்பவரின் சடலம் ஹிக்கடுவ கடற்கரையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக நாரிகம பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# இலங்கையர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை இரத்தாக வாய்ப்பு

சவுதி அரேபியாவில் இலங்கையர்கள் மூவருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை இரத்து செய்வது தொடர்பான பேச்சுவார்த்தை சாதகமாக அமைந்துள்ளது.

சவுதி அரேபியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அந்நாட்டு ஆளுநருடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவித்தே இலங்கையர்கள் மூவருக்கு சவுதி அரசு மரணதண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மூவரிடமிருந்து நட்டஈட்டைப்பெற்று தண்டனையை இலகுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# புலம்பெயர் தமிழர்கள் மீது நடிகர் சரத்குமார் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைப் புலம்பெயர் தமிழர்கள் மீது பிரபல தென்னிந்திய நடிகர் சரத்குமார் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்கள் தென்னிந்திய திரைப படங்களை சட்டவிரோதமான முறையில் இணையத்தில் தரவேற்றம் செய்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் புலம்பெயர் இலங்கைத் தமிழர்களே அதிகளவில் தமிழகத்தில் திரையிடப்படும் புதிய திரைப்படங்களை சட்டவிரோதமான முறையில் பதிவு செய்து, அவற்றை இணையத்தின் ஊடாக தரவேற்றம் செய்வதாக தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்காக தாம் குரல் கொடுத்து வருவதாகவும், அவ்வாறான ஓர் பின்னணியில் இலங்கைத் தமிழர்கள் சுவீடன் போன்ற நாடுகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் தமிழ்த் திரைப்படங்களை தரவேற்றம் செய்து வருவதாகவும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் தமிழ் திரைப்படக் கலைஞர்கள் கடமையாற்றக் கூடாது என்ற ஓர் நிலைப்பாடு காணப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், தமிழ்த் திரைப்படக் கலைஞர்கள் இலங்கையில் பணியாற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். விரைவில் இலங்கைக்கு சென்று திரைப்படங்களை படமாக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 30 1/2 சூரிசெவ் 12 ல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: சுவிஸ்
தொ.இ: B/4190

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 54
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: DIP IN COMPUTER GRAPHYCS/ சொந்த தொழில்
தொ.இ: B/4191

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 27 3/4
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSC/ வங்கி உதவி முகாமையாளர்
தொ.இ: B/4195

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 39 1/2 சூரிசெவ் 2இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L/ தனியார்
தொ.இ: B/4197

**மணமகன் தேவை**

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 79 சூரிசெவ் 8இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர்களும் ஏற்கப்படும்
தொ.இ: G/548

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 30
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/551

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 39
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்
தொ.இ: G/552

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 36 செவ் 4இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L ஜேர்மனி NOT PR
எதிர்பார்ப்பு: விவாகரத்தது பெற்றவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/559

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ். கிளையில் 2 திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பெண்களின் பிரச்சினைகள் தொடர்பான இரு திரைப்படங்களை திரையிட பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ் கிளை தீர்மானித்துள்ளது. பிற்பகல் ஒரு மணிமுதல் 2.30 மணி வரையும் ரோஜா சேலைகள்' என்ற திரைப் படமும் 3 மணிமுதல் 4.30 மணிவரை சல்மா என்றதிரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

ரோஜா சேலைகள் திரைப்படம் உத் தரப்பிரதேசத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு ரோஜா குழுவினர் தமது பாணியில் தண்டனை வழங்குவதைப்பற்றி விபரிக்கிறது. சல்மா திரைப்படம் ஒரு பெண் ஆளுமையுள்ள அரசியல்வாதியாக வருவதை விபரிக்கிறது. இவ்விரு திரைப்படங்களும் இலங்கைப் பெண்களின் பிரச்சினைகளை ஒத்தவை. கிம் லோகிண்டோவினால் இயக்கப்பட்ட இந்த இரு குறும்படங்களும் பல விருதுக ளைப் பெற்றுள்ளன.

15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் இதில் பங்கு கொள்ள முடியும். தொடர்ந்து இடம் பெறும் கலந்துரையாடலிலும் பங்குபற்றி விவாதிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு 077 312 5224 என்ற தொலைபேசி இலக்க த்துடன் அல்லது http://www.britishcouncil.lk/events/womensday-jaffna என்ற இணையத்தள முகவரியில் விபரங்களைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




# இந்திய மீனவர்களின் நடவடிக்கைக்கு மார்க்சிச-லெனினிசக் கட்சி கண்டனம்

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடல் பரப்பில் அத்துமீறி பிரவே சித்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்த நூற்றுக்கணக்கான இழுவைப் பட குகளில் இந்திய மீனவர்கள் கூரிய ஆயுதங்கள், வலைக்கு கட்டும் ஈயக் குண்டுகள், போத்தல்கள் என்பவற் றைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடு பட்டிருந்தஎமது மீனவர்களைபடுமோச மான முறையில் தாக்கி படுகாயங் களை விளைவித்துள்ளார்கள். அத்து டன் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர் த்து அச்சுறுத்தியதுடன் எமது மீனவர் களின் மீன் வலைகளையும் வெட்டி நாசம் செய்துவிட்டு சென்றுள்ளனர்.

இக் கொடூரச் சம்பவத்தை எமது புதிய ஜனநாயக மார்க்சிச-லெனி னிசக்கட்சி மிக வன்மையாக கண் டிக்கிறது இச்சம்பவம் பற்றி வடமா காண மத்திய அரசாங்கங்கள் உட னடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயக மார் க்சிச லெனினிசக் கட்சியின் வட பிரதேசச் செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய றோலர் படகு 'களில் எமது கடல் பரப்பில் அத்து மீறி பிரவேசித்து மீன் பிடிப்போர் சாதாரண இந்திய மீனவர்கள் அல் லர், பெரும் மீன் முதலாளிகளின் கை ஆட்களே ஆவர்.

கடந்த வியாழக்கிழமை அன்று நூறு றோலர் படகுகளில் வந்து மீன் கொள்ளையில் ஈடுபட்டது மட்டுமல் லாமல் எமது மீனவர்களை கடும் காயப்படுத்திய செயலை எவரும் தட்டிக்களித்து விடமுடியாது.

இத்தகைய அத்துமீறல் றோலர் மீன் பிடியையும் எமது மீனவர்களை கண்மூடித்தனமாக தாக்குவதையும் வலைகளை வெட்டி நாசப்படுத்து வதையும் தடுத்து நிறுத்துவதற்கு மாகாணசபை ஆட்சியும் மத்தி ஆட் சியினரும் பாராமுகம் காட்டாது உடன் நடவடிக்கை எடுக்க வேண் டும். எமது மீனவர்களையும் அவர் களது தொழில்களையும் பாதுகா த்து வாழ்வாதாரத்திற்கான தொழில் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழ ங்க வேண்டும் என நாம் வற்புறுத் துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# கூட்டமைப்பின் வழிகாட்டலில் நான் செயற்பட்டு வருகின்றேன்

## பிரதியமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் நடவடிக்கைக ளுக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பு ஒத்துழைப்பு வழங்கி வருகின் றமை வரவேற்கத்தக்கதாகும்.

வடக்கில் கூட்டமைப்பினரின் வழிகாட்டலிலேயே நான் செயற் பட்டு வருகின்றேன் என்று மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜ யகலா மகேஸ்வரன் தெரிவித்துள் ளார்.

வடமாகாண சபைக்கு போதிய ளவு நிதி வழங்கப்பட வேண்டும். கடந்த அரசாங்க காலத்தில் வடமா காண சபைக்கு உரிய வகையில் நிதி வழங்கப்படவில்லை. புதிய அர சாங்கம் பதவியேற்ற பின்னரும் அதற்கான நடவடிக்கை இன்னமும் எடுக்கப்படவில்லை. இந்த விடய த்தில் விரைந்து அரசாங்கம் செயற் பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் இளவாலைஹென் றியரசர் கல்லூரியில் அமைக்கப் பட்ட தொழில்நுட்ப கூட நிலைய த்தின் திறப்பு விழா நேற்று முன்தி னம் நடைபெற்றது. கல்வி இராஜா ங்க அமைச்சர் வே.இராதாகிருஷ் ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வட மாகாண கல்வி அமைச்சர் த. குரு குலராஜா, கூட்டமைப்பு எம்.பி.சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரும் கல ந்துகொண்டனர். இந்த நிகழ்வில் சிற ப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதிய மைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




அங்கு அவர் தெரிவிக்கையில்,

வடக்கில் பாடசாலைகளில் பல் வேறு குறைபாடுகள் காணப்படுகி ன்றன. ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது. வலிகாமம் வடக்கு அதிபாதுகாப்பு வலயப் பகுதிக்குள் நடேஸ்வராக் கல்லூரி, மயிலிட்டி வடக்கு கலை மகள் வித்தியாலயம் உட்பட ஏழு பாடசாலைகள் வரையிலுள்ளன.

அந்தப் பாடசாலைகளை மீட்டு த்தர கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். பலாலி கலாசாலை மூடப்பட்டுள்ளது. 14 கற்கை நெறி களுடன் செயற்பட்டு வந்த இந்தக் கலாசாலை தற்போது ஒரு கற்கை நெறியுடன் திருநெல்வேலியில் செய ற்பட்டு வருகின்றது. இந்தக் கலா சாலையையும் மீளவும் இயங்குவ தற்கு ஆவன செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

குடாநாட்டில் பாடசாலைகளுக்கு அருகில் போதைவஸ்து விநியோ கிக்கும் நடவடிக்கைகளும் இடம் பெற்று வருவதாக தெரிகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை கட்டு ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் செயற்பாடுக ளுக்கு தற்போது கூட்டமைப்பு ஒத்து ழைப்பு வழங்கி வருவது பாராட்டத்த க்கது. வடக்கைப் பொறுத்தவரை யில் நாம் கூட்டமைப்புக்கு வழி காட்டவில்லை அவர்களின் வழியி லேயே நான்நடக்கின்றேன்.

இந்த பாடசாலையில் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான விஞ்ஞான ஆய்வுகூடம் கூட இல் லாத நிலை காணப்படுகின்றது. இத ற்கான வசதிகள் செய்துகொடுக்கப் பட வேண்டும் என பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கூட்டுக் களவானிகள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

**சைக்கிள்களை திருடிக் கொடுப் பவரும் அதனைப் பகுதியாக பிரித்து விற்பனையில் ஈடுபட்டு வந்த சைக்கிள் கடை உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக் காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.**

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் சைக் கிள் ஒன்றைத் திருடிய பொழுது பொலிஸாரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

பிரஸ்தாப நபரிடமிருந்து பொலி ஸார் பெற்றுக்கொண்ட தகவல்க ளின் அடிப்படையில் நேற்று அதி காலை 4 மணியளவில் கொடிகா மம் பொலிஸார் நெல்லியடிக்கு சைக்கிள் கடை உரிமையாளரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

வீட்டில் வைத்துக் கைது செய் யப்பட்ட பிரஸ்தாப நபரினை நெல் லியடி விக்னேஸ்வரா வீதிப்பகுதி யில் உள்ள சைக்கிள் கடைக்கு கொண்டு சென்ற பொலிஸார் பெரு மளவான சைக்கிள்கள், அதன் உதி ரிப்பாகங்கள் என்பன அங்கு இருப் பதை கண்டுபிடித்தனர்.

தொடர்ந்து இரண்டு தட்வைகள் வாகனத்தில் அவற்றை ஏற்றிக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற் குக் கொண்டு சென்றனர்.

கொடிகாமத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட நபர் சைக்கிள்களை திருடிக் கொடுப்பதாகவும் அவை நெல்லியடியிலுள்ள சைக்கிள் கடை ஒன்றில் பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்ததா கவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. 10 இற்கும் மேற்பட்ட 4 சைக்கிள்களை பொலி ஸார் மீட்டுள்ளதுடன் பெருமளவான உதிரிப்பாகங்களையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை பிரஸ்தாப நபர் கள் வேறு இடங்களிலும் இவ்வா றான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் என்ற [illegible] பொலிஸார் விசாரணை[illegible] கொண்டு வருகின்றனர். (இ-3-60)

# கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பள்ளம்புலம் முருக மூர்த்தி சனசமூக நிலையத்தின் கௌ ரவிப்பு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி க்கு சரவணை பள்ளம்புலம் அருள் மிகு முருகமூர்த்தி திருக்கோயில் நால்வர் மணிமண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நிலையத் தலைவர் கந்தசுவாமி இராசலிங்கம் தலைமையில் நடை பெறும் இந் நிகழ்வில் முருகபக் தரின் படம் திரைநீக்கமும் அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் தம் பதியரின் படத் திரைநீக்கமும் இடம் பெறும்.

இதேவேளை இந்நிகழ்வில் கட ந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவி ஜெ.தர்சினிகா கௌரவிக்கப்பட்டவு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை புனித அன்னாள் ஆலய முன்றிலில் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணிய ளவில் இரத்ததான நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வில் 60 பேர் வரையில் இரத்ததானம் வழங் கவுள்ளனர்.

இளவாலை வருத்தப்படாத வாலி பர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்த இரத்ததான நிகழ்வு [illegible] கது. (இ-3)

# காசநோய் தினத்தை முன்னிட்டு போஸ்டர், சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக காசநோய் தினத்தை முன் னிட்டு அகில இலங்கை ரீதியாக போஸ் டர், சித்திரப்போட்டிநடைபெறவுள்ளது.

தரம் 9, 10, 11 ஐச் சேர்ந்த மாண வர்கள் தமது ஆக்கங்களை "இனங் கண்டறிய முடியாத காச நோயா ளிகளில் 4 ஆயிரம் பேர் எங்களி டத்திலே இனங்கண்டறிவோம், சிகிச் சையளிப்போம், அனைவருக்கும் ஆரோக்கிய சுகத்தை பெற்றுத் தரு வோம்" என்ற தலைப்பில் எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக பாட சாலை அதிபரின் சிபாரிசுடன் நேர டியாகவோ அல்லது யாழ்ப்பாணம் மார்புநோய் சிகிச்சை நிலையத் திற்கு தபால் மூலமோ அனுப்ப முடி யும்.

மேலதிக விபரங்களை அருகிலு ள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பார்வையிட முடி யும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீ ஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையை புறக்கணித்தன தனியார் பேருந்துக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து சேவையை ஆரம்பிக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்களால் நேற்று காலை சேவை பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, இலங்கை போக்குவரத்து சபை டிப்போவிற்கு அருகாமையில் தனியார் பேருந்துகள் தரித்து நின்று சேவைக்கு புறப்படுவதற்கான நடவடிக்கைகள் இதுவரை நடைபெற்று வந்தன.

எனினும் குறித்த இடத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டு சேவையை தொடர்வதால் தனியார் போக்குவரத்து உரிமையாளர் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கூறி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அனைத்துத் தனியார் பேருந்துகளும் நேற்று காலை வெளியூர் மற்றும் உள்ளூர் சேவைகளை இடைநிறுத்தியதோடு இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளையும் சேவையில் ஈடுபட்வேண்டாம் எனக் கூறி தடுத்து நிறுத்தினர்.




இதன்போது அவ்விடத்திற்கு வருகை தந்த போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர் கிளிநொச்சி பொலிஸ் நிலைய அதிகாரி,கரைச்சி பிரதேச சபை தவிசாளர்,கிளிநொச்சி மாவட்ட செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் தனியார் பேருந்து சங்கதினரையும் இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது அவர்கள் தெரிவிக்கையில்,

தனியார் பேருந்துகள் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தரித்து நிற்கலாம். பின்னர் தமது நேர ஒழுங்கிற்கமைய சேவையை ஆரம்பிப்பதற்கு சற்று முன்னதாக வழமைபோன்று உரிய இடத்திற்கு சென்று தரித்து நின்று தமது சேவையை ஆரம்பிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் ஒருவாரகாலத்தினுள் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், பிரதேசசபையினர், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினர், தனியார் பேருந்து சங்கத்தினர், இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள்,போக்குவரத்து பொலிஸ் பகுதியினர் ஆகியோர் ஒருங்கிணைந்து இதற்கான உரிய ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் தரிப்பிடங்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு சேவையைத் தொடருமாறும் கேட்டுக் கொண்டனர். இதேவேளை வாய்மூலமாகவே இந்த உறுதிமொழிகள் வழங்கப்படுவதாகவும் எழுத்து மூல நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையெனவும் தனியார் பேருந்து உரிமையாளர்களால் இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுமக்களின் நலன் கருதி பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படாமையால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் அங்கு குழுமிநின்ற பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. (அ-2-254-271)




# சிறுமியை நாகபாம்பு தீண்டியது

(கனகபுரம்)

வீட்டில் படித்துக் கொண்டிருந்த சிறுமியை நாகபாம்பு தீண்டியதில் அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வட்டக்கச்சி மாயவனூரில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆ.கலையரசி (வயது-6) என்ற சிறுமியையே பாம்பு தீண்டியது.

இதனை அடுத்து பிரஸ்தாப சிறுமி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.(அ-2-259)

✦ ✦ ✦ ✦ ✦

# கட்டட திறப்புவிழா

(மல்லாவி)

உலக வங்கியின் 150 இலட்சம் ரூபா நிதி அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இருமாடிகளைக் கொண்ட புதிய கட்டடத்தின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தலைமையில் நடைபெறும்.

அலுவலக அறைகள், மாநாட்டு மண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கிய இருமாடிகளைக் கொண்ட கட்டடத்தை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ள வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சர் த.குருகுலராசா திறந்து வைக்கவுள்ளார். இதில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், வடமாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், து.ரவிகரன் ,திருமதி மேரிகமலா குணசீலன்ஆகியோர்கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-15)

✦ ✦ ✦ ✦ ✦

(மல்லாவி)

உலக வங்கியின் 80இலட்சம் ரூபா நிதி அனுசரணையுடன் மு/சண்முகரட்ணம் ஆரம்ப வித்தியாலய மாணவர்களுக்கென அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டட திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் தா.தயாகரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து சிறப்பிப்பதுடன் கட்டடத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்,வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான து.ரவிகரன் ,வைத்திய கலாநிதி எம்.சிவமோகன், திருமதி மேரி கமலா குணசீலன், வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் மரியாம்பிள்ளை அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் உட்பட வலயக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-15)

# விபத்தில் சிறுமி காயம்

(கனகபுரம்)

துவிச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதால் சிறுமியொருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு கிளிநொச்சி விவேகானந்தா நகரில் நடைபெற்றுள்ளது.

இதில் தயாசீலன் கலையரசி (வயது 12) என்ற சிறுமியே படுகாயம் அடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கல்வி நிலையத்திற்கு சென்று விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த நிலையில் இச்சம்பவம் நேர்ந்துள்ளது. (அ-2-259)

# நாட்டில் 2,223 தமிழ் பாடசாலைகள் உள்ளன

## புள்ளிவிபரத்தில் தகவல்

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் இலவசக் கல்வியை மாணவர்களுக்கு போதிப்பதற்காக 9 ஆயிரத்து 905 அரச பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் இவற்றில் 342 தேசிய பாடசாலைகளும் 9 ஆயிரத்து 563 மாகாண பாடசாலைகளும் உள்ளடங்கியுள்ளதாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

6 ஆயிரத்து 826 சிங்கள பாடசாலைகளும் 2 ஆயிரத்து 223 தமிழ் பாடசாலைகளும் 856 முஸ்லிம் பாடசாலைகளுமாக மொத்தம் 9ஆயிரத்து 905 அரச பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

மேற்படி பாடசாலைகளில் 6 ஆயிரத்து 368 பாடசாலைகளில் சிங்கள மொழி மூலம் மட்டும் மாணவர்களுக்கு கல்வி புகட்டப்படுகின்றது.

தமிழ்மொழி மூலம் 2 ஆயிரத்து 914 பாடசாலைகளில் மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகின்றது.

அத்துடன் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் இணைந்த ரீதியில் 39 பாடசாலைகளில் மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகின்றது.

சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் 403 பாடசாலைகள் மாணவர்களுக்கு கல்வி புகட்டுகின்றது.

இதேவேளை தமிழ்,ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இணைந்த நிலையில் 152 பாடசாலைகளும் சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் இணைந்த நிலையில் 29 பாடசாலைகளும் மாணவர்களுக்கு கல்வி புகட்டுகின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக நீண்ட காலமாகச் சேவையாற்றி 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நியமனத்தின் போதும் உள்வாங்கப்படாமல் தற்போது பாடசாலைகளில் சேவையாற்றி வருகின்ற தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி எடிசன் தனியார் கல்வி நிலையத்தில் நடைபெறுமென கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் இ.ஜெயராஜ் அறிவித்துள்ளார்.

எனவே சகல தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் மேற்படி அவசிய அவசர கலந்துரையாடலுக்கு வருகைதரும் போது உண்மையாகவே தாம் பாடசாலையில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றனர் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் சமுகம் தரும்படியும் அவர் கேட்டுள்ளார். (அ-2)

# இன,மதபேதமின்றி அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யுத்தத்தால் பல ஆண்டு காலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக இன, மத அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் சங்கம் ஆகியவற்றுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது உபகரணங்களை வழங்கிய பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் பல பேதங்கள் இருக்கலாம். மக்களுக்கான தேவைகள் நிறைவேற்றும் போது அதனை மறந்து தேவைகளை நிறைவேற்ற முன்வரவேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்றார்.(அ-2)

# உளவள மருத்துவ முகாம்

(மல்லாவி)

அக்ராட் நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் உயிலங்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் உளவள நோயாளர்களுக்கான மருத்துவ சிகிச்சைமுகாம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்னியங்குளம் கிராமத்திலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக உயிலங்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் அ.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

வன்னியில் நடைபெற்ற யுத்தம் காரணமாக உளவளம் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காக இம்மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இதில் கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள்குளம், தென்னிந்தியன் குளம், உயிலங்குளம் ஆகிய கிரா மங்களைச்சேர்ந்த மக்களை பங்கேற்று பயன் பெறுமாறு அவர் கேட்டுள்ளார்.

மருத்துவ முகாமை உளவள மருத்துவர் எஸ்.அருட்ஜோதி, உளவளத் துணையாளர்கள் இணைந்து நடத்தவுள்ளனர். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு நாடுகள் இணைந்து நடத்தும் கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழா

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி நேற்றும் இன்றும் கச்சதீவு புனித அந்தோனியாரின் திருவிழா இலங்கை நெடுந்தீவுப் பங்குத் தந்தையும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய பரிபாலகருமாகிய செபமாலை நேசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி திருவிழாவிற்கான இந்திய அமைப்பாளராக இராமேஸ்வரம் பங்குத் தந்தை சகாயராஜா அடிகளார் பணியாற்றுகின்றார்.

ஆரம்ப காலம் முதல் யாழ் மறை மாவட்ட ஆயரின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்து வந்துள்ள கச்சதீவு புனித அந்தோனியாரின் யாத்திரைத் தலத்தை நெடுந்தீவுப் பங்குத் தந்தையே பராமரித்து வருகிறார். நெடுந்தீவுப் பங்குத் தந்தை நெடுந்தீவு மேய்ப்புப் பணிச் சபையின் உதவியுடன் அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுவருகிறார்.

**இந்திய இலங்கை**
**6 ஆயிரம் யாத்திரிகர்கள்**

நேற்று மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமான மேற்படி கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருவிழா சிலுவைப் பாதை தியானம் - திருப்பலி - நற்கருணை வழிபாடு என்பவற்றோடு நிறைவு பெற்றது.

இன்று காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியை யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருள்கலாநிதி யஸ்ரீன் ஞானப் பிரகாசம் அடிகளார் நிகழ்த்துவார்.

இரு தினங்களிலும் நடைபெறும் திருவிழாவிற்கு இந்தியாவில் இருந்து 4 ஆயிரத்து 320 யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள். இதில் 175 குருக்களும் 100 கன்னியர்களும் அடங்குவர்.

இலங்கையில் இருந்து ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் வரையிலான யாத்திரிகர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் ஏறக்குறைய 25 குருக்கள் அடங்குவர்.

ஆண்டுதோறும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழாவில் பங்கு பற்றும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொணடே வருகின்றது.

அங்கு தங்கியிருக்கும் கடற்படையினர் விசேட போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளை சிறப்பாகச் செய்து கொடுப்பதனால் தவக்கால யாத்திரைக்காகவும் இடத்தைப் பார்வையிடுவதற்காகவும் செல்வோர் தொகை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

கடந்த ஆண்டில் இருந்து பெண்களுக்கான 40 நிரந்தர மலசலகூட வசதிகளும் - ஆண்களுக்கான 40 மலசலகூட வசதிகளும் அமைக்கப் பட்டுள்ளதாகவும் இதனால் ஒவ்வொரு ஆண்டும் கச்சதீவு அந்தோனியார் யாத்திரைத்தல பெருவிழாவிற்கு வருவோர் தொகை அதிகரித்துக்கொண்டே வருவதாகவும் ஆலய பரிபாலகர் எஸ்.நேசநாயகம் அடிகளார் தெரிவிக்கின்றார்.

2014 ஆம் ஆண்டு நெடுந்தீவுப் பங்கைப் பொறுப்பேற்றுக் கொண்ட எஸ்.நேசநாயகம் அடிகளார் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் பரிபாலகராகவும் பணியாற்றுகின்றார். இவர் தலைமையில் நடைபெறும் முதல் திருவிழா இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**வர்த்தமானியில் அறிவிப்பு**

கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பெருவிழாவானது அரசினால் வர்த்தமானியில் அறிவிப்புச் செய்யப்பட்ட ஒரு பெருவிழாவாக அமைகின்றபடியால் ஆண்டு தோறும் யாழ்ப்பாண அரச அதிபரே திருவிழா நடைமுறைக்கான திட்டங்களைக் கவனிக்கின்றார்.

யாழ். அரச அதிபர் ஜே/01 என்கின்ற கிராம சேவகர் பிரிவில் அமைந்திருக்கின்ற மேற்படி கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பெருவிழாவிற்கான ஒழுங்குகளை ஒவ்வொரு ஆண்டும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் மூலம் மேற்கொண்டு வருகிறார்.

வர்த்தமானி அறிவிப்புச் செய்யப்பட்ட இத்திருவிழாவில் அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து பணியாற்றி பங்களிப்புச் செய்து வருவது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

**கச்சதீவிலுள்ள ஒரே ஒரு கட்டடம் அந்தோனியார் ஆலயம்**

நெடுந்தீவுக்கு மேற்கே 11 மைல்களுக்கு அப்பாலும் இந்தியாவிற்கு நெருக்கமாக பாம்பன் - இராமேஸ்வரத்தில் இருந்து வடகிழக்கே பத்து மைலுக்கு அப்பாலும் இலங்கையையும் இந்தியாவையும் ஊடறுத்துச் செல்லும் ஒடுங்கிய பாக்கு நீரிணையின் மையப் பகுதியில் இவ் அழகிய தீவு அமைந்துள்ளது.

இத்தீவின் நீளம் ஒரு மைல் ஆகவும் அகலம் சராரியாக 300 யாராகவும் இருக்கின்றது.

வறண்ட வலயத்திற்குரிய முட்புதர்களும் சிறிய புற்றரைகளும் கடலோர தாவரங்களும் பரந்துள்ள மனித சஞ்சாரமே அற்ற கச்சதீவு என்கின்ற இச்சிறிய அழகிய கிராமத்தில் அழகு பொங்க நிமிர்ந்து நின்று அருள்பாலிக்கும் புனித அந்தோனியார் ஆலயமே இங்கு அமைந்திருக்கின்ற ஒரே ஒரு கட்டடமாகும்.

இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகள் இணைந்து கொண்டாடும் ஒரேயொரு கோலாகலத் திருவிழாவாக அமைகின்ற இத்திருவிழாவிற்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து யாத்திரிகர்கள் வருவது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறான கட்டுப்பாடுகள் இருப்பினும் இந்திய யாத்திரிகர்களே இலங்கை யாத்திரிகர்களைக் காட்டிலும் இரண்டு மடங்காக இங்கு வருகை தருகின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

**மாதாவின் யாத்திரை**

நெடுந்தீவுப் பங்கு ஆலயத்தில் இருந்து கச்சதீவுத் திருவிழாவிற்கான ஆலய மணி - கொடிமரம் - கொடி - சுற்றுப் பிரகாரக்கூடு என்பன கொண்டு செல்லப்படும். அவ்வாறு சுற்றுப்பிரகாரக் கூட்டினை நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு கொண்டுசெல்லும் போது அதனை வெறும் கூடாக கொண்டு செல்லக் கூடாது என்று மாதா சொரூபத்தை கூட்டினுள் வைத்துக் கொண்டுசெல்வது ஒரு வழக்கமாக இருந்து வந்துள்ளது.

அந்த வகையில் நெடுந்தீவு மக்கள் மாதா சொரூபத்தோடு கச்சதீவு சென்றுவரும் இன்னுமொரு யாத்திரையும் இங்கு நடைபெறுகிறது. இது கச்சதீவு யாத்திரையினுள் ஒரு யாத்திரையாக மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாகக் கைவிடப்பட்ட மேற்படி யாத்திரை இவ்வாண்டு திரும்பவும் நெடுந்தீவுப் பங்குத் தந்தை எஸ்.நேசநாயகம் அடிகளாரின் அனுமதியுடன் நடைபெறுவது ஒரு சிறப்பம் ஆகும்.

2001ஆம் ஆண்டு ஏறக்குறைய 12 ஆண்டுகளின் பின்னர் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா சிறப்பாக நடத்தப்பட்டது. நெடுந்தீவைச் சேர்ந்த 100 பேர் இரு வள்ளங்களில் கச்சதீவுக்குச் சென்று விழாக் கொண்டாடினர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னர் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய யாத்திரைத் திருவிழா திரும்பவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

2015 ஆம் ஆண்டு எஸ்.நேசநாயகம் அடிகளார் தலைமையில் மிகவும் சிறப்பாக திருவிழாக் கொண்டாடப்படும் கச்சதீவு அந்தோனியாரின் அருள் இந்திய இலங்கை யாத்திரிகர்கள் மேல் ஏராளமாகப் பொழியப்படவும் ஆசிப்போம்.

**அருள்திரு ரூபன் மரியாம் பிள்ளை**
**ஊடக விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்**

## 03.2015 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1562 - பிரான்சில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புரட்டஸ்தாந்தர்கள் கத்தோலிக்கர்களால் கொல்லப்பட்டதில் பிரான்சில் மதப் போர் ஆரம்பமானது.
- 1565 - ரியோ டி ஜனெய்ரோ நகரம் அமைக்கப்பட்டது.
- 1700 - சுவீடன் தனது புதிய நாட்காட்டியை அறிமுகப் படுத்தியது.
- 1811 - எகிப்திய மன்னன் முகமது அலி கடைசி மாம்லுக் அரச வம்சத்தவரைக் கொன்றான்.
- 1815 - இத்தாலியின் தீவான எல்பா தீவில் நாடு கடத்தப்பட்ட நிலையில் வாழ்ந்த நெப்போலியன் பொனபார்ட் பிரான்ஸ் திரும்பினான்.
- 1873 - முதலாவது பாவனைக்குகந்த முதலாவது தட்டச்சுப் பொறியை ஈ. ரெமிங்டன் சகோதரர்கள் நியூயோர்க்கில் தயாரித்தனர்.
- 1896 - ஹென்றி பெக்கெரல் கதிரியக்கத்தைக் கண்டு பிடித்தார்.
- 1899 - இலங்கையில் குற்றவியல் தண்டனைச் சட்ட விதித் தொகுப்பு நடைமுறைக்கு வந்தது.
- 1912 - முதன் முதலில் பறக்கும் விமானம் ஒன்றிலிருந்து ஆல்பேர்ட் பெரி என்பவர் பாரசூட்டில் இருந்து குதித்தார்.
- 1936 -ஹூவர் அணைக்கட்டு கட்டிமுடிக்கப்பட்டது.
- 1941 -இரண்டாம் உலகப் போர்: பல்கேரியா அச்சு நாடுகள் அணியில் இணைந்தது.
- 1943 -இரண்டாம் உலகப் போர்: பிஸ்மார்க் கடல் போர் ஆரம்பமானது.
- 1949 - டச்சுக்களிடமிருந்து யாக்யகர்த்தாவை இந்தோனேஷியா கைப்பற்றியது.
- 1953 -ஜோசப் ஸ்டாலினுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நான்கு நாட்களின் பின்னர் அவர் இறந்தார்.
- 1954 -ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் மாளிகை மீது புவேர்ட்டோ ரிக்கோ தேசியவாதிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் காயமடைந்தனர்.
- 1966 -சோவியத்தின் வெனேரா 3 விண்கலம் வீனஸ கோளில் மோதியது. வேறொரு கோளில் இறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1973 -சூடானில் சவுதி அரேபியாவின் தூதரகத்தை கறுப்பு செப்டம்பர் இயக்கத்தினர் தாக்கி மூன்று வெளிநாட்டு தூதுவர்களைப் பணயக்கைதிகளாக்கினர்.
- 1975 -ஆஸ்திரேலியாவில் வர்ணத் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1977 - சார்லி சப்ளினின் உடல் சுவிட்சர்லாந்தில் அவரது கல்லறையில் இருந்து திருடப்பட்டது.
- 1980 - சனி கோளின் ஜானுஸ் என்ற சந்திரன் இருப்பதை வோயேஜர் 1 விண்கலம் உறுதி செய்தது.
- 1981 - ஐரியக் குடியரசு இராணுவ உறுப்பினர் பொபி சான்ட்ஸ் வட அயர்லாந்து சிறையில் சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை ஆரம்பித்தார்.
- 1992 - பொசுனியா எர்செகோவினா யூகொஸ்லாவியாவிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 2002 - ஸ்பெயினில் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2006 - ஆங்கில விக்கிப்பீடியாவில் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனை எட்டியது.

**பிறப்புக்கள்**


- 1647 - ஜான் டி பிரிட்டோ, போர்த்துக்கலைச் சேர்ந்த மதப்போதகர் (இ. 1693)
- **1910-எம். கே. தியாகராஜ பாகவதர் தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (இ. 1959)**
- 1910-ஆர்ச்சர் மார்ட்டின், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 2002)
- 1917-கே. பி. சிவானந்தம், வீணை வாத்திய கலைஞர் (இ. 2003)
- 1922-இட்சாக் ரபீன், இஸ்ரேலியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1995)
- 1951 -நிதிஷ் குமார், இந்தியாவின் முன்னாள் அமைச்சர்
- 1953 - மு. க. ஸ்டாலின், தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர்
- 1968 -குஞ்சராணி தேவி, இந்தியப் பளுதூக்கும் வீராங்கனை
- 1973 -கிறிஸ் வெபர், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

- 1911 -ஜேக்கபஸ் ஹொஃப், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1852)
- 1940 -அ. தா. பன்னீர்செல்வம், சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் (பி. 1888)
- 1995 -ஜோர்ஜஸ் கோஹ்லர், ஜேர்மானிய உயிரியலாளர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1946)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.கே.தியாகராஜ பாகவதர்



எம். கே. டி என அழைக்கப்படும் எம். கே. தியாகராஜ பாகவதர் இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள மாயவரத்தில் (தற்பொழுது மயிலாடுதுறை), விசுவகர்மா பொற்கொல்லர் குடும்பத்தில் 1910 மார்ச் மாதம் 1 ஆம் திகதி கிருஷ்ணமூர்த்தி - மாணிக்கத்தம்மாள் தம்பதியின் மகனாக பிறந்தார்.

சிறுவன் தியாகராஜனுக்குப் பள்ளிப்படிப்பில் நாட்டம் செல்லவில்லை. யார் பாடினாலும், இசைக் கச்சேரி எங்கு நடைபெற்றாலும் தியாகராஜன் அங்கே செல்வது மட்டுமல்ல, மறுபடியும் அந்தப் பாடல் களை ஒழுங்காகக் கேட்போர் வியக்கும் வகையில் பாடிக்காட்டுவாராம்.

இவர் தமிழ்த் திரைப்படத்துறையின் முதல் நட்சத்திர அந்தஸ்து பெற்ற உயர் நட்சத்திர கதாநாயகன் மற்றும் மிகச் சிறந்த கர்நாடக சங்கீத தமிழ் பாடகரும் ஆவார்.

1934 ஆம் ஆண்டு பவளக்கொடி என்கிற திரைப்படத்தில் கதாநாயகனாக அறிமுகமான இவர் சுமார் 15 தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ளார். அதில் 6 படங்கள் மிகப்பெரிய வெற்றிப்படங்களாகும். 1944 இல் வெளி யிடப்பட்ட இவரின் சாதனைப் படமான ஹரிதாஸ் 3 ஆண்டுகள் ஒரே திரையரங்கில் (சென்னை பிராட்வே திரையரங்கு) ஓடி 3 தீபாவளிகளைக் கண்ட ஒரே இந்தியத் திரைப்படம் என்ற சாதனையை அன்றைய காலகட்டத்தில் பெற்றது.

சென்னையில் (அன்றைய மதராஸ்) மிகப் பரபரப்பாகப் பேசப்பட்ட லட்சுமி காந்தன் கொலை வழக்கில் பாகவதர் மற்றும் அவரின் திரையுலக உற்ற தோழரான என். எஸ். கிருஷ்ணன் உடன் கைது செய்யப்பட்டு 4 ஆண்டு கள் சிறைத் தண்டனை பெற்றார். தண்டனைக் காலத்திலேயே இவரின் வழக்கு மறுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 1948 இல் இருவரும் குற்றமற்றவர்கள் என இரண்டு ஆண்டு சிறைக்குப்பின் விடுவிக்கப் பட்டனர். இருப்பினும் சிறை விடுதலைக்குப்பின் அவர் நடித்த திரைப் படங்கள் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. அதில் நொடிந்துபோன பாகவதர் அதன்பின் திரைப்படங்களில் நடிக்க மனமில்லாமல் இருந்து வந்தார். நவம்பர் 1, 1959 இல் ஈரல் நோயினால் பாதிக்கப்பட்டு இளவயதி லேயே மரணமடைந்தார்.


தமிழ்த் திரையுலகில் அவரைப்போல வாழ்ந்தவருமில்லை, அவரைப போல வீழ்ந்தவருமில்லை என்ற கருத்து அவருடைய ஆத்ம ரசிகர் களிடையேயும், திரையுலகிலும் நிலவுவது உண்டு.

# நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் அரசு மக்களை ஏமாற்றி வருகிறது

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் இந்த அரசாங்கம் மக்களை ஏமாற்றி வருவதாக லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்வதாக வாக்குறுதி அளித்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த அரசாங்கம் அதனை நீக்காமல் ஒரு சில அதிகாரங்களை மட்டும் நீக்கத் தீர்மானித்துள்ளது எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் நடவடிக்கையானது மக்களை ஏமாற்றும் செயலாகவே கருதப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தை ஏப்ரல் மாதம் 23ம் திகதி கலைக்காமல் பதவிக் காலம் நிறைவடையும் வரையில் காத்திருக்குமாறு கோருகின்றோம்.

அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு பூரண ஆதரவளிக்கத் தயார். தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி அரசாங்கம் பேசி வரு கின்றது. போர் போன்ற சந்தர்ப்பங்களில் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட முடியும்.

தற்போது நாட்டில் அவ்வாறான நிலைமைகள் எதுவும் கிடையாது. தேசிய அரசாங்கத்தில் எதிர்க்கட்சிகள் இருக்காது. நாம் எதிர்க்கட்சியாக இருக்கின்றோம்.

எனவே தேசிய அரசாங்கம் என்பதனை விடவும் சர்வகட்சி அரசாங்கமொன்றை வேண்டுமானால் இந்த அரசாங்கம் அமைத்து ஆட்சி நடத்த முடியும்.

அரசாங்கம் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியொன்றை அமைக்கவே முயற்சித்து வருகின்றது.

47 அமைச்சர்களில் 41 பேர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள்ரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## உருவபொம்மைகள் எரிப்புக்கு கனேடியத் தமிழர் கண்டனம்!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் உருவப்பொம்மைகள் எரிக்கப்பட்டமைக்கு கனேடிய தமிழர் பேரவை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து கனேடிய தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில்,

இவ்வாறான நடவடிக்கைகள் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைமைகளை மலினப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான அபிலாசைகளை மௌனிக்கச் செய்யும் முயற்சியாகவே இதனை நோக்க வேண்டும்.

இந்த தமிழ் தலைவர்களின் ஆலோசனைக்கு அமையவே, கடந்த ஜனாதிபதித்தேர்தலில் மக்கள் மாற்றத்திற்காக வாக்களித்தனர்.

இன சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே சம்பந்தனும், சுமந்திரனும் செயற்பட்டு வருகின்றனர். ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தலைமைகள் சுயாதீனமான முறையில் செயற்படுவதற்கு தேவையான அவகாசம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு பூரண ஆதரவை கனேடிய தமிழர் பேரவை வழங்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## கண்பரிசோதனை இன்று

(நல்லூர்)

கைதடி லயன்ஸ் கழகத்தினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் கைதடி லயன்ஸ் கழகத் தலைவர் து.மகேந்திரன் தலைமையில் கண் பரிசோதனை செய்து இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இப் பரிசோதனை முகாமில் கைதடி பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச கண்ணாடியைப் பெற்றுக் கொள்ளுமாறு கைதடி லயன்ஸ் கழகத்தினர் கேட்டுள்ளனர். (இ-3-134)

## சீனாவின் முதலீடுகளுக்கு இலங்.பாதுகாப்பான பூமி

சீனாவின் முதலீடுகளுக்காக இலங்கையின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் எனவும் சீனாவின் முதலீடுகளுக்கு பாதுகாப்பான பூமியாக இலங்கை திகழும் எனவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பீஜிங் நகரில், சீன பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் போதே இதனை தெரிவித்தார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர,

துறைமுக நகரம் தொடர்பான விடயத்தை சீன அதிகாரிகளுடன் தான் நேரடியாக பேசவில்லை எனவும் சீனாவின் திட்டங்கள் குறித்து மாத்திரமே இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை, சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர், சீனாவின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்காது. சீனாவின் முதலீடுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் முன்னர், இலங்கை, சீனாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும்.

சகல முதலீட்டாளர்களுக்கு பொதுவான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்தவே இலங்கை முயற்சித்து வருகிறது.

சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் திறந்த மனப்பான்மையின் அடிப்படையிலான முதலீடுகளை ஊக்குவிப்பதே இலங்கையின் திட்டமாகும் எனவும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த ஊடக சந்திப்பில் பேசிய சீன வெளிவிவகார அமைச்சர் வேங், இலங்கையின் சிறந்த பங்காளி என்ற மட்டத்தில் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதே சீனாவின் விருப்பம் எனக் கூறியுள்ளார்.

இலங்கையின் நம்பிக்கையான முதலீட்டு உதவியாளன் என்ற மட்டத்தில் தொடர்ந்தும் செயற்பட சீனா விரும்புகிறது.

அதேபோல், இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக சீனா தொடர்ந்தும் உச்சளவிலான உதவிகளை வழங்கும் எனவும் சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம்மாதம் சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் சீன விஜயம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### அதிகாலை ஆலோசனை

"என்னம்மா இது... அதிகாலை நேரத்தில் வைத்திய சாலையை தேடி வந்திருக்கிறாய்?..."

"ஒரு முக்கியமான சந்தேகத்தை உங்களிடம் கேட்க வேண்டும் என்று வந்திருக்கிறேன் டாக்டர்"

"என்ன சந்தேகம்!"

"தூக்கத்தில் சில பேர் உளறுகிறார்களே அது ஏன் டாக்டர்?"

" இதற்காகவா இவ்வளவு அவசரமாக வந்தாய்?..."

" ஆமாம் டாக்டர்!"

" ஆழ் மனதில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆசைகள்... அனுபவங்கள்... எண்ணங்கள்... ஆவேச உணர்ச்சிகள்... இவற்றின் வெளிப்பாடு தான் தூக்கத்தில் உளறுவது!"

"கனவு காண்பதற்கும் உளறுவதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா டாக்டர்!"

பெரும்பாலும் தூக்கத்தில் காணும் கனவுக்கும் அப்பொழுது அவர்கள் உளறுவதற்கும் தொடர்பு உண்டு! கனவில் தோன்றும் உணர்வுகளுக்கு ஏற்றாற் போல் அசைவு கொடுப்பது... சில வார்த்தைகள் பேசுவது... போன்றவை கூட அந்தச் சமயத்தில் நடக்கலாம்!

உதாரணமாக ஒருவர் குதிரையில் சவாரி செய்வது போல் கனவு காண்கிறார் என்றால் தூக்கத்திலும் அவரின் உடம்பு அதற்கு தகுந்தாற் போல் அசையலாம். அது சம்பந்தமான வார்த்தைகள் வரலாம்!

அது சரி... நீ ஏன் இதையெல்லாம் விபரமாக கேட்கிறாய்?"

"என் வீட்டுக்காரர் தூக்கத்தில் உளறுகிறார். ஏதேதோ பெயர்கள் எல்லாம் சொல்கிறார்..."

"அவரை அழைத்துக் கொண்டு வாம்மா... அதையெல்லாம் நிறுத்தி விடலாம்."

"நிறுத்த வேண்டாம் டாக்டர் .... நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்..."

"என்ன செய்ய வேண்டும் சொல்!"

"அவர் உளறுகிற பெயரெல்லாம் என்ன என்று எனக்குத் தெளிவாகக் கேட்கிறது மாதிரி செய்தால் போதும் மற்றதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.!"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைப்படைத் தாக்குதலில் 34 பேர் உடல் சிதறிப்பலியாகினர்

## 20 பேர் படுகாயம்

**நைஜீரியாவில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் பொதுமக்கள் 34 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ள அதே வேளை 20 இற்கும் மேறபட் டோர்படுகாயம் அடைந்துள்ளனர்.**

நைஜீரியாவில் அரசுக்கும், போகோஹராம் தீவிர வாதிகளுக்கும் இடையே நாளுக்குநாள் சண்டை வலுத்து வருகிறது.

பொது மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளை குறி வைத்து தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பாடசாலை மாணவிகளை கடத்தி செல்லும் செயலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இதுவரை ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். பலர் வீடுகளை இழந்துள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 34 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஜோஸ் நகரில் நேற்று முன்தினம் வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் குண்டு வெடித்தது.

இதில், 15 பேர் அதே இடத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். நேற்று முன்தினம் வடகிழக்கு நைஜீரியாவிலுள்ள பியூ பகுதியில் நடந்த தற கொலை படைத்தாக்குதலில் 19 பேர் பலியாகினர். 17 பேர் படுகாயம் அடைநதனர்.

நைஜீரியாவின் வட கிழக்கு பகுதியில் போகோஹராம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்களை ஒடுக்க அந்நாட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தீவிரவாதிகள் கைப்பற்றிய பகுதிகளை மீக அந்நாட்டு இராணுவம் தீவிர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

நைஜீரிய ஜனாதிபதி குட்லக் ஜொனாதன், சண்டை நடைபெறும் பகுதிகளுக்கு சென்று இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். நைஜீரியாவில் மார்ச் 28 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். இதை முறியடிக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி வரும் தீவிரவாதிகளின் செயலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (இ-5)




இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் பன்றிக்காய்ச்சலினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக விழிப்பூட்டும் பொருட்டு நர்மதா ஆற்றின் அருகே உருவாக்கப்பட்டுள்ள மணற்சிற்பத்தை படத்தில் காணலாம்.

# மனிதர்கள் சத்தமாக பேசினால் மூளை வேலை செய்யாதாம்!

மனித மூளையில் 'புரோகா' என்ற ஒரு பகுதி, பேசுவதை கட்டுப்படுத்தும் மையமாக செயற்பட்டு வருகிறது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த கருத்துத்தான் நிலவி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் மேரிலாண்டிலுள்ள கலிபோர்னியாவில் உள்ள பெர்க்லி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மனிதர்கள் சத்தமாக பேசும்போது, மூளையின் குறிப்பிட்ட பகுதி இயங்காமல் போய் விடும் என்று கூறியுள்ள அவர்கள், அதற்கான அறிக்கை ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளனர். (இ-5)

# இலங்கைப் படையின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது- ஜி.கே.வாசன்

தமிழக மீனவர்களை சிறைபிடிக்கும் இலங்கை கடற்படையினரின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காரைக்கால், நாகபட்டினம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த 26 ஆம் திகதி கோடியக்கரை பகுதியில் இலங்கை மீனவர்களினால் கைது செய்யப்பட்டமையையடுத்தே அவர் இந்த கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும், படகுகள் சேதப்படுத்தப்படுவதும், சிறைப்பிடிக்கப்படுவதும் வழமையாகிவிட்டது.

இலங்கையின் முனனாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நடந்ததை போன்றே தற்போதைய புதிய அரசாங்கமும் மேற்கொண்டு வருகின்றது என அவர் குற்றஞ்சுமத்தியுள்ளதுடன், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என எண்ணியிருந்த போதிலும், அது தொடர்பில் இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது இரு நாட்டு மீனவர்களினதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இருநாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தெரிவித்தார்.

எனினும் குறித்த பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், தமிழக மீனவர்களின் பிரச்சினை தொடர ஆரம்பித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் அதிகளவான மீனவர்கள் கைது செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தை காலதாமதமின்றி உடனடியாக நடக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை தமிழக மாநில அரசும், மத்திய அரசும் காலம் தாழ்த்தாமல் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்வதற்கும், மீனவர்கள் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு ஏற்படவும், இப்பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சட்டவிரோதமான முறையில் மலேசியாவுக்கு இறால் கொண்டு செல்ல முற்பட்ட நபர் கைது

இலங்கையிலிருந்து மலேசியாவிற்கு சட்டவிரோதமான முறையில் இறால் கொண்டு செல்ல முற்பட்ட நபரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 16 இலட்சத்து 95 ஆயிரத்து 790 ரூபா பெறுமதியான இறாலினை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். விமான நிலைய சுங்க அதிகாரிகள் சம்பவம் தொடர்பில மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தமிழக மீனவர் மீதான தாக்குதலைத் தடுக்க பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்கவேண்டும்

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்க பிரதமர் மோடி நிரந்தர தீர்வு காண வேண்டும் என கொங்கு நாடு ஜனநாயக கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் நிறுவனத் தலைவர் நாகராஜ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வங்கக்கடலில் மீன்பிடித்த நாகை மற்றும் காரைக்காலைச் சேர்ந்த 66 மீனவர்களை சிங்கள கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இது கடுமையாக கண்டிக்கத்தக்கது. காங்கிரஸ் ஆட்சியைப் போலவே பாரதிய ஜனதாவின் ஆட்சியிலும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் என்பது தொடர்கதையாகவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இது குறித்து இறுதியான, உறுதியான நடவடிக்கை எடுப்பது அவசியம்.

இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்து இதுபோன்ற தாக்குதல் தொடர்ந்தால் இந்தியா பொறுத்துக் கொள்ளாது என்ற தாக்கத்தை இலங்கை அரசிடம் ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். (இ-5)

## துயர் பகிர்கின்றோம்

காரைநகர் புதுரோட் (சிவன் கோவில் வீதி)
கிழவன்காடு ஸ்ரீ கந்தசாமி
கோவில் பரம்பரை ஆதீனகர்த்தா,

### அமரா சிவஸ்ரீ ச.ப.ஆறுமுகக் குருக்கள்



அன்பின் உருவாய் தோன்றி
ஆளுமையுடன் எம்மை
வழிநடத்தி
இன்பமாய் எம்முடன்
பழகி ஈகையின்
இலக்கணமாய்
உழைப்பின் உத்தமராய்
ஊருக்கே பெருமை சேர்த்து
எடுத்த முயற்சி
குறைவடையாமல்
ஏற்றமுடன் எம்முடன்
செயற்பட்டு
ஐயமின்றி அனைவரையும்
அணைத்து
ஒற்றுமையே உயர்வென
எமக்குணர்த்தி
ஓங்காரமாய் எமக்கு துணையாய்
நின்று ஔடதமாய் இருந்த நீங்கள்
எமைவிட்டு ஏன்தான்
பிரிந்தனையோ கிழவன் காட்டு
முருகன் உமை அழைத்தானோ

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு நின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கிழவன் காட்டு முருகனையும் ஈழத்து சிதம்பரத்து சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமானையும் இறைஞ்சுகின்றோம்.

பிரிவினால் துயருறும் காரைநகர் புதுறோட்டு கிழவன் காடு கந்தசாமி கோவில் அயலவர்களும் அடியார்களும். (சி-185)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்த- அபோட் உறவின் மர்மம் அம்பலம்!



...இலங்கையிலிருந்து நேரடியாக படகுகளில் அகதிகள் புறப்பட்டு வரத் தொடங்கிய போது, அவுஸ்திரேலியா திணறிப்போனது.

இந்தளவுக்கும், இலங்கை வலிமையானதொரு கடற்படையை கொண்டிருக்கும் நாடு என்பதை அவுஸ்திரேலியா நன்கறியும்.

வலிமையான கடற்புலிகளையே தோற்கடித்த இலங்கை கடற்படையின் பாதுகாப்பு வேலியைக் கடந்து அகதிகள் படகுகள் எவ்வாறு வெளியேறுகின்றன என்று ஆராயத் தொடங்கியது அந்த நாடு. அகதிகள் படகுகள், தென்பகுதி கரையோரங்களிலிருந்தே பெரும்பாலும் புறப்படுவதையும் தமிழர்கள் மட்டுமன்றி, சிங்களவர்கள்கூட அவற்றில் வருவதையும் அவுஸ்தரேலியா அவதானித்தது. பெருமபாலான படகுகளை, சிங்களவர்களாக படகோட்டிகளே ஓட்டி வந்திருந்தனர். இதையும் அவுஸதரேலியா கவனத்திற்கொண்டு, அகதிகளாக வந்தவர்களிடம் துருவித்துருவி விசாரித்தது.

அப்போது பல அதிர்ச்சியான தகவல்கள் கிடைத்தன. அகதிகள் படகுகள் அவுஸ்திரேலியாவுக்கு திட்டமிட்டே அனுப்பப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை தோற்றுவித்திருந்தது அந்த விசாரணை.

இலங்கை கடற்படையினரின் உதவியுடனேயே பல படகுகள், அவுஸ்திரேலியாவுக்கு வந்திருந்தன என்று தெரிய வந்தது. கடற்படை அதிகாரிகள் சிலரே அகதிகள் படகுகளை ஒழுங்கமைத்து அனுப்பியதாகவும் தெரிய வந்தது. அரசாங்க உயர்மட்டத்தில், இதற்கு முழு ஒத்துழைப்பு இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

கரையிலிருந்து புறப்படும் அகதிகள் படகுகள், கடற்படை படகுகளின் பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டு சர்வதேச கடற்பரப்பில் விடப்பட்டமையும் தெரியவந்தது. இலங்கை அரசாங்கத்திடம் அது குறித்து விசாரித்தும் எந்தப் பயனும் கிட்டவில்லை. அவுஸ்திரேலியாவில் வந்து குவிந்து கொண்டிருந்த இலங்கை அகதிகளின் எண்ணிக்கை, அந்த நாட்டு அதிகாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலை நீடித்தால், அகதிகளை கட்டுப்படுத்த தவறினால், தலைக்கு மேல் வெள்ளம் போய்விடும் என்று அந்த நாட்டு அரசாங்கம் உணர்ந்தது.

அவுஸ்திரேலியாவில் வந்து குவியத் தொடங்கிய அகதிகளால், அந்த நாட்டு அரசாங்கத்துக்கு உள்நாட்டில் நெருக்கடிகள் அதிகரித்தன. அதனால், கடல் கடந்த முகாம்களை அமைத்தும் விசாரணையை பிற்போட்டும் அகதிகளுக்கு நிரந்தர வதிவிட உரிமை கொடுக்காமலும் இழுத்தடித்துப் பார்த்தது. எதுவுமே பலனளிக்கவில்லை.

அகன்று பரந்து கிடந்த இந்திய பெருங்கடல் முழுவதையும் கண்காணிக்க முடியாமல் திணறிய அவுஸ்திரேலியாவுக்கு, இலங்கை அரசாங்கத்துடன் இணங்கிப் போவது ஒன்றே ஒரே வழியாக இருந்தது. முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டபாய ராஜபக்சவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில், அகதிகள் படகுகளை கட்டுப்படுத்த இணக்கம் ஏற்படுத்தப்பட்டது. அதற்காக அவுஸ்திரேலியா, சர்வதேச அரங்கில் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்பட வேண்டும் என்ற உறுதிமொழி கொடுத்தது. அதுமட்டுமன்றி, இலங்கை கடற்படையை பலப்படுத்துவதற்கு மூன்று ரோந்துப்படகுகளை வழங்கவும் முன்வந்தது அவுஸ்திரேலியா.

இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச அரங்கில் ஆதரவளிப்பதாக கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே, இலங்கையல் நடந்த எதையுமே கண்டுகொள்ளாமல் கண்மூடித்தனமாக ஆதரித்தது அவுஸ்திரேலியா. அவுஸ்திரேலியாவுக்கு அலை அலையாக அகதிகள் படகுகளை அனுப்பியதன் மூலம் முன்னைய அரசாங்கம் அல்லது அதற்கு நெருக்கமாக இருந்தவர்களால் பல அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முடிந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், சரணடைந்த போராளிகளை புனர்வாழ்வு அளித்து விடுவித்திருந்தாலும், அவர்களின் மீது முன்னைய அரசாங்கத்துக்கு நம்பிக்கையிருக்கவில்லை. அதனால், அவர்களை பின்தொடர்வதற்கு ஏராளமான புலனாய்வாளர்களை அமர்த்தியிருந்தது. அகதிகளை வெளிச் செல்ல திறந்துவிட்டதால், கணிசமான முன்னாள் போராளிகள் நாட்டை விட்டு வெளியேறினார். அதன்மூலம், முன்னாள் போராளிகள் மீண்டும் ஆயுதப்போராட்டத்தில் இறங்கும் வாய்ப்புகள் அருகிப் போயின.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களின் எண்ணிக்கை ஏதோவொரு வகையில் குறைந்து போவதையும் அப்போதைய அரசாங்கம் தமக்கு சார்பான விளைவாகவே பார்த்தது. பெருந்தொகை அகதிகள் படகுகளை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் கணிசமான வருமானத்தை உயர்மட்டத்தில் இருந்தவர்கள் சம்பாதித்துக் கொண்டனர்.

அவுஸ்திரேலியாவுடன் பேரம் பேசி, அதனை இலங்கையின் தாளத்துக்கு ஆடும் நிலைக்கு கொண்டுவர முடிந்தது.

மேற்குலக அணியிலிருந்து ஒரு நாட்டை பிரித்தெடுத்து, தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதில், முக்கியமான வெற்றி ஈட்டியது இலங்கையின் முன்னைய அரசாங்கம். இலங்கை அரசாங்கம், சர்வதேச அரங்கில், சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளை தன்பக்கத்தில் வைத்திருந்ததை விட, அவுஸ்திரேலியாவை தன்பக்கம் திருப்பிக் கொண்டதே மிகப்பெரிய இராஜதந்திர வெற்றியாக கருதலாம். இப்படி இந்த அகதிகள் படகு விவகாரத்தை வைத்து, அவுஸ்திரேலியா மூலம் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பல அனுகூலங்களை பெற்றிருந்தது.

தன்னை வைத்து சர்வதேச அரங்கில் இலங்கை தப்பிக்கொள்கிறது என்பதை அவுஸ்திரேலியா அறிந்திருந்தாலும், அதற்கு தனது பிரச்சினை மட்டுமே முக்கியமானதாக இருந்தது.

தமிழர்கள் அவலப்பட்டதையோ, பிணங்களின் மீது ஏறி நின்று இலங்கை அரசு ஆட்சி செய்ததையோ அவுஸ்திரேலியா கண்டு கொள்ளவில்லை.

அகதிகள் படகுகளை கட்டுப்படுத்திய இலங்கை அரசுடன் தோளில் கை போட்டு நடக்கத் தயாராக இருந்தது அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியாவின் அந்த பலவீனமே, மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தையும் ரோனி அபோட் அரசாங்கத்தையும் நெருக்கமாக வைத்திருந்தது.

இந்த நெருக்கம் குறித்து இலங்கையர்கள் சந்தேகம் கொண்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

அவுஸ்திரேலியாவின் பிரதமர்களிலேயே அகதிகள் விவகாரத்தை மோசமாக கையாண்டவரான ரொனி அபோட், மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் கைகோர்த்தமையின் மூலம், தனது நாட்டுக்கு நல்லதை செய்திருக்கலாம்.

ஆனால், சர்வதேச அரங்கல், இலங்கையின் முன்னைய அரசுடன் கைகோர்த்துக் கொணடமையின் மூலம் தனது கைகளிலும் இரத்தக் கறையை பூசிக் கொண்டது. இதனாலேயே, பிரதமர் ரணில் வக்ரமசிங்க, அவுஸ்திரேலயா தனது கடந்தகால தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

**கே.சஞ்சயன்** (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிகேடியர் கெப்பட்டிவலான பணி நீக்கம்

(கொழும்பு)

ஜனநாயக கட்சியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பரிந்துரைக்கு அமைய, பிரிகேடியர் கெப்பட்டிவலான அண்மையில் மீண்டும் இராணுவத்தில் இணைத்து கொள்ளப்பட்டார்.

இதனையடுத்து அவர் இராணுவ தலைமையகத்தின் நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கொலை, ஆட்கடத்தல் மற்றும் காணாமற் போகச் செய்தமை தொடர்பாக விசாரணை நடத்த அரசாங்கம் விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்த சம்பவங்கள் நடைபெற்ற காலத்தில் கெப்பட்டிவலான கொழும்புக்கு பொறுப்பான அதிகாரியாக கடமையாற்றினார் என்பது தெரிய வந்ததை அடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

விசாரணைகளுக்கு தடையேற்படுத்தலாம் என்ற காரணத்தினால் தான் இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்க கொலை தொடர்பாகவும் கெப்பட்டிவலானவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

கெப்பட்டிவலான பதவி நீக்கப்பட்டமையை அடுத்து பிரிகேடியர் ஜெயந்த குணரட்ன இராணுவத் தலைமையகத்தின் பிரிகேடியராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகும் மீனவர்கள் கைது தொடர்வதா?

## தமிழக முதல்வர் ஓ.பி.கேள்வி

(டில்லி)

**இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகும், தமிழக மீனவர்களின் கைது தொடர்வதா எனக் கேள்வி எழுப்பியுள்ள தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு,

தமிழகத்தைச் சேர்ந்த 86 மீனவர்களையும், அவர்களின் மூன்று படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகும், இது போன்ற கைது சம்பவங்கள் ஏற்படுவது வருத்தம் அளிக்கிறது.

தமிழக மீனவர்களின் நலன்களையும், அவர்களுக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொடர்ச்சியான நடவடிக்கைகள்ளை எடுத்து வந்தது குறிப்பிடத்தக்கது. கச்சதீவு பகுதியில் அந்தோனியார் கோயில் திருவிழா நடைபெறவுள்ள நிலையில், இதுபோன்ற கைது சம்பவம் நிகழ்ந்திருப்பது அந்த விழாவுக்கான கொண்டாட்ட சூழலையே முற்றிலும் சிதைப்பதாக உள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எடுத்த நடவடிக்கைகளால், இலங்கை வசம் நீண்ட நாட்களாக இருந்த 81 தமிழக மீனவர்களின் படகுகள் விரைவில் விடுவிக்கப்படும் நிகழ்வை தமிழக மீனவர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர். இப்படிப்பட்ட நிலையில், மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்திலுள்ள 10 இலட்சம் மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்துக்கான ஒரே மூலமாக கடலையே நம்பி இருக்கின்றனர். மீன்பிடித் தொழிலால் கடலின் சுற்றுச் சூழலியல் அதிகம் பாதிக்கப்படாமல் இருக்க இரண்டு அம்சத் திட்டத்தை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா முன்வைத்தார். முதல் திட்டமாக, ரூ. ஆயிரத்து 520 கோடியை ஒதுக்கி, அதில், ஒவ்வொரு ஆண்டும் ரூ.10 கோடியில் மீனவர்களின் மீன்பிடி பகுதியை ஆழப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதாகும்.

இரண்டாவது திட்டம், தமிழர்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதியான கச்சதீவை, கடந்த 1974-1976 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் மூலமாக இலங்கைக்குத் தாரைவார்த்த கச்சதீவை மீட்பதாகும். கச்சதீவை மீட்பது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்குடன் தமிழக அரசும் தன்னை இணைத்துக்கொண்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், இலங்கைக் கடற்படையினரால் பிடித்துச் செலலப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள 86 தமிழக மீனவர்களையும், அவர்களது 3 படகுகளையும் விடுவிக்க இந்திய அரசின் வெளியுறவுத் துறைக்கு உரிய அறிவுறுத்தலை வழங்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# நாட்டிலுள்ள சூதாட்ட மையங்களை உடன் தடுத்துநிறுத்தக் கோரிக்கை

நாட்டில் சூதாட்டம் இடம்பெறும் வணிக நிறுவனம் தொடர்பில் உடனடி தீர்வொன்றினை மேற்கொள்ள வேண்டும் என சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல்கந்தே சுதத் தேரர் தெரிவித்துள்ளார்.

ரேஸ் பை ரேஸ் சூதாட்டம் தற்போதைய நிலையில் பரவலாக பேசப்படுவதுடன், மக்கள் மத்தியில் ஒரு சமூக பிரச்சினையாக மாறிக் கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சில பிரதேசங்களில் இதற்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த ரேஸ் பை ரேஸ் சூதாட்ட நிறுவனங்கள், மக்களின் ஆர்ப்பாட்டத்திற்கு பின் உடனடியாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து கம்பஹா மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் ரேஸ் பை ரேஸ் சூதாட்ட நிறுவனத்தை உடனடியாக மூடும்படி, அம்மாவட்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டமொன்றினை நேற்று மேற்கொண்டிருந்தனர்..(இ-5)

# முதுகெலும்பில்லாத அரசியல்வாதிகள்

## மகிந்தவின் ஆதரவாளர்கள் குறித்து அநுர எம்.பி

முதுகெலும்பில்லாத அரசியல்வாதிகள் சிலருக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதற்கு அவசியமிருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் குருநாகலையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீண்டும் ஒருமுறை ராஜபக்ஷவின் கூட்டத்திற்கு நாட்டை ஒப்படைத்தால் முழு நாடும் நாசமடைந்துவிடும். அரசியலில் முதுகெலும்பில்லாத சிலர் மகிந்த ராஜபக்ஷவை அரசியலுக்கு கொண்டு வருவதன் மூலம் தேசியவாதத்தினை தூண்டுவதற்கு முயற்சிக்கின்றனர்.

மேலும் தங்களது அரசியல் வாழ்க்கையை பாதுகாப்பதற்காக இவ்வாறு தேசியவாதத்தை தூண்ட முயற்சிக்கிறார்கள் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 110 | 120 |
| தக்காளி | 50 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 |
| கோவா | 60 | 80 | 90 | 80 |
| கரட் | 200 | 100 | 150 | 160 |
| பூசணி | 100 | 100 | 60 | 120 |
| புடோல் | 50 | 80 | 50 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 110 | 120 |
| லீக்ஸ் | 200 | 150 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 600 | — | 320 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 100 | 50 | — |
| கீரை - 1 பிடி | 100 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-70 | 50 | 50-55 | 40-60 |
| இராசவள்ளி | 100 | 150 | — | 120 |
| வெங்காயப்பூ | 40-90 | 140 | — | 140 |

# பிரிவுத்துயர் பகிர்வு



### சின்னத்தம்பு மகாலிங்கம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் இல. 25, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு மகாலிங்கம் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை லண்டனில் உள்ள ஸ்ரெகம் மயான நிலையத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### பொன்னையா சுப்பிரமணியம்

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுப்பிரமணியம் கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப.11 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி.கணேசலிங்கம் ஜெயமலர்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.26, பாலிநகர் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசலிங்கம் ஜெயமலர் கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 10 மணியளவில் பாலிநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சந்திரவதனி செல்வரத்தினம்

மீசாலை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரவதனி செல்வரத்தினம் கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இராசையா அன்னரெத்தினம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா அன்னரெத்தினம் கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் 89/3 நாயன்மார் வீதி,நல்லூர் என்ற முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மணி இந்து மயபனத்தில் தகனம் செய்யப்படும்.



### இரத்தினம் குமாரதாசன்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் குமாரதாசன் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் ஒரு மணியளவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் இரண்டு பட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மீனவர் பிரச்சினைக்கு முடிவும் விடிவும் தேவை

இலங்கைக் கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் அடிக்கடி அத்துமீறுகின்ற செயற்பாடு மிகுந்த கவலையைத் தருகிறது. இந்தக் கவலை, எங்களின் கடல் வளத்தை தமிழக மீனவர்கள் எடுத்துச் செல்கிறார்கள் என்பதால் ஏற்படுவதல்ல. மாறாக கடல் எல்லையை மீறுகின்ற செயற்பாட்டால் தமிழகத்து மீனவர்களும் இலங்கைத் தமிழ் மீனவர்களும் முரண்படும் சந்தர்ப்பம் உருவாகி விடுமோ என்ற பயமே கவலைக்குக் காரணமாகும்.

இன்றைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களும் இந்திய தமிழ் மக்களும் தங்களின் உறவுகளையும் ஒற்றுமையையும் பலப்படுத்த வேண்டும்.

தமிழர்களின் பலமே தமிழினத்தின் உரிமைக்கும் வாழ்வுக்கும் வழி வகுக்கும். இலங்கையில் தமிழ் மக்கள் வதைபட்ட போதெல்லாம் தமிழக மக்கள் கொதித்தனர். தமிழகம் பொங்கி எழுந்தது. தமிழ்ச் சகோதரர்கள் தங்கள் உடலை எரியூட்டி, இதோ! ஈழத்தமிழினத்தின் பரிதவிப்புக் கண்டு; தாளாமல் எம் உடலில் எண்ணெய் ஊற்றி எரிதணலாய் வெந்து எங்கள் உள்ளக் கொதிப்பை நெருப்பாய்க் காட்டுகிறோம். சிங்கள ஆட்சியாளர்களே! எங்கள் தாய்ப்பாசத்தை-நேசத்தை- சகோதர உறவுகளின் வலிமையை நீ உணர்வாயா? என்று வினா எழுப்புவது போல அந்தத் தியாகம் அமைந்திருந்தது.

இத்தகையதொரு தியாகத்தை வேறெந்த இனத்தில்-சனத்தில் காணமுடியும்?

நம் தமிழ் இனத்தில் மட்டுமே தன்னை வதைத்து-தன்னை அழித்து தான் பிறந்த தமிழ் இனத்தை காப்பாற்றும் தியாக உணர்வு உண்டென்பது உலகறிந்த உண்மை. இத்தகைய உன்னதமான தியாகத்தைக் கொண்டுள்ள நாம், தமிழின உறவைத் தொடர்ந்தும் பேணுவது அவசியமல்லவா?

கடற்தொழில் என்ற பெயரால் எல்லைதாண்டி; மீன்பிடித்து; தமிழின சகோதரத்துவத்துக்குள் முரண்பாட்டை ஏற்படுத்துவதென்பது இதுவரை நடந்த தியாகங்களுக்கு கருமை பூசுவதாகுமல்லவா?

ஆகையால் எல்லைதாண்டலை இனத்தின் பெயரால் நிறுத்த வேண்டும். ஈழத்தமிழினத்திற்காகவே தம் அரசியல் வாழ்வைத் தியாகம் செய்த பழ.நெடுமாறன் மற்றும் சகோதரன் சீமான், வை.கோபாலசாமி போன்றவர்கள் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தடுக்க வேண்டும்.

இதற்கு மேலாக இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் துணைப் பணிமனை யாழ்ப்பாணத்தில் இயங்குவது நமக்குக் கிடைத்த பெரும்பேறு.

வட பகுதியின் தேவைகளில் கரிசனை கொண்டுள்ள இந்தியத் துணைத்தூதரகம் வடபுலத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன்; கல்வி, இசை, அறிவியல் சார் துறைகளுக்கும் உதவி செய்து வருவது தமிழகத்தையும் ஈழத்தமிழினத்தையும் மிக நெருக்கமுடைய வைப்பதாகும்.

எனவே, தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தடுப்பதற்கு தமிழகத்து கடற்தொழிலாளர்களும் ஈழத்துக் கடற்தொழிலாளர்களும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்தப் பணியை யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்தியத் துணைத்தூதரகம் செய்ய முடியும் என்பதால் கடல் எல்லை தாண்டல் என்ற சிக்கலுக்கு கடற்தொழிலாளர்கள் மட்டத்தில் முடிவு காணப்பட முடியும்.

தமிழினத்தின் பலம் கருதி இதைச் செய்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# அன்னதான நிகழ்வில் பிக்குகள் சுகபோகம்

(கொழும்பு)

ஊருக்கு உபதேசம் செய்யும் பௌத்த பிக்குகள் தமது வாழ்வில் அவற்றை கடைப்பிடிப்பதில்லை என சிங்கள நாளிதழ் ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

பௌத்தபிக்குகள் அனுபவிக்கும் சுகபோகங்களை பாருங்கள் என குறித்த பத்திரிகை நேற்று முன்தினம் சில புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

சுவர்ணவாஹினி சொர்ண மஹால் நிறுவனத்தின் 40 வருட நிகழ்வில் திரைப்பட தயாரிப்பாளர் சோமா எதிரிசிங்கவினால் 150 பௌத்த பிக்குகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்டதாக குறித்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

பன்றி இறைச்சி, கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, நண்டு, இறால் மற்றும் மதுபானம் உள்ளிட்டவற்றுடன் குறித்த பிக்குகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மலர்களினால் வடிவமைக்கப்பட்ட தோரணம், இளம் பெண்கள் உணவு பரிமாறல், உள்ளிட்ட புகைப்படங்களும், சோம எதிரிசிங்கவின் தங்க முலாம் பூசப்பட்ட புத்தர் சிலை அன்பளிப்புகள் ஆகிய புகைப்படங்களும் அந்த நாளிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சியை தடை செய்ய வேண்டும் என தெரிவித்து பௌத்த பிக்கு ஒருவரே தற்கொலை செய்து கொண்டார்.

ஆனால் அவர்களுக்கு பலதரப்பட்ட இறைச்சி வகைகளுடன் அன்னதானம் வழங்கப்படுகின்றது.

ஊருக்கு உபதேசம் செய்யும் பௌத்த பிக்குகள் தமது அன்றாட வாழ்வில் அவற்றை கடைபிடிக்க மறுக்கின்றனர். (ஏ-11)

## இலங்கை திரும்புவோரின் விபரம் திரட்டப்படுகின்றது

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளில் இலங்கைக்கு திரும்பி வரவிரும்புகின்ற அகதிகள் பற்றிய விவரங்களை தருமாறு இந்திய தலைவர்களிடம் இலங்கை அரசு கோரியுள்ளது.

பல ஆயிரக்கணக்கான இலங்கை அகதிகள் இந்தியாவில் வாழ்ந்தாலும் எல்லோரும் திரும்பி வரவிரும்பமாட்டார்களென மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இலங்கை திரும்ப விரும்புவோரின் விவரங்களை கேட்டோம். இந்தியாவில் நிரந்தரமாக குடியேறிய இலங்கை அகதிகளும் உள்ளனர். அவர்கள் திரும்பி வர விரும்பவில்லை. திரும்பி வர விரும்புவோரும் உள்ளனர் என அவர் கூறினார்.

கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால புதுடில்லிக்கு சென்றார். அவர் தலைமையிலான குழுவில் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனும் இருந்தார். அவர், மீள்குடியேற்றம் தொடர்பில் புதிய அரசு கண்டுள்ள முன்னேற்றங்களை பற்றி இந்திய தலைவர்களுக்கு விளக்கினார்.

வடக்கில் மீள்குடியேற்றத்துக்கான 1000 ஏக்கர்காணியை விடுவித்துள்ளோம். பல நிறுவனங்களும் மீள்குடியமர்த்தலுக்கு முன்வந்துள்ளன என்றும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

அதியுயர்பாதுகாப்பு வலய அளவை குறைத்து இந்த நிலங்களை விடுவிப்பது தொடர்பில் அரசு ஒரு அமைச்சரவை தீர்மானம் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ-11)

## பணவீக்கம் திடீர் வீழ்ச்சி

(கொழும்பு)

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இலங்கையின் பணவீக்கம் 11 ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் இலங்கையின் பெப்ரவரி மாத பணவீக்கமே இவ்வாறு மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளது. பணவீக்கத்தை அளவிடும் பிரதான சுட்டியான, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, பெப்ரவரி மாத பணவீக்கம் 2.6 வீதமாக குறைந்திருக்கிறது.

கடந்த ஜனவரி மாத பணவீக்கம் 3.2 வீதமாக இருந்தது. இது பெப்ரவரி மாதத்தில், 0.6 வீதத்தினால் குறைந்திருக்கிறது.

கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் பணவீக்கம் 4.2 வீதமாக காணப்பட்டது. இது 2004-ம் ஆண்டுக்குப் பின்னர், ஆகக் குறைந்த பணவீக்க நிலையாகும்.

இந்த நிலையில், புதிய அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளதையடுத்தே, பணவீக்கம் கணிசமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஏ-11)

## பூந்தொட்டிகள் அகற்றப்பட்டன

பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகையைச் சுற்றியுள்ள சுவரை அழகுபடுத்தும் வகையில் அங்கு வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டிகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டினை முன்னிட்டு, கடந்த ஆட்சியாளர்களினால் இந்த பூந்தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை பராமரிப்பதற்கான செலவு அதிகமாக காணப்படுவதன் காரணத்தினாலேயே இவையனைத்தும் அகற்றப்பட்டதாக பிரதமரின் ஊடக செயலாளர் தெரிவித்தார்.

அலரி மாளிகையிலிருந்து அகற்றப்பட்ட அனைத்து பூந்தொட்டிகளும் கம்பஹாவில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இவற்றை பராமரிப்பதற்கு ஒரு நாளைக்கு மில்லியன் கணக்கான பணம் செலவிடப்படுவதாகவும் நாட்டின் மற்றும் நாட்டு மக்களின் நன்மை கருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஏ-11)

## இந்திய உதவித் திட்டத்தில் இலங்கைக்கு 500 கோடி ரூபா

(கொழும்பு)

இந்திய அரசாங்கம் தனது 2015 - 2016ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், இலங்கையின் உதவித் திட்டங்களுக்கு 500 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி நேற்று 2015 - 2016ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதில் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு 19 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடாக, வெளிநாடுகளில் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு 9107 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில், இதற்கென 7234.26 கோடி ரூபாயே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 61 வீதம், வெளிநாடுகளுக்கான பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக பூட்டானுக்கு, 6160.20 கோடி ரூபாயும், ஆப்கானிஸ்தானுக்கு, 676 கோடி ரூபாயும், இலங்கைக்கு 500 கோடி ரூபாயும், மாலைதீவுக்கு 183 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஏ-11)

## மகிந்தவுக்காக கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்குமாறு கோரி பத்து இலட்சம் கையொப்பங்களை பெறும் நிகழ்வு நேற்று நுவரெலியா மாவட்டத்தின் கினிகத்தேனை நகரில் ஆரம்பமானது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் எலப்பிரிய நந்தராஜின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்து பெறும் நிகழ்வு நேற்று கினிகத்தேனை பஸ் தரிப்பிடத்தில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது அங்கு கூடியிருந்த சிலர் கையொப்பம் இட்டு தங்களின் ஆதரவுகளை வெளிப்படுத்தினர். அந்த வகையில் இந்த கையெழுத்து இடும் நிகழ்வு நுவரெலியா மாவட்டம் முழுவதும் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ-11)

# 100 நாள் பதவியே ரணிலுக்கு கிடைத்தது

### டிலான் தெரிவிப்பு

100 நாள் பிரதமர் பதவி ரணிலுக்கு பாவம் பார்த்து வழங்கப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

100 நாள் வேலைத்திட்டத்தினை வாக்குறுதிக்கமைய நடைமுறைப்படுத்த வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 100நாள் வேலை திட்டத்தின் ஒரு நுனியை மாத்திரம் பிடித்துக் கொண்டு முன்னோக்கி செல்ல முடியாது.

48 பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு ரணிலை பிரதமராக செயற்பட அனுமதித்தது 100 நாள் வேலை திட்டத்திற்கு ஆதரவு வழங்கியே ஆகும்.

பாவப்பட்ட பிரதமராக ரணில் செயற்படுவதற்கு அனுமதித்தது நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படும் மற்றும் தேர்தல் முறைமையை மாற்றுவதாக தெரிவித்ததனாலேயே ஆகும்.

மக்களுக்களித்த வாக்குறுதியை போன்று மாற்றம் நிகழவில்லை என்றால் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஆதரவு அவருக்கு கிடைக்காது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ஏ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவுஸ்திரேலியாவை வீழ்த்தி நியூசிலாந்து திரில் வெற்றி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான உலகக்கிண்ண ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. உலகக்கிண்ண சுற்றுத் தொடரின்20 ஆவது போட்டியில் அவுஸ் திரேலிய மற்றும் நியூசிலாந்து அணிகள் ஆக்லாந்தில் நேற்று மோதின.

நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய அவுஸ்திரேலிய வீரர்கள், நியூசிலாந்து வேகப்பந்துவீச்சாளர் பவுல்ட் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறினார்.

அவுஸ்திரேலிய அணி 32.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெடடுகளையும் 151 ஓட்டங்களையும மாத்திரம் பெற்றது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ஃபின்ச்சும் டேவிட் வோர்னரும் நிதானமான தொடக்கத்தை தந்தனர். ஃபின்ச் 14 ஓடடங்களிலும் அதனைத் தொட ர்ந்து வோர்னர் 34 ஓட்டங் களிலும் சவுத்தீ பந்தில் ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் 80 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்த அவுஸ்திரேலிய அணி அதற்கு பின் வேகமான சரிவை சந்தித்தது. வோட்சன் (23), கிளார்க் (12), சுமித் (4), மக்ஸ்வெல் (1), மார்ஷ் (0), ஜோன்சன் (1), ஸ்டார்க் (0) என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர.

கடைசி விக்கெட்டுக்கு ஹாடினுடன் ஜோடி சேர்ந்த கம்மின்ஸ் ஓரளவுக்கு தாக்குப்பிடித்தார். அவரை சப்போர்ட்டுக்கு வைத்துக் கொண்டு அனுபவ வீரரான ஹாடின் அவுஸ் திரேலியாவின் ஓட்டங்களை உயர்த்த போராடினார்.

இறுதியில் ஹாடின் 43 ஓட்டங்களில் விக்கெட்டை பறி கொடுக்க, 151 ஓட்டங்களில் அவுஸ் திரேலியாவின் ஆட்டம் முடி வுக்கு வந்தது.

நியூசிலாந்து அணி சார்பாக போல்ட் 5 விக்கெட்டுகளையும், சவுத்தீ, வெட்டேரி தலா 2 விக்கெட்டுகளையும் சாய்க்க, அண் டர்சன் தன் பங்குக்கு 1 விக் கெட்டையும் கைப்பற்றி னார்.

பின்னர் 152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி கள மிறங்கிய நியூசிலாந்து அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

தொடக்க ஆட்டக்காரர்களான குப்டில், மெக்கல்லம் அதிரடியை தொடர்ந்தனர். குப்டில் (11) ஸ்டார்க் பந்து வீச்சில் ஆட்டமிழக்க, வில்லியம்சன் மெக்கல்லமுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அவுஸ்திரேலிய பந்து வீச்சை எளிதாக சமாளித்தனர். அதிரடியில் அசத்திய மெக்கல்லம் 24 பந்துகளில் அரைசதம் அடித்தார். 50 ஓட்டங்கள் எடுத்த போது ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த டெய்லரை 1 ஓட்டங்களில் ஸ்டார்க் ஆட்டமிழக்க செய்தார். இவரை தொடர்ந்து வந்த எலியட்டும் ஸ்டார் பந்தில் டக்- அவுட ஆக வெளியேறி அதிர்ச்சி தந்தார்.

அடுத்து வந்த ஆண்டர்சன் நிதானமாக விளையாடி 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 131 ஓட்டங்களுக்கு நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய ரோஞ்சி (6), வெட்டோரி (2), மில்ன் (0), சவுத்தீ (0) என வரிசையாக வெளியேற நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுகளை இழந்து தோற்கும் நிலைக்கு தள்ளப்பட்டது. பின்னர் அந்த ஓவரின் கடைசி இர ண்டு பந்துகளை தாக்குபிடித் தார் கடைசி விக்கெட்டாக இறங்கிய போல்ட்.

வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் 23.1 ஓவரை பிடித்த வில்லியம்சன் சிக்சர் அடித்து நியூசிலாந்தை வெற்றி பெறச் செய்தார். இதனால் நியூசிலாந்து அணி 161 பந்துகள் மிச்சமுள்ள நிலையில் 1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய தரப்பில், நியூசிலாந்து வீரர்களை மிரள வைத்த ஸ்டார்க் 6 விக்கெட்டுகளையும், கம்மின்ஸ் 2 விக்கெட்டுகளையும், மக்ஸ்வெல் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து போல்ட் தெரிவானார். (க)




ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

**அவுஸ்திரேலியா (32.2 ஓவர்கள்) 151**

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| ஹாடின் | 43 | 41 |
| வோர்னர் | 34 | 42 |
| வொட்சன் | 23 | 30 |
| பின்ஞ் | 14 | 07 |

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

**நியூசிலாந்து** பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| போல்ட் | 10 | 3 | 27 | 5 |
| சவுத்தீ | 09 | 0 | 65 | 2 |
| வெட்டோரி | 10 | 0 | 41 | 2 |
| அண்டர்சன் | 0.2 | 0 | 06 | 1 |

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

**நியூசிலாந்து (23.1ஓவர்கள்) 156/9**

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| மெக்கல்லம் | 50 | 24 |
| வில்லியம்சன் | 45 | 42 |
| அண்டர்சன் | 26 | 42 |
| கப்தில் | 11 | 14 |

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

**அவுஸ்திரேலியா** பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| ஸ்டார்க் | 09 | 0 | 28 | 6 |
| கம்மின்ஸ் | 6.1 | 0 | 38 | 2 |
| மக்ஸ்வெல் | 01 | 0 | 07 | 1 |
| ஜோன்சன் | 06 | 1 | 68 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 மாத...

தெரிவித்தார்.

இங்கு பிரச்சினை உண்டு என நான் ஏற்றுக் கொள்கின்றேன். 30 வருட காலமாக இழந்தவற்றினை கொடுப்பதற்குதான் நம் புதிய அரசு முயன்று வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிச்சயம் இந்த 100 நாட்களுக்குள் நிறைவேற்றுவோம்.

இவற்றோடு அரசு மற்றும் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் இராணுவத்துக்கு தேவையற்ற காணிகளை 180 நாட்களுக்குள் உரிய மக்களுக்கு வழங்குவோம் என்றார். (எ-4)

## பொலிஸ்...

கட்டும் நடவடிக்கைகளினை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையிலேயே 1995ஆம் ஆண்டு முதல் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ள தமது 50 ஏக்கருக்கும் அதிகமான காணியினை மீட்டுத்தருமாறு கோரி இன்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்

இக்காணிக்குள் 13 வீடுகளும், 08 விவசாயக் காணிகளும் உள்ளன. இவற்றில் பொலிஸ் நிலையம் தவிர விவசாயம், விளையாட்டு மைதானம் போன்றவற்றை அமைத்து பயன்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பான மகஜர் ஒன்றும் நேற்று யாழ்.வந்த மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-4)

## விசாரணை...

மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக ஆணைக்

# அரசியல் பழிவாங்கல்களிலிருந்து தப்பித்துக்கொள்ள மகிந்த முயற்சி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் நடந்த அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான தவறுகளை கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் மீது சுமத்திவிட்டு தப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் தான் எவரையும் அரசியல் ரீதியாக பழிவாங்கவில்லை எனவும் பழிவாங்கும் அரசியல் தன்னிடம் இருக்கவில்லை எனவும் மகிந்த ராஜபகஷ நேற்று முன்தினம் கொழும்பில் தெரிவித்திருந்தார்.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி ஷசி வீரவன்ஸவை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பார்த்து விட்டு வெளியேறும் போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனை கூறியிருந்தார்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட அரசியல் பழிவாங்கலுக்கு இரண்டு மிகப் பெரிய உதாரணாங்கள் உள்ளன.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முடிந்த சில நாட்களில் இராணுவ சதித்திட்டத்தில் ஈடுபட்டதாக கூறி தன்னை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள இராணுவத தளபதி ஜெனரல்சரத்பொன்சேகாவை கைது செய்ததுடன் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பதவி பட்டங்கள், ஓய்வூதியம் என்பவற்றை பறித்து சில வருடங்கள் சிறையிலும் அடைக்க வழிவகுத்தார்.

அத்துடன் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தனக்கு தேவையான வகையில் தீர்ப்பை வழங்கவில்லை என்பதற்காக அவருக்கு எதிராக குற்றச் சாட்டுக்களை திரட்டி, அரசியல் ரீதியான நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்து பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கியதுடன் அவருக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் எதனையும் வழங்கவில்லை என்பது மகிந்த ராஜபக்ஷவின் மிகப் பெரிய இரண்டாவது அரசியல் பழிவாங்கலாகும் எனவும் அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (எ-11)

குழு தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பாக தற்பொழுதுவரை இருபதாயிரத்து நூற்றிப் பத்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அதில் பதினைந்தாயிரத்து நூற்றிப்பத்து முறைப்பாடுகள் சிவில் முறைப்பாடுகள் என தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## லண்டன்...

பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

பிரித்தானியாவில் 4 நாட்கள் தங்கியிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு பல்வேறு தரப்பினரைச் சந்திக்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பிரித்தானியப் பயணத்தைத் தொடர்ந்து சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயணம் மேற்கொள்ளவுள்ளார். (எ-11)

## சுதந்திரக்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

விருப்பு வாக்கு முறையை ஒழித்து விட்டு தொகுதி வாரி தேர்தல் முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யோசனையாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதை சுதந்திரக் கட்சி விரும்புகிறது எனவும் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர் பதவி என்ற கன்வை அனைவரும் தமது மனங்களில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றார்.

பிரதமர் பதவியை சிக்கலாக்கி கொண்டு சிலர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவு படுத்த முயற்சித்து வருகின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார். (எ-11)

# சாவகச்சேரியில் வாள்வெட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் இளைஞர்கள் இருவர் மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதில் இருவரும் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம் பெற்றது. சம்பவத்தில் கெருடாவிலைச் சேர்ந்த செல்வ்ராஜா ரவீந்திரன் (வயது-28), சிவகுமார் சோபன்(வயது-27) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

சோபன் என்பவர் கெருடாவிலில கடை நடத்திவருபவர் என்றும், நேற்று இரவு கடையைப் பூட்டி விட்டு நண்பருடன் வீடு திரும்பிக் கொணடிருக்கையில் எதிரே மறைந்திருந்த குழுவினர் இவர்கள் இருவரையும் சரமாரியாக வெட்டிப் படுகாயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர். விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-29)


## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு: 0778549267

(9645)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்துக்குட்டியான ஐக்கிய அரபை வெளுத்து வாங்கியது இந்தியா




ஐக்கிய அரபு எமிரேட்ஷ்'க்கு எதிரான 21ஆவது லீக் ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஷ் (யு.ஏ.இ..) அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண தொடருக்கான 'பி' பிரிவு லீக் போட்டி பேர்த்தில் நேற்று நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்பம் முதலே இந்திய பந்துவீச்சில் திக்குமுக்காடிப்போன எமிரேட்ஷ் வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்..

அந்த அணி சார்பில் அன்வர் மட்டும் அதிகபட்சமாக 35 ஓட்டங்கள் எடுத்தார்.

தவிர குராம் 14, மஞ்சுலா 10 ஓட்டங்கள் எடுக்க, மற்றைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் நடையை கட்டினர்..

இதன்காரணமாக அவ்வணி 31.3 ஓவர்களிலே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 102 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இந்திய தரப்பில், சுழலில் அசத்திய அஸ்வின் 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், உமேஷ் யாதவ், ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், புவனேஷ்வர் குமார், மோகித் சர்மா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து 103 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 18.5 ஓவரில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 104 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தவான் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், அதன்பின் 2ஆவது விக்கெட்டுக்காக இணைசேர்ந்த ரோஹித் (57*) - கோஹ்லி (33*) இணை தமக்கிடையில் பிரிக்கப்படாத 75 ஓட்டங்களை இணைப்பாட்டமாக்ப் பகிர்ந்து அணியை வெற்றியடைச் செய்தனர்.

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகளைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸை வீழ்த்திய இந்தியா ஹட்ரிக் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்திய இந்திய அணியின் அஸ்வின் தெரிவானார். (க)




நீங்கள் முடிஉதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப்பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய 'றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்'

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து, தலைச் சருமத்திற்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலை கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து, முகத்திற்கு பொலிவை அளிக்க வல்லது.

Quality Royal Akasthiya Hair Oil Guaranteed

இன்றே நாடுங்கள்!
சிவா நறுமணப் பூங்கா
இல. 288,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பே. 021 222 2567

(C-173)

அனைத்துப் பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured by:- Royal Industries Colombo-13

BEACON
Velindan Junction, Jaffna.
ECONOMICS
English Medium
A/L 2017
COMM
2nd March, 4.30 PM
(C-186)

BEACON
வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.
Day Class
கணக்கீடு - R.சுகிர்தன் B.Com
பங்குடமை ஆரம்பம்
திங், செவ், வியா, வெள்ளி வகுப்புக்கள்
பொருளியல் - K.பிரதீபன் B.B.A
திங், வெள்ளி: நெகிழ்ச்சிக் கோட்பாடு
செவ்வாய், வியா:
பணம்...., MCQ (2/12-4 1/2 P.M)
(C-186)

Personal Class-கணினி
*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்:KRC

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும், தொலைபேசி அட்டைகளை பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
(C-188)
* Excellent Teachers' Panel & Individual Attention
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550 0777585913, 0777222422, 071429935
அறிமுக (Introduction) வகுப்புகளுக்கு வருகை தருபவர்களுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது
அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 07/03/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்
Batch 1 : 02-03-2015
Batch 2 : 05-03-2015
Batch 3 : 07-03-2015
Batch 4 : 09-03-2015

SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை
உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி
Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-170)
தொ.பே - 0776217926, 021 2217180
www.speedlanka.net

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 01.03.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 04



## புதிய உதயம் ஒன்றுக்கான ஆரம்பம்

ஆலடி மாநாடு

வியாசர் பதில்கள்...
மனிதாபிமானம்மனிதர் களிடம் இருக்கிறதா?

உலகக்கிண்ணம்
குவியும் சாதங்கள்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உதயம் ஒன்றுக்கான ஆரம்பம்!

இலங்கையில் உள்ளோர் பலருக்கும் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், சர்வதேசங்களிலும் பரவி வாழ்ந்துகொண்டிருக்கும் நம்மவர்களுக்கும், மைத்திரிபால சிறிசேனா- இலங்கை

சண்டே லீடர் பத்திரிகையில் புதிய உதயம் ஒன்றுக்கான ஆரம்பம் என்னும் தலைப்பில் என். சத்தியமூர்த்தி எழுதிய ஆய்வுக் கட்டுரையின் மொழியாக்கம்

**தமிழில்- யோகர்**

யின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை புதியதோர் யுகம் உதயமாவது குறித்த செய்தியைக் கொண்டு வருகிறதென்றால், அவரது பிரதம மந்திரியான ரணில் விக்ரமசிங்கவினது முயற்சிகள் சம்பந்தப்பட்ட மக்களனைவரதும் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் அபிலாசைகள் போன்றவற்றின் அடிப்படையிலான ஓர் கொள்கைத் தெரிவினை உறுதியான முறையில் உருவாக்கும் உண்மையானதொரு தேசிய அரசினை கட்டியெழுப்புவதற்கானவை என்பதையே சுட்டிக்காட்டுவதாயுள்ளது.

கடந்த காலங்களில் முன்னைய அரசுகள் எதனாலும் ஒருபோதுமே நிறைவேற்றி முடிக்க முடியாது போன ஒரு விடயமே இதுவாகும். நாட்டின் மறுசீரமைப்புக்கென மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட அந்த 100 நாள் அபிவிருத்திக் காலம், சிறிசேனா ஜனாதிபதியாக அதிகாரத்தை கையேற்றுக்கொண்டதுடன் ஆரம்பமாகி அந்த இறுதி நாளுக்கான கணக்கெடுப்பும் ஒவ்வொரு நிமிடமாக ஓடிக்கொண்டே இருக்கிறது.

இக்கடின முயற்சிக்கான ஆரம்பப் புள்ளியாக தவிர்க்க முடியாத பாராளுமன்றத் தேர்தலைக்கூட நாடு எதிர்நோக்கியுள்ளது. குறிப்பான முறையில் புதிய தலைமைத்துவத்திற்கு இருக்கின்ற நேரப் பற்றாக்குறைக்குள்ளும் தற்போது சாதித்துக் கொள்ளப்பட்டவை, மேற்கொண்டு இனிமேலும் நிறைவேற்றப்பட வேண்டியவை குறித்து முழு இலங்கை மக்களும் பொறுமையுடன் அமைதியாக எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் 51% இற்கும் கூடுதலான பெரும்பான்மை வாக்காளர் வெகு காலமாகவோ அல்லது சிலர் தற்போதைய மற்றும் அண்மைக் காலமாகவோ தேர்தல் காலகட்டங்களுக்கும் கூடுதலான காலமாகவோ நம்பி எதிர்பார்த்துக் காத்திருக்கும் மாற்றத்தைக் கொண்டு வரும் முக்கிய தலைவர்களாகவே எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதம மந்திரியாகிய ரணில் விக்ரமசிங்கவும் முன்னிலை வகிக்கின்றனர்.

இவர்களுக்குள் தற்போதைய ஜனாதிபதி சிறிசேனவுடைய முன்னைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமும் சந்திரிகாவிடமும் 20 வருடங்களுக்கு மேற்பட்டகாலமாக இடம்பெற்றிருந்த ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் அடுத்தடுத்து தோல்வி கண்டிருந்த காரணத்தினால் தமது விருப்பத்திற்குரிய மாற்றமெதுவுமின்றி மீண்டும் மீண்டும் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த ரணிலின் ஐ.தே.கட்சியின் நிரந்தர உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் போன்றோரும் அடங்குவர். இவர்களை விட வேறு ஏனையோரும் உள்ளனர்.

ஐ.தே.க, ஐ.ம.சு.முன்னணி போன்ற கட்சிகளின் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்டவர்களும் இலங்கையர் என்ற மட்டில் புதிய மாற்றம் ஒன்றினை விரும்பி எதிர்பார்க்கும் ஏனையோரும் உள்ளனர். பல்வேறுபட்ட இவர்களது எதிர்பார்ப்புகளுங்கூட குறிப்பிடத்தக்கவையாக இல்லாவிடினும், அவர்களுக்







கேற்ப அவைகளும் பல்வகையானவையேயாகும். இவர்கள் சிங்கள பெரும்பான்மை அரசியலில் பெருங் கட்சிகளிரண்டினையும் சார்ந்த கட்சிக்காரர்களோ அல்லது அனுதாபிகளோ அல்லது இனவாரியான சிறுபான்மை தமிழர், முஸ்லிம்கள் மற்றும் மலைநாட்டுத் தமிழர்களோகூட, தத்தமது கட்சிகளூடாக முன்வைத் திருக்கும் நம்பிக்கைகளை ஈடேற்றிக் கொள்ளும் பொருட்டு புதிய அரசுக்கும் தமது தலைமைகளுக்கும் செயற்படுவதற்கான காலத்தையும் நேரத்தையும் வழங்குவதற்கு தயாராகவேயுள்ளனர். அதேநேரம், அரசின் வெற்றியை சாத்தியமாக்கியவர்களான அந்த

அமைதியான சிறுபான்மை வாக்காளர்களுங்கூட இதே விதம் காத்திருக்கின்றனர்.

ரோம் நகரம் ஒரே நாளிலேயே கட்டி முடிக்கப்பட்ட ஒன்றல்ல. இலங்கையுங்கூட அதேபோல் ஒரேநாளில் மீளவுங்கட்டியெழுப்பக் கூடிய ஒன்றல்ல.

### பரம்பரை பரம்பரையாக தொடரும் அரசியல் ஆட்சி முறைப் பற்றாக்குறைகள்

முறைப்படியான இந்த புதிய அரச தலைமைத்துவமும் மக்கள் பலமே தமது ஆதரவுக்கான பலம் என்பதை ஏற்றுக்கொள்வதாக அவர்களுக்கு வெளிப்படையாக காட்டவேண்டிய தேவையைக் கொண்டிருப்பதுடன் மக்களனைவரதும் நம்பிக்கைகளுக்கும் அபிலாசைகளுக்குமான தீர்வு ஒரே மாதிரியானதாகவோ அல்லது ஒரே தீர்வுதான் என்றோ இருக்க முடியாது என்பதையும் அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

குருடர்கள் யானை பார்த்த கதை போன்றதே இதுவும். அரச தலைமைத்துவமானது மக்கள் பலரதும் அபிலாசைகள் பற்றிய தெளிவில்லாத குருடர்களாகவோ அல்லது பல தசாப்தங்களாகவே பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து கொண்டிருக்கும ஒரேவிதமான அரசியல் வழிமுறைகளின் பற்றாக்குறைகளை கண்டு கொள்ள முடியாதவர்களாகவோ தொடர்ந்துமிருத்தலாகாது.

ஏனென்றால், அதிகாரத்திற்கு வந்த எந்த அரசுமே மாற்றமின்றி தொடரும் பழைய அரசியல்வழிமுறைகளையே தமது சொந்த செல்வாக்கிற்கான அதிகார வழிமுறைகளாக மாறி மாறி பயன்படுத்தி வந்ததில் பங்குதாரிகளாகவே இருக்கின்றனர். புதிய அரசானது நாட்டினது மிக நெருக்கடியான காலகட்டத்திலும் தம்முடன் கூடவே நிலைத்திருந்த ஆதரவாளர்களில் பெரும்பாலானவர்களை என்றில்லாவிடினும் பொதுமக்களில் பலரையும் திருப்திப்படுத்துவது மட்டுமின்றி தனித்தனி அரசியல் கட்சிகளுடன் தலைமைத்துவ சக்திகளையுங்கூட திருப்திப்படுத்த வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது.

ஆனாலும், புதிய அரச தலைமைத்துவத்திற்கு ஆதரவாக இணைந்த வாக்காளர் தொகைக்கு வெளியே [illegible] முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கே நிரந்தரமானதுமான வாக்குப் பலமொன்றும் உள்ளது. புதிய ஜனாதிபதி சிறிசேனவின் வெற்றியின் காரணமாக இழக்கப்பட்ட இந்த வாக்காளருக்குமான கடப்பாட்டினையும் சேர்த்தே அரசு கொண்டுள்ளது. இந்த வாக்காளர்களது பின்னணிக் காரணங்கள் நியாயமானதோ இல்லையோ எதுவாக இருப்பினும் அவை ஒரு இரவிலேயே மறந்து புறக்கணித்துவிடவோ அல்லது தேவையற்றதென ஒதுக்கித் தள்ளிவிடக் கூடியவையோ அல்ல. அதாவது, பெறுமதி மிக்க தனி மனித உரிமைக்கான வாக்குகளே அவை. இந்த விதத்தில், முன்னைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த குற்றச் செயல்கள் அனைத்திற்கும் காரணமான சகலரையும் சட்டத்திற்குட்படுத்துவது என்ற தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான புதிய அரசின் முயற்சியானது இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையை ஒத்த விதமான ஒரு இமாலய பிரச்சினையாகவே இருக்கும்.

தேசிய இணக்கப்பாடு மட்டில் அவர்கள் கொண்டுள்ள பாரிய தேர்தல் கடப்பாடு காரணமாக சம்பந்தப்பட்டவர்களையும் சேர்த்தணைத்து செல்ல வேண்டிய நிலைமையும் உள்ளது. இல்லையென்றால், புதிய விடியலொன்றுக்கான நம்பிக்கையுடன் கூடிய புதிய இலங்கை பற்றிய எதிர்பார்ப்புகள் அர்த்தமற்றவை என்ற விதமான நிலைப்பாட்டிற்கு அவர்கள் திரும்பி விடக்கூடும். சிலர் குறிப்பாகவே விருப்புவது போன்ற பிரிவினையற்ற ஒன்றிணைப்பு மற்றும் தேசிய நீரோட்டத்தில் உள்வாங்குவது போன்ற வழிமுறைகளை தவிர்த்தாவது, அவர்களும் உள்வாங்கப்படவேண்டிய தேவையும் உள்ளது. அப்படியானால் கட்டாயமாக என்றில்லாவிடினும் முடிந்தளவில் அவர்களது சொந்த நிபந்தனைகளின் அடிப்படையிலாவது அது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதாவது, தேர்தல் முன்னுரிமைகள் அல்லது புத்திஜீவிகளின் மனநிலை சார்பு போன்ற சிந்தனையுடன் கூடிய நீதியான புதிய விட்டுக்கொடுப்பு ஏற்பாடுகள் மூலம் இது மேற்கொள்ளப்படலாம். போருக்கு முந்திய காலகட்டத்தில் சமூக- பொருளாதார ரீதியில் சிங்கள சமூக வட்டத்தினுள் கட்டாயமான முறையில் மேற்கொள்ளப்பட்ட தேசிய நீரோட்ட உள்வாங்கல் நடவடிக்கைகளும் அழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்ததும் நினைவிற்கொள்ளப்பட வேண்டும். முன்னைய கிளர்ச்சியின் போதான இதன் விளைவுகள் இலங்கை பூராவும் இனங்கள் மத்தியிலும் பிரதிபலிப்பை ஏற்படுத்தியேயிருந்தன.

குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனைக்குட்படுத்த வேண்டிய தேவை புதிய தலைமைத்துவத்திற்கு இருக்கும் அதேவேளை, அதுவும் முறையான நீதிச் சட்டங்களுக்கமைவாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாயிருக்கிறது. இது இவ்விதமிருக்க மற்றுமொரு விடயமாக தூரத்துக் கிராமம் ஒன்றில் தேசிய ஊடகங்கள் மற்றும் சர்வதேச சமூகம் போன்றவற்றின் கழுகுக் கண்களுக்குள் அகப்படாத விதத்தில் சம்பவமொன்று மறைமுகமாக அரங்கேறிக் கொண்டிருந்தது. குற்றச்சாட்டுகள் எதுவும் வெளிப்படுத்தப்படாமலும், என்ன தான் நடந்துகொண்டிருக்கிறது என எதுவும் புரியாத விதத்திலும் அடையாளம் தெரியாத பொலிஸ்காரர்கள் என்ற பெயரில் முன்வைத்த ஜனாதிபதி ஒருவர் மீது ஒரு நாட்டின் சுதந்திர வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட விளம்பரமெதுவுமற்ற அதீத திடீர் தேடுதல் வேட்டையே இதுவாகும்.

இதுதானா நீங்கள் வாக்குறுதியளித்தநல்லாட்சி? என்றகேள்வியே, எதனையும் எதிர்பார்த்திராத முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவிடமிருந்து எழுகிறது. இருந்தும் அடுத்தடுத்து நிகழ்ந்த இந்த விதமான எதிர்பாராத சம்பவங்கள், போருக்கு முந்திய அரசியல் வன்- கலாச்சாரத்தையும் போருக்குப் பிந்திய அரசியல் பழிவாங்கல் கலாச்சாரத்தை மறந்துபோன அந்த நாட்களின் தீவிரமான மீள்வருகையை கண்முன் கொண்டுவந்து நிறுத்துவதாயுள்ளது.

நம்பிக்கைக்குரிய பலம் வாய்ந்த தலைமைத்துவமொன்றின் செயன்முறைகள்- வழி வளங்கல் போன்றவை எப்படியும் எந்தவிதத்திலும் நம்பமுடியாததாகவும் அதனது அரசியல் ஸ்திரத்தன்மை என்பது இயல்புக்கு மாறானதாக இருப்பினும் நம்பகமான ஒரு சிறந்த தலைமைத்துவம் என்ற பெயரில் குற்றமிழைத்தவர்களை அரங்கத்தில் நிறுத்தி தண்டித்த அந்த ஆபத்தான கடந்த காலம் மீண்டும் தீவிர தோற்றம் பெற்று விடுமோ என்ற விதமான கேள்விகள் பல!

இந்தக்கட்டத்தில் தெற்காசியாவின் தனது அயல்நாடுகளான இந்தியாவில் 1977 களிலும் மாலைதீவுகளில் 2008 களிலும் அந்தந்த அரசுகளின் வாக்குறுதி மீறல்களால் குறிப்பிடத்தக்க விதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, மீள் எழுச்சி போன்ற நிலைமைகளை மட்டும் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய தேவை இலங்கையர்களுக்கு உள்ளது. ஆட்சியாளர்கள் நாட்டிற்கு தேசிய ரீதியில் ஆற்றிய சேவைகளிலும் பார்க்க அவர்கள் இழைத்த தவறுகள் சிறிதாக இருந்த போதிலும் இவர்களுக்கெதிரான மக்கள் பொதுக் கருத்தொன்று அரசியல் பழிவாங்கல் ரீதியில் உருவாக்கப்பட்டதன் மூலம் பதவியிறக்கப்பட்ட அவர்கள், மறுபடியும் விரைவிலேயே மீள் எழுச்சி பெற்று பதவிக்கு வந்திருந்தனர். அவர்களை வெளியேற்றிய அதே மக்களே விரைவாக அவர்களை மீளவும் கொண்டு வந்திருந்தனர்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

(வாத்தியார் வைத்திலிங்கம் கோபாவேசத்தோடு ஆலடி மாநாட்டுக்கு வருகிறார். மாநாட்டில் இருப்பவர்கள் வாத்தியாரின் வருகை கண்டு பயம் கொண்டனர்.

என்னவோ ஏதோ நடந்து போயிற்று என்பதை வாத்தியாரின் முகபாவனை வெளிப்படுத்தியது. வாத்தியார் மாநாட்டை நெருங்குகிறார்)

**வாத்தியார்:-** கலிகாலம்... கலிகாலம்.

**விதானையார்:-** என்ன வாத்தியார் கலிகாலம் கலிகாலம் என்று சொல்லுறியள்?

**வாத்தியார்:-** வேறென்ன விதானையார், உரும்பிராயிலுள்ள ஒரு பாடசாலையில பெண் ஆசிரியர் ஒருவருக்கு மாணவி ஒருவர் கன்னத்தில அறைந்து போட்டாராம்.

**பண்டிதர்:-** என்ர கற்பகப் பிள்ளையாரே! ஆசிரியைக்கு மாணவி அடித்ததோ! இது என்ன நாசமறுந்த கதை.

**வாத்தியார்:-** இதுதான் சொல்லுறது கலிகாலம் எண்டு.

**மூப்பர்:-** வாத்தியார் கலிகாலம் என்று சொல்லுறதை நான் ஒருபோதும் ஏற்கமாட்டன். யாழ்ப்பாணத்தில, பிரபல்யமாக இருந்த எத்தனையோ பாடசாலைகள் இப்ப கந்தறுந்து போய்க் கிடக்குது. இதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும்.

**விதானையார்:-** என்ன காரணம்? பிரபல்யமான பாடசாலைகள் யாழ். மாவட்டத்தில இருக்கிற அத்தனை பிள்ளைகளையும் எடுத்தால் மற்றப் பாடசாலைகள் இலையான் கலைப்பதைத் தானே செய்ய முடியும்.

**வாத்தியார்:-** விதானையார் இப்படிக் கதையாதையுங்கோ. யுத்த சூழல் எங்கள் பாடசாலைகளைத் தாக்கிப் போட்டுது. இடப்பெயர்வு எங்கட மக்கள வேறு இடங்களுக்கு நகர்த்தி விட, ஊர்களில பிரபல்யமாக இருந்த பாடசாலைகள் விழுக்காட்டில செல்லத் தொடங்கின.

**விதானையார்:-** பண்டிதர் நீங்க சொல்லுறதில நியா யம் இருந்தாலும் விழுந்த வன் எழும்பவல்லோ வேணும். அதைச் செய்யாமல் எல்லாப் பிள்ளைகளும் பிரபல்யமான பாடசாலைகளை நோக்கி போகினம் என்று சொல்லு றதில எந்தளவு நியாயம் இருக்குது.

**வாத்தியார்:-** விழுந்த பாடசாலைகள் எழுந்து நிற்க வேணுமெண்டால், தனிய அதிபர்களும் ஆசிரியர்களும் அதைச் செய்ய முடியாது. கல்வி அமைச்சு தொடக்கம் கோட்டக் கல்விப் பணி மனை வரை திட்டமிட்டுச் செயற்படுத்த வேணும்.

ஊர்ப்பாடசாலைகளில பிள்ளைகள் படிக்கத் தொடங்க எவ்வளவோ பிரச்சினைகள் தீரும். கெட்டிக்காரப் பிள்ளைகளோட சேர்ந்து படித்தால் படிப்பில பின்தங்கி நிற்கிற பிள்ளைகளும் முன்னுக்கு வரமுடியும் .

**பண்டிதர்:-** வாத்தியார் சொல்லுறதில நியாயம் இருக்குது.

படிப்பில பின்தங்கிய பிள்ளைகளை தனித்து வைத்துப் படிப்பித்தால் நாங்கள் எதிர்பார்க்கிற அடைவு மட்டத்தை அடைய முடியாது.

மாறாக எல்லாப்பிள்ளைகளும் சேர்ந்து குழப்பம் தான் செய்வினம்.

**மூப்பர்:-** அதுசரி பண்டிதர், ஏதோவொரு வகையான பாக்குவிற்பனை, இப்ப எங்கட மண்ணில வலு வேகமாக நடக்குதாம்.

மாணவர்கள் அந்தப் பாக்கைச் சாப்பிட்டு பழுதாப் போவதைப் பலரும் காணுகினம்.

ஆனால் நடவடிக்கை எடுப்பதிலதான் எதுவும் செய்ய முடியாமல் இருக்குது.

**வாத்தியார்:-** என்ன பாக்குச் சாப்பிடுகினமோ. உந்தப் பாக்கு விக்கிற கடைகளை சீல் பண்ண வேணும். ஆனால் அதைச் செய்யிறது யார் என்பதுதான் பிரச்சினையே.

**பண்டிதர்:-** ஏன் பொலிஸ் காரார் அதைச் செய்யலாம் தானே.

**பயணிகள் பேருந்தின் உட்பகுதியில் இப்படிக் காட்சிப்படுத்த வேண்டும்**

1. வாகன இலக்கம்
2. உரிமையாளர் பெயர்
3. தொலைபேசி இலக்கம்
4. சாரதியின் பெயர்
5. நடத்துநரின் பெயர்
6. முறையீடு செய்யக் கூடிய தொலைபேசி இலக்கம்

**விதானையார்:-** என்ன பொலிஸார் அதைச் செய்யலாமோ? ( இப்படிச் சொல்லியபடி விதானையார் சிரிக்கிறார்)

வடமாகாணத்தில இருக்கிற அத்தனை பொலிஸாரும் வாகனங்களின் இன்சூரன்ஸ், ரக்ஸ் பார்க்கிற வேலையில யல்லோ ஈடுபட்டிருக்கினம்.

கிடைக்கிற சம்பளத்தை விட இன்சூரன்ஸ், ரக்ஸ் பார்க்கிறதால கிம்பளம் கிடைக்குமல்லோ!

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில ஒரு கறுத்தப் பொலிஸ் டயரியோட நிற்பார். இன்சூரன்ஸ், ரக்ஸ் காலாவதியான வாகனங்கள் எதுவென்று அவருக்கு நல்லாத் தெரியும். அப்படியானவர்களை மறித்து தண்டனை எழுதப் போவதாக பாசாங்கு செய்வார்.

கோடு கச்சேரி என்று அலைவதைவிட, அந்தாளுக்கு ஒரு 500 ரூபாயைக் கொடுத்து விட்டால் எல்லாம் சரியாகும்.

அந்த ஆள் டயரி வைத்திருக்கிறதே காசை மறைத்து வைப்பதற்குத்தான்.

**மூப்பர்:-** விதானையார் சொல்லுறது மெத்தச்சரி. ஏ-9 வீதியில பார்த்தால் சந்திக்குச் சந்தி பொலிஸார் மறைந்து நிற்கினம். இப்ப தான் தெரியுது அவையள் மறைந்து நிற்பது எதற்கென்று.



(இப்படி மூப்பர் சொல்லும் போது கங்காணி கார்த்திகேயன் மாநாட்டிற்கு வந்து அமர்ந்தார்)

**விதானையார்:-** அதுசரி கங்காணியார் அண்டைக்கு ஏதோ சொன்னனியள். தனியார் பஸ்ஸில பளைக்குப் போன போது... அதென்ன சமாச்சாரம்?

**கங்காணி:-** அதையேன் கேட்கிறியள் விதானையார். கடந்த 18.02.2015 அன்று யாழ்ப்பாணத்தில இருந்து வவுனியாவுக்குச் சென்ற தனியார் பஸ்ஸில ஏறினனான். நேரம் பிற்பகல் 3.45 மணி இருக்கும். அந்தப் பஸ் சாரதி கடுங் கோபத்தோட இருந்தது மட்டுமல்ல ஒரே ரெலிபோன் கதைத்தபடி. சாவகச்சேரி கொஸ்பிற்றலுக்கு முன்பாக நின்று மூன்று பொலிஸார் அந்தப் பஸ்ஸில ஏறிச்சினம். பொலிஸ் பஸ்ஸில இருந்த போதிலும் அந்தச் சாரதி ரெலிபோன் கதைத்தபடி... முன் வாசலில நின்ற ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

கொடிகாமத்தில பொலிஸார் இறங்கிப் போக, பஸ் நடத்துநர் சாரதிக்கு கிற்காட் வேண்டிக்கொடுத்தார். அவ்வளவுதான் திரும்பவும் ரெலிபோன் கதைத்தபடி... கடவுளே! அட்டமத்துச்சனி என்ர அலுவல முடிக்கப் போகுது என்று நினைச்சன். எத்தனையோ விபத்துக்கள் நடந்தாலும் எங்கட ரைவர்மார் திருந்தப் போறதில்லை.

**பண்டிதர்:-** கங்காணியார் பஸ் நம்பர நோட் பண்ணினதோ.

**கங்காணி:-** பண்டிதர் பஸ்ஸுக்குள் அந்த பஸ் நம்பர், பஸ் உரிமையாளரின் தொலைபேசி இலக்கம், சாரதியின் பெயர், நடத்துநரின் பெயர் என்பன பொறிக்கப்பட வேணும். அப்பத்தான் நாங்கள் நோட் பண்ண முடியும்.

**வாத்தியார்:-** கங்காணி சொல்லுறதிலும் நியாயம் இருக்குது. இதோட சாரதிமார் ரெலிபோன் கதைத்தால் கொம்பிளைன் செய்யக்கூடிய பொலிஸாரின் ரெலிபோன் நம்பரும் இருக்க வேணும். அதாவது 110 ரெலிபோன் நம்பர் போல ஒரு நம்பரை அறிமுகப்படுத்தினால் அந்த நம்பருக்கு இந்த இலக்கம் கொண்ட பஸ் சாரதி ரெலிபோன் கதைக்கிறார் என்ற முறைப்பாட்டைச் செய்யலாமல்லோ. எங்க பாப்பம் ஆலடி மாநாடு இதை ஒரு தீர்மானமாக எடுக்குது. போக்குவரத்துப் பிரிவினர் நடவடிக்கை எடுக்கினமோ பார்க்கலாம்.

(மாநாடு தீர்மானத்தை நிறைவேற்ற அதனை அங்கீகரிப்பது போல பிள்ளையார் கோயில் கண்டாமணி ஒலிக்க, மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

## அன்பு வாசகர்களே!

சமூகம் சார் பிரச்சினைகளை ஆலடி மாநாட்டிற்கு எழுதி அனுப்புங்கள். அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து ஆலடி மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

சமூகம் சார் பிரச்சினைகளை ஆதாரங்களுடன் எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:-

**வலம்புரி, ஆசிரியர் (ஆலடிமாநாடு)**
**இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook சிரிப்பின் உயர்வு



ஒருமுறை பணக்கார நண்பர் ஒருவருடன் காரில் சென்றேன். அவருடன் அவர் நண்பர்கள் சிலரும் வந்திருந்தார்கள். ஒரு சமயத்தில் அவரின் கார் டிரைவர் மிக நகைச்சுவையாக ஏதோ சொல்ல நான் பலமாக சிரித்துவிடடேன். பார்த்தால் அந்த காரில் என்னை தவிர யாரும் சிரித்ததாய் தெரிய வில்லை.சிறிது நேரம் கழித்து காரிலிருந்தவர்களில் ஒருவர் செம மொக்கையாக ஏதோ சொல்ல எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

எனக்கு சுத்தமாக சிரிப்பு வரவில்லை.அவர்கள் தொடர்ந்து சிரித்துகொண்டு இருந்தனர். இது அவ்ளோ பெரிய காமெடி இல்லை என்று சொல்ல நினைத்தேன்.

பிறகு தான் தெரிந்தது அந்த மொக்க ஜோக் சொன்னவர் அவர்களை விட அந்தஸ்தில் உயர்ந்தவர், முன்பு நல்ல ஜோக் சொன்னவர் சாதாரண டிரைவர் என்பது.சிரிப்பு மனித இனத்திற்கு இறைவன் தந்த வரம், அதில் கூடவா அந்தஸ்து, அடையாளமெல்லாம் பார்ப்பீர்கள்? ஆனால்? இது தான் இங்கே யதார்த்தம்

# பந்தயம்!



ஒரு போர் வீரனை வேறு முகாமுக்கு மாற்றும் போது அதி காரி அவனிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பினார். கடமை யில் கருத்தாக இருப்பான். ஆனால் எதெற்கெடுத்தாலும் பந்தயம் கட்டுவது தான்இவனது பலவீனம்.

'அடுத்த முகாம் அதிகாரி கடிதத்தைப் பார்த்து விட்டு,' பந்தயம் கட்டுவது கெட்ட பழக் கம்.எதெற்கெல்லாம் பந்தயம் கட்டுவாய்?' என்று கேட்டார்.

அவனோ, எதற்கு வேண்டுமோனாலும் பந்தயம் கட்டுவேன்.இப்போது கூட ஒரு பந்தயம்.உங்கள் முதுகில் ஒரு மச்சம் இருக்கிறது என் கிறேன். பந்தயம் நூறு ரூபாய்." என்றான்.'

எனக்கு முதுகில் மச்சமே கிடையாது.நீதோற்று விட்டாய். நீயே பார்," என்று அவர் கூறி தனது சட்டையைக் கழற்றிக் காட்டினார்.

மச்சம் இல்லாததால் அவனும் வருத்தமாக முகத்தை வைத்துக் கொண்டு நூறு ரூபாயைக் கொடுத்தான்.

புதிய அதிகாரி பழைய அதிகாரிக்குக் கடிதம் எழுதி னார். அவனுக்கு சரியான பாடம் கற்பித்து விட்டேன்.இனி யாரிடமும் பந்தயம் கட்ட மாட்டான், என்று நடந்தவற்றை விளக்கி எழுதினார். உடன் பதில் வந்தது.

நீங்கள் தான் தோற்றுப் போய் விட்டீர்கள். புதிய இடத்தில் வேலைக்கு சேர்ந்த அன்றே உங்களுடைய சட்டையைக் கழற்ற வைப்பதாக என்னிடம் ஐநூறு ரூபாய் பந்த யம் கட்டிவிட்டுத்தான் அங்கு வந்தான். வெற்றி அவனுக்குத்தான்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 297

மது மதுமிதா




பாலன் குமார்




மிது மிதுர்சா




லக்ஸ்மன் லவண்




தரணி தரணிகா




கரோலின் கெனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## துரோகம் இல்லாத அன்பு யாரிடம் இருந்து கிடைக்கும்?

**அம்சவிர்தன் — யாழ்ப்பாணம்**

Hi வியாசர்

*ரஜினியின் அடுத்த படம் என்ன?*

எந்திரன் 2 ற்கான வாதம் சங்கருடன் நடைபெறுகின்றது. ஹிந்தி நடிகர் அமிர் தாப்பும் நடிப்பதாக தகவல். நம்ம தலைவருக்கு அதே ஐஸ்வர்யாதானுங்க மறுபடியும் ஜோடி.

**T.கிரு — அல்வாய்**

அங்கிள்

*காதல் என்பது வரமா? சாபமா?*

வரம் எனும் அளவிற்கு அது ஒன்றும் கடவுளல்ல. சாபமென்று சொல்லுமளவுக்கு அது நரகமும் அல்ல.

**இன்பராஜ் — சுழிபுரம்**

Hi வியாசர்

*துரோகம் இல்லாத அன்பு யாரிடம் இருந்து கிடைக்கும்?*

'காதலி ஒருத்தி காதலனிடம் சொல்கிறாள் உன் அம்மாவின் இதயத்தை எனக்கு பரிசாகத்தா என்று. அவனும் ஓடிப்போய் தன் தாயிடம் அந்தச் சண்டாளியின் ஆசையைக் கூறுகிறான். தாய் சிரித்துக்கொண்டே எடுத்துக்கொள். உன் சந்தோசம் தான் என் சந்தோசம் என்றாள்.
அவன் தாயின் இதயத்தை அவள் நெஞ்சை பிளந்து எடுத்துக்கொண்டு தன் காதலியிடம் ஓடினான். ஓடும் வழியில் கல் தடக்கி அம்மா ... என அலறிய படி விழுந்தான். அப்போது அவன் கையிலிருந்த தாயின் இதயம் அவனைக் கேட்டது " மகனே வலிக்குதாடா?" என்று.

**நிறோ — யாழ்ப்பாணம்**

Hi மாமா

*ஒரு பொண்ணு ஐ லவ்யூ என எஸ்.எம்.எஸ் பண்ணியிருந்தால் என்ன அர்த்தம்?*

யாருக்கோ போட்ட எஸ்.எம்.எஸ். எனக்கு வந்துவிட்டது என நினைப்பது தான் உங்களுக்கு மிக நன்று.

**ஆர்.குரு — அல்வாய்**

வியா அண்ணா

*புகழ்ச்சி, பாராட்டு இரண்டுமே ஒன்றா வேறுபட்டதா?*

பாராட்டு நெருப்புப் போல புகழ் புகை போல. நெருப்பு (பாராட்டு) எரிய எரிய புகை (புகழ்) மேலே மேலே போய்க் கொண்டே இருக்கும்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

Hi வியா மாமா

*ஆண்களின் காதலின் ஆரம்பம் எப்போது?*

பெண்களின் ஆடை நழுவும் போது.

## மனிதாபிமானம் மனிதரிடம் இருக்கிறதா?

**லீலா சிவவடிவேல் — இணுவில்**

அங்கிள்

*விஜய் ரி.வியில் ஒளிபரப்பாகிய சுப்பர் சிங்கர்ஸ் நிகழ்வில் இசையால் எம்மைப் பரவசப்படுத்திய "குஞ்சுக் குயில்" கள் பற்றி தங்களின் அபிப்பிராயம் என்ன?*

முடிவுகள் ஒருபுறமிருக்கட்டும். சுடச் சுடத்தான் தங்கம் மின்னுகிறது. பயிற்சியின்றிய பாட்டு பாழ் என்பதைப் புரிந்திடாத மூடர்களுக்கு இது நல்ல எடுத்துக்காட்டு. என்ன செய்ய கிணத்துத் தவளைகள் தங்களுக்குள்ளேயே ஒரு இராச்சியத்தை உருவாக்கிவிட்டு அது தான் உலகம் என்று இருப்பது தான் கவலையிலும் கவலை.




**அன்பு — பருத்தித்துறை**

அண்ணா

*மனிதாபிமானம் மனிதரிடம் இருக்கிறதா?*

உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நோயாளி அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் போது அதே விறாந்தையில் ரீ.வி.பார்க்கப் பழகி விட்டோமே இதை விட ஒரு மாற்றம் தேவையா?

**அகளங்கன் — இணுவில்**

Hi வியாசர்

*பெண்களின் காதல் எப்படிப்பட்டது?*

ஒருவன் தன்னை விட்டு விலகமாட்டான் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் அவனைப் பெண்கள் படுத்தும் பாடு இருக்கிறதே அம்மா ... அம்மம்மா ... ஐயய்யோ ... அப்பப்பா ...

## ரஜினியின் அடுத்த படம் என்ன?

**வைத்திலிங்கம் — மடு**

வியா அண்ணா

*கடவுள் இல்லையென்கிறார்களே சிலர்.*

கடவுள் இருக்கிறார் என்பதில் எனக்கு கொஞ்சமும் சந்தேகம் இல்லை ஆனால் ஏன் இப்படி இருக்கிறார் என்பதில் ரம்ப சந்தேகம் இருக்கிறது.

**துளசி — யாழ்ப்பாணம்**

Hi வியா அண்ணா

*உங்கள் முகவரி என்ன?*

ஏற்கனவே ஒருமுறை என் முகவரியைக் கொடுத்து ஏகப்பட்ட மொ (பெ) ட்டைக் கடிதங்கள் வந்ததால் என் குடும்பத்தில் ஒரே குழப்பமாகிவிட்டதே!

**தனுசன் — மருதனார்மடம்**

Hi Hi Hi

*ஒருவர் பொய் சொல்கிறார் என்பதை எப்படிக் கண்டு பிடிக்கலாம்?,*

பொய் சொல்லும் போது குழந்தைகளுக்கு சிரிப்பு வந்துவிடுகிறது பெரியவர்களுக்கு பதற்றம் வந்துவிடுகிறது.

**பிரபா — கோண்டாவில்**

Hi மாமா

*பொய்களில் மிகப் பயங்கரமான பொய் எது?*

தொலை பேசி அழைப்பு வரும்
ஹலோ !!!
நான் ஒரு முக்கியமான மீட்டிங்ல இருக்கிறன் அப்புறம் பேசுகிறேன்.



## " ஆரம்பக் கல்வி சுற்றாடல் அலகுசார் பாடல்கள்"




ஒரு விமர்சனப் பார்வை

நவீனத்துவத்தின் வளர்ச்சி வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பாரம்பரியம் பின்நோக்கிச் செல்கின்றதை நாம் கண்ணூடே கண்டு கொண்டுதான் இருக்கின்றோம். நவீனத்தின் அதிவேக வளர்ச்சிக்கு எமது இளைய சமூகம் ஈடுகொடுத்து அதனோடு சமாந்தரமாக ஓட நினைத்து மெதுவாக ஆரம்பித்து வேகம், அதிவேகம் என்கின்ற ஒழுங்கை மாற்றி எடுத்த எடுப்பிலேயே அதிவேகம் என்கின்ற உச்சத்தை எட்ட நினைப்பதனூடே பல சமூகப் பிறழ்வுகளை எதிர் நோக்கி நிற்கின்றது.
எமது மாணவர்களின் இத்தகைய செயற்பாடுகளை பாரம்பரிய ஆன்மீக கலை, கலாசார ஆன்மீக நெறியினூடே வழிப்படுத்த முடியும். ஊர்வணிகன்பற்று, இயக்கச்சியைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி ந.நகுலேஸ்வரி அவர்களின் ஆரம்பக்கல்வி சுற்றாடல் அலகுசார் பாடல்கள் எனும் சிறுவர் பாடல் நூலில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு பயனுள்ள பல பாடல்கள் உள்ளடங்கியுள்ளது.
பாடல்கள் மாணவர்கள் மிக இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் மிகமிக எளிமையாகவும் அறிவு பூர்வமாகவும் இருக்கின்றமை பாராட்டக் கூடிய விடயம். மழையின் மலர்கை என்னும் தலைப்பிலான பாடலில் சூரியன் நீரை ஆவியாக்கி மழையாய் பொழிவது முதல் வயல் நிறைவதுவரை விஞ்ஞான ரீதியான செயற்பாட்டை எளிமையான வரிகளினூடே சொல்லியிருப்பது நிச்சயமாய் சிறுவர் மனங்களில் ஆழப்பதியும் என்பதற்கு மாற்றுக் கருத்து கிடையாது. இவ்வாறு ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன் தரக் கூடிய வகையில் 30 பாடல்களை உள்ளடக்கி வெளிவந்திருக்கும் இந் நூல் நிச்சயமாய் ஆரம்பக் கல்வி மாணவர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடிக்கும். நவீனத்திற்குள் புகும் போது கூட நமது கலை, கலாசாரத்தினூடே புகுவோம். எம் சிறார்களுக்கு சிறப்பான அத்திபாரத்தை இடுவோம் அவ்வாறாயின் இவ்வாறான பதிப்புக்கள் எம் சிறார்களை வழிப்படுத்தும்.

-கஜா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வி கண்டவர் : ஆர்.கே

# கப்பல் பட்டம் மேலே பறக்குது அதேபட்டம் கடலிலும் ஓடுது



இணையத்தால் இழுத்து வரிந்து கட்டப்பட்டுள்ள இன்றைய இளைய தலை முறையினர்க்கு மத்தியில் 95 வயதில் தத்திதத்தி அடியெடுத்து வைத்து தள்ளாத நிலையிலும் கூட அந்தரத்திலும் ஆழியிலும் கப்பல் பட்டம் விட்டு அசத்தியுள்ளார் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த துரைசாமி நவரத்தினம்.

மூடி மூடி வைத்தாலும் விதைகள் எல்லாம் மண்ணை முட்டி முட்டி முளைப்பது உயிரியல் சாட்சி என்றான் கவிஞன் ஒருவன், விதையை நிலத்தினில் மூடி வைத்தாலும் அது வெளிப்பட்டே தீரும் என்பதைப்போன்று வானத்தில் பறக்கவிட்ட கப்பலை கடலில் நீந்த விட்டு முதுமையும் வறுமையும் திறமையை கட்டிப்போட்டு விடாது என்பதை தன்வாழ்க்கையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் நவரத்தினம்.

கப்பல் பட்டம் மேலே பறக்குது அதே பட்டம் கடலிலும் ஓடுது. இது தான் தலையங்கம் என்று கூறியபடி தன்னைப்பற்றி விபரித்தார் அவர். இதற்கு முன்பு 30 அடிப்பட்டம் விட்டு சாதனை படைத்த நான்.

முப்பதடிப் பட்டம் விட்டதற்காக வல்லை மாலுமி சங்கத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டேன்,

அதன் பின்பு எனக்கு கை கொடுத்து ஆளுநர் மாலை அணிவித்து இரு பரிசுகள் வழங்கப் பெற்றேன்.

சிறுவர்களுக்கும் வயோதிபர்களுக்கும் ஒரு பட்டம் விடும் நிகழ்வு இடம்பெற்றது. அதில் எனக்குத்தான் முதல் பரிசு கிடைச்சது என்றபடியே கடலிலும், வானத்திலும் விட்ட பட்டத்தை தான் ரொம்ப சிரமப்பட்டுத் தயாரிச்சதாக கூறினார்.

நான் இந்தப்பட்டத்துக்காக செலவு செய்ததை சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

நம்பிக்கையுள்ளது நீங்கள் சொல்லுங்கள் என்றபோது. சிறு புன்னகைக்குப் பின் இந்தப்பட்டத்துக்கு எனக்கு 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் முடிஞ்சுது என்ற போது , வருமானத்திற்கும் இந்தப்பட்டம் கட்டுவதற்கான செலவுக்கும் எங்கிருந்து பணம் வருகின்றது என்ற கேள்வியெழுவது நியாயமானதே அதை அவரிடம் கேட்டபோது,

சிறு பென்சன் கிடைக்குது என்றார். உடனே என்ன வேலை செய்தவர் என்பதை அறியத் தூண்டிய போது, தன்னைப்பற்றி விலாவாரியாகக் கூறத்தொடங்கினார்,

நாங்கள் எல்லாம் அந்தக்காலத்தில பாடசாலை விட்டு வந்த பிறகு, ரீசன் கீசன் எண்டு போனதில்ல, பட்டம் விடத்தான் போனோம். அப்ப இருந்த விளையாட்டு. பட்டம் விடுரதுதான், இப்ப பட்டம் விட யாரும் இல்ல, அந்தக்காலத்தில நாங்கள் விடுற பட்டத்தின்ர விண் காதப்பிளக்கும் எனக் கூறிக் கொண்டே சென்றவரை இடைமறித்து என்ன வேலை செய்தவர் என்று வினவிய போது,

ரோலர் படகில வேலை செஞ்ச நான் என்றார், அரசாங்க வேலையா அது என்ற போது ஆமாம் அந்தக்காலத்தில அரசாங்க வேலைதான், மீன்பிடித்திணைக்களத்திற்குள்ள தான் நாங்கள் வேலை செஞ்ச நாங்கள் அதுல தான் பெஞ்சன் வருகுது என்ற படியே தனது அனுபவத்தை தொடர்ந்தார்.

ரோலர் படகில வேலை செய்யிரதுக்கு முன்னாடி நான் வந்து பாய்க்கப்பலில வேலை செஞ்ச நான். 1942 ஆம் ஆண்டுக்கு முன்னாடி வல்வெட்டித்துறையில வாழ்ந்தவர்கள் கப்பல் ஓட்டிய தமிழர்கள். அப்போது நானும் வேலை செய்திருந்தேன். அப்ப அந்த நேரம் மனதில் பதிந்த கப்பல் தான். அந்த நேரம் என் மனதில் பதிந்த கப்பல் தான் இது. (மறுபடியும் கூறினார்) இந்த பட்டமும் முப்பதடியில விட்ட பட்டமும் தான் என்வாழ்க்கையில் பதிந்த பட்டம் என்று உரைத்தபடி அந்த நாளேல வாழ்க்கை எப்படியிருந்தது.

கப்பலில வேலை செய்யிற போது 20 ரூபாய் தான் மாதச்சம்பளம். மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் தான் சம்பளம் எண்டாலும் அந்த நாளேல இருந்த நின்மதி இப்ப இருக்காய்யா? இல்ல. அப்படி இக்கட்டான நிலையில இருக்கிது இப்ப வாழ்க்கை என்று பெரு மூச்சு விட்டபடியே சற்று அமைதியாகயிருந்து விட்டு.

இத நீங்கள் கட்டாயம் போடணும், என்னுடைய கல்யாணம், அப்பா ஒரு பொம்பிளைய கொண்டு வந்தாறு , பத்தாயிரம் குடும்பங்களில் கூட நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை வாழ்ந்திருக்க முடியாது ஐயா. அப்படி எங்களுடைய வாழ்க்கை இன்பகரமாகப்போனது . இதுவரைக்கும் நான் யாரோடையும் நீ,நான் என்று பேசியது கிடையாது ஐயா. அதுதான் முக்கியமான விடயம் என்று தனது மனதில் இருந்ததை வெளிப்படையாக கூறினார்.

கப்பல் செய்தியும் கல்யாணச் செய்தியையும் கட்டாயம் போட வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டார்.

தான் 13 வயசிலையிலே பெட்டிப் பட்டமும் பிராந்துப் பட்டமும் விட்டதாகவும் திருமணத்திற்குப் பின்னர் பட்டம் விடுவதை நிறுத்தியதாகவும் ஆனால் தனது மனைவி இறந்த பிற்பாடு மீண்டும் பட்டம் விட ஆரம்பித்ததாகவும் அதில் தனக்கு ஒரு ஆத்ம திருப்பி ஏற்படுவதாகவும் தாங்கள் அந்தக்காலத்தில விட்ட பட்டத்தின் விண் சத்தம் காது அடைத்து விடும் ஒலியை எழுப்பக்கூடியது என்றும் விபரித்தார்.



இப்ப எல்லாம் ஒரு சிலர் தான் பட்டம் விடுகினம் என்றும் சலித்துக்கொண்டார். விண் கட்டிப்பட்டம் விட யாரும் இப்ப விரும்புவது இல்லை என்றும் விண் தயாரிக்க இப்ப ஆட்கள் இல்லை என்றும் மனவருத்தத்துடன் வார்த்தைகளை வெளியிட்டதையும் பட்டம் மீது அவர் கொண்ட அளவு கடந்த விருப்பம் 95 வயதிலும் குறையவில்லை என்பதை உணரக்கூடியதாகயிருந்தது.

பட்டம் விடும் சேதியைப்பற்றி விபரித்துக்கொண்டு சென்றவர் வாழ்க்கையின் இரகசியத்தையும் 95 வயதிலும் நோய்நொடியின்றி தான் உடல் ஆரோக்கியமாக இருப்பதையும் கூறி நெகிழவைத்தார்.

மனக்கட்டுப்பாடுதான் தனது உடல் ஆரோக்கியத்திற்கு காரணம் என்றும் கப்பலில் தான் வேலை செய்த போதும் மதுவுக்கு அடிமைப்படவில்லை என்றும் சாப்பாடு, தண்ணியன்றி வேறு எதையும் தன்வாழ்நாளில் புசித்தது இல்லை என்றும் எல்லோரும் இத அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சொல்கின்றேன் என்று கூறி சிரித்தபடி விடைபெற்றார்.

# மூன்று முடிச்சு



தாலிக்கயிறை மூன்று முடிச் சாக போடுவதற்கு விளக்கம் இது.

முதல் முடிச்சு - பெண் தன் ஒழுக்கத்தில் உயிராக இருக்க வேண்டும்

2 ஆம் முடிச்சு - கணவனை மதித்து அவன் உயர்வுக்கு காரணமாக இருக்க வேண்டும்

3 ஆம் முடிச்சு - நல்ல குழந்தைகளைப் பெற்ற சிறந்த தாயாக பெருமை பெற வேண்டும்.

ஆக இந்த மூன்று காரணங்கள் தான் மூன்று முடிச்சு போடுவதற்கு காரணம் என்று சொல்கிறார்கள்.

பெண்ணுக்கு தாலிக்கயிற்றில் மூன்று முடிச்சு போடப்படுவது மூன்று விதமான உயர்ந்த சிந்தனையை அவளுக்கு நினைவுப்படுத்த அந்த மூன்று முடிச்சுகள் போடப்படுகின்றன.

ஒரு பெண் மண வாழ்க்கையில் அடியெடித்து வைக்க போகின்ற நேரம் மூன்று பேருடைய சிந்தனைகளும் ஆலோசனைகளும் தேவைப் படுகின்றன.

முதலாவது தாயின் ஆலோசனை.

2 ஆவது பாட்டி போன்ற உறவுள்ள மிகுந்த வயதான பெண்மணியின் ஆலோசனை.

3 ஆவது அந்த பெண்ணுக்கு சமவயதுள்ள இன்னோரு பெண்ணின் ஆலோசனை. இத்தகைய மூவர் தரும் ஆலோசனைகள் ஒரு பெண்ணின் மணவாழக்கையை சிறந்து விளங்க உறுதுணையாக அமைகின்றது.

ஒரு பெண்ணுக்கு முதலாவதாக தாயின் ஆலோசனையே மிக முக்கியமானது. வாழப் போகிற இடத்தில் பெண் தனது பண்பாலும், அடக்கத்தாலும் தன் கணவன், மாமன், மாமியார், கணவனின் உடன் பிறந்தவர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரையும் எப்படி கவர வேண்டும் என்கிற அடிப்படையான விடயத்தில் ஒரு தாயின் ஆலோசனை மிக முக்கியமானது.

அடுத்ததாக பாட்டி போன்ற மூத்தோர்களின் ஆலோசனைகள் கணவனிடத்தில் எப்படியெல்லம் அணுகி பழக வேண்டும் என்கின்ற நுணுக்கத்தையும் தங்களது மகிழ்ச்சியான வாழ்நாள் இடையே தனது உடல் நலத்தையும் தனது கணவனின் உடல் நலத்தையும் எப்படி பேணி பாதுக்காத்துக்கொள்ள வேண்டும் என்ற அறிவுரைகளையும் பிள்ளைப்பேறு காலங்களில் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்பனவே இவர்கள் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகள்.

கடைசியாக சக தோழிகளிடமிருந்து அந்தரங்க விசயங்களை வேடிக்கை விளையாட்டாக அறிய முடியும்.

இவ்விதமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கியமான ஆலோசனைகள் பெற்று நிலையான மணவாழ்க்கை சீர்தூக்கி நடத்த இந்த மூன்று முடிச்சுகள் அவளுக்கு நினைவூட்டல் சாதனமாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : பெற்றால்தான் பிள்ளையா
இசை : M.S.விஸ்வநாதன்
பாடியவர் : T.M.சௌந்தர்ராஜன்



நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி
நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி

கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்
கடமை இருந்தால் வீரன் ஆகலாம்
பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்
மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்
இந்த மூன்றும் இருந்தால்
தலைவன் ஆகலாம்

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி

அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்
இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம்
பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்
அன்பில் உயர்ந்தவர் யாரு? வள்ளலார்
ஆமா.. வள்ளலார்
அறிவில் உயர்ந்தவர் யாரு?வள்ளுவர்
ஆமா.. வள்ளுவர்
பாட்டில் உயர்ந்தவர் யாரு?பாரதியார்
ஆமா.. பாரதியார்

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி

**இப்பாடலை விரும்பிக் கேட்டவர் : V.சுகுமார் (மந்துவில்)**

**அன்பு வாசகர்களே !**

காலத்தால் அழியாத கானங்கள் பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண வதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

# தூக்கமின்மை புற்றுநோயை தோற்றுவிக்கும்

தூக்கமின்மை தொடர்பாக மனி தர்களிடம் காணப்படும் ஒட்டு மொத்த அலட்சியப்போக்கு மிகப் பெரிய அளவில் மனிதர்களின் ஆரோக்கியத்தை பாதிக்கும் ஆப்த்தாக உருவெடுத்திருப்பதாக சர்வ தேச மருத்துவ விஞ்ஞானிகள் கூட்டாக எச்சரித்திருக் கிறார்கள்.

ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் ஹாவர்ட், மான்செஸ்டர் மற்றும் சர்ரே பல் கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ் ஞானிகள் கூட்டாக இந்த எச் சரிக் கையை விடுத்திருக்கிறார்கள்.

மனித உடலின் இயற்கையான செயற்பாடான தூக்கம் மற்றும் விழிப்புத்தன்மையை கட்டுப் படுத்தும் மனித உடலியக்க செயற் பாட்டு கண்காணிப்புத்தன்மையை பாதிப்பை ஏற் படுத்தி வருவதாக எச்சரிக்கிறார்.

தூக்கமின்மை என்பது வெறும இரவு நேரப்பணியில் ஈடுபடுபவர் களை மட்டும் பாதிக்கும் பிரத்தியேக பிரச்சினை மட்டுமல்ல என் கிறார் கள் இந்த விஞ்ஞானிகள்.

இன்றைய நிலையில் இது ஒட்டுமொத்தமாக மனிதர்கள் அனை வரையும் பாதிக்கிறது என்றும், தொழில்நுட்பம் இதில் முக்கிய காரணியாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டுகிறார்கள் அவர்கள்.

தூக்கமில்லாமல் இருப்பதன் காரணமாக இதய நோய், நீரிழிவு நோய், உடல் பருமன், தொற்று நோயகள் மட்டுமல்ல, புற்று நோய்



ஆங் கிலத் தில் Body Clock, அதாவது உடல் கடிகாரம் என்கிற பெயரில் விஞ்ஞானிகள் அழைக் கிறார்கள்.

கண்ணுக்குத்தெரியாத, ஆனால மனித உடலின் அடிப்படைத் தேவையான தூக்கம் மற்றும் விழிப்புத் தன்மையை கட்டுப் படுத்தும் இந்த மனித உடல் கடி காரம் என்பது சுமார் 400 கோடி ஆண்டுகளாக படிப்படியாக உரு வான ஒன்று என் கிறார்கள் விஞ் ஞானிகள்.

உடலின் தூங்கும்பழக்கம் 400 கோடி ஆண்டுகள் பழைமை யானது.

ஒரு நாளின் 24 மணி நேரத் தில் சராசரியாக வெளிச்சமாக இருக் கும் பகல் 12 மணி நேரத்தில் மனித உடல் விழிப்புடனும் துடிப்புடனும் இருப்பதும், வெளிச்சமற்ற 12 மணி நேரமான இரவில் மனித உடல் உறக் கம் கொள்வதுமான நடைமுறை என் பது இன்று நேற்று உருவானதல்ல.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் னர் மனிதர்கள் தூங்கிய சராசரி நேரத்தைவிட, இன்றைய மனி தர்கள் ஒருநாளைக்கு இரண்டு மணி நேரம் குறைவாக தூங்குவ தாக கூறும் அவர், இந்த குறை வான தூக்கம் மனிதர்களின் உடல ஆரோககி யத்தில் மிகப் பெரிய களும் கூட ஏற்படலாம் என இநத விஞ்ஞானிகள் எச்சரித்திருக் கிறார்கள். தூக்கமின்மையின் மோச மான பாதிப்புக்கள் உட னடியாக உடலுக்கும் உங்களுக் கும் உறைக்காது என்பதால், தற்காலத்தில் மனிதர்கள் தூக்க மின்மை என்கிற பிரச்சினையை பெரிதாக எடுத்துக்கொள் வதில்லை என்றும் இந்த விஞ்ஞானிகள் சுட் டிக்காட்டுகிறார்கள்.

தூக்கமின்மை தொடர்பான மனிதர்களின் இந்த ஆணவ மிக்க அலட்சியப்போக்கு மாற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இந்த விஞ்ஞானிகளின் எச்ச ரிக்கை, இந்தியா உள்ளிட்ட தெற் காசிய நாடுகளுக்கும் பொருந்தும் என்கிறார் தூக்கமின்மை தொடர் பான மருத்துவ பிரச்சினைகள் குறித்து தொடர்ந்து எச்சரித்து வரும் சென்னையைச் சேர்ந்த நரம்பியல் மருத்துவர் லக்ஷ்மி நரசிம்மன்.

தமது அனுபவத்தின் அடிப் படையில்சொல்வதானால் சென்னை யல் சுமார் 30 சதவீதமான இளம தலைமுறையினர் ஏதோ ஒரு விதத்தில் தூக்கமின்மையால் வரும் பாதிப்புக்களுக்கு உள்ளா கியிருக்கிறார்கள் என்று தெரி வித்தார் அவர்.

## ஈழத்து கவிஞர்கள் வரிசையில்...




### இரண்டாயிரம் ஆண்டுகாலப் பழைய சுமை எங்களுக்கு

இரண்டாயிரம் ஆண்டு பழைய சுமை எங்களுக்கு
மூட்டை கட்டி அந்த முழுப்பாரம் பின்முதுகிற்
போட்டுக் குனிந்து புறப்பட்டோம் நீள்பயணம்.
தேட்டம் என்று நம்பி,சிதைந்த பழம் பொருளின்
ஓட்டை,உடைசல்,உளுத்த இறவல்கள்,
பீத்தல்,பிறுதல்,பிசகி உதிர்ந்தவைகள்,
நைந்த கந்தல்- நன்றாக நாறிப் பழுதுபட்டு
சிந்தி இறைந்த சிறிய துணுக்கு வகை -
இப்படி யான இவற்றையெல்லாம் சேகரித்து
மூட்டைகட்டி, அந்த முழுப்பாரம் கண்பிதுக்கக்
காட்டு வழியிற் பயணம் புறப்பட்டோம்.

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு.

மூட்டை முடிச்சு முதலியன இல்லாதார்
ஆட்டி நடந்தார், இரண்டு வெறுங்கையும்.
பாதை நடையின் பயணத் துயர் உணரா
மாதிரியில் அந்த மனிதர் நடந்தார்கள்.
ஆபிரிக்கப் பாங்கில் அவர்கள் நடந்தார்கள்.

மற்றும் சிலரோ வலிமையுள்ள ஆயுதங்கள்
பற்றி, முயன்று, பகை களைந்து,மேலேறி
விண்வெளியை எட்டி வெளிச்செல்லு முன்பாக
மண்தரையில் வான வனப்பைச் சமைப்பதற்கும்,
வாய்ப்பைச் சமனாய்ப் பகிர்ந்து சுகிப்பதற்கும்
ஏய்ப்பை ஒழித்தே இணைந்து நடப்பதற்கும்
நெஞ்சம் இசைந்தார்.
நிகழ்த்தினார் நீள்பயணம்.

பின் முதுகில் பாரப் பெருமை இல்லாதவர்கள்
இத்தனையும் செய்தார்.
இனியும் பல செய்ய
எத்தனிப்போம் என்றார்.
இவை கண்டும்,
நாமோ
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய
சுமை அத்தனையும்
சற்றே இறக்கிச் சலிப்பகற்றி, ஓய்வு பெற்றுப்
புத்தூக்கம் எய்திப் புறப்படவும் எண்ணுகிலோம்.


மேலிருக்கும் மூட்டை இறக்கி, அதை அவிழ்த்துக்
கொட்டி உதறி, குவிகின்ற கூழத்துள்
வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி,
அப்பாலே செல்லும் அறிவு விழிப்பென்பதோ
சற்றேனும் இல்லோம்.
சலிப்பும் வலிப்பும் எழ,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த,
ஊருகிறோம் ஊருகிறோம் - ஓயாமல் ஊருகிறோம்.

பரந்த உலகோர் பலரும், சுமையைச்
சுருங்கும் படியாகக் குறைத்துச் சிறிதாக்கிக்
கைப்பைக்குள் வைத்துக்
கருமங்கள் ஆற்றுகையில்,
வெற்றுக்கை கொண்டும் வியப்புகள் ஆக்குகையில்,
புத்தி நுட்பம்,செய்கை நுட்பம்,போக்கு
நுட்பம் என்பவற்றால்
சித்தி பல ஈட்டிச் செகத்தினையே ஆட்டுகையில்,
நாங்கள் எனிலோ நலிந்து மிகவிரங்கி,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர் படுத்த
ஊருகிறோம்,ஊருகிறோம் - ஓயவில்லை,
ஊருகிறோம்.

வேண்டாத குப்பை விலக்கி,மணி பொறுக்கி
அப்பாலே செல்லும் அறிவோ குறைவு
ஓ!
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்குக்
பண்பாட்டின் பேரால் பல சோலி எங்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள!



தன்னம்பிக்கையே வெற்றிக்கு முதற்படி எனலாம். பல வழிகளில் நாம் தன்னம்பிக்கையை இழக்க நேரிட்டாலும் கீழ்க்கண்ட எளிய முறைகளை நாம் பின்பற்றினால் நமது இலட்சியத்தை எளிதில்எட்ட முடியும்.

**ஆடை**

உங்கள் ஆடையில் கவனம் செலுத்த வேண்டும். மலிவு விலையில் ஆடைகள் பல வாங்குவதற்கு பதில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு அணியக் கூடிய நல்ல தரமான ஆடைகளை உடுத்தலாம். அவை எளிதில் கிழியாது. பார்க்கவும் எடுப்பாக இருக்கும். ஆடையை மாற்றி எளிய ஸ்டைலுக்கு மாறினால் நீங்கள் நினைப்பது நடக்கும். தன்னம்பிக்கையை ஊக்கப்படுத்தும் குணம் நாம் அணியும் ஆடைகளுக்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. உங்கள் காலணியிலும் கவனம் செலுத்தவும்.

**வேக நடை**

அட வேகநடையில்என்ன ஆகப் போகிறது என்று தானே நினைக்கிறீர்கள். ஒருவரது நடையை வைத்தே அவர் தெம்பாக வருகிறாரா, சோம்பலாக வருகிறாரா என்று கண்டு பிடித்து விட முடியும். சற்று வேகமான நடையை பார்த்ததுமே எதிரே இருப்பவருக்கு நம்மால்எதையும்சுறுசுறுப்பாகமுடித்து விட முடியும் என்றநம்பிக்கையை ஏற்படுத்தும். ஆகவே இன்றிலிருந்து 25 சதவிகித வேகத்தை உங்கள் வழக்கமான நடையில் கூட்டுங்கள்.

**நிமிர்ந்த நிலை**

எப்போதுமே நிமிர்ந்த நிலையில் நிற்கவோ, அமரவோ வேண்டும். தோள்கள தொங்கிய படியே வந்தால் அவரால் தன்னம்பிக்கையோடு எதையும் செய்யமுடியாது என பார்ப்பவர் எண்ணிவிடுவர். நிமிர்ந்து நிற்பது, தலையை தொங்கப்போடாமல் இருப்பது, எதிர் உள்ளவர்களின் கண்களை நேரே பார்த்து பேசுவது போன்றவை தன்னம்பிக்கை உள்ளது என்பதை சொல்லாமல் சொல்லும் குணமாகும். பார்ப்பவருக்கும் நாம் நல்ல தன்னம்பிக்கை உடையவர் என்ற உணர்வை உண்டாக்கும். ஆகவே சரியான நிலையில் நடப்பது, உட்கார்வது, நிற்பதுநல்லது.

**கேட்பது**

கேளுங்க! கேளுங்க! நல்ல பொசிடிவ் ஆன விடயங்களையும், தன்னம்பிக்கை ஊட்டும் நல்ல பேச்சாளர்களின் பேச்சை அடிக்கடி கேட்கவும். 30 - 60 நொடிக்குள் உங்களது இலட்சியம் மற்றும் எதிர் காலத்தைப் பற்றி சிறு குறிப்பு எடுத்து கண்ணாடி முன் நின்று தினமும் சப்தமாக பேசி பழகுங்கள். அல்லது எவ்வப்போது தன்னம்பிக்கையை தூண்ட வேண்டுமோ அப்போது இவ்வாறு பல முறை சொல்லிப் பார்க்கவும்.

**நன்றி**

உங்களது வாழ்க்கையில் எவ்வளவோ நல்லதும் வெற்றியும் கிடைத்திருக்கும். அவற்றை பட்டியல் இடுங்கள். அது உங்களது படிப்பாகட்டும், உங்களது திறமையாகட்டும், நல்ல உறவாகட்டும், அவ்வாறு பட்டியல் இடும் போது தான் எத்தனை விதமான நல்ல வாய்ப்புகள் மற்றும் தன்னமபிக்கை ஊட்டக்கூடிய விடயங்கள் நம் வாழ்வில் நடந்து உள்ளது என்பது தெரியும். இவை நமது மனச்சோர்வை அகற்றி தன்னம்பிக்கையோடு வாழ உதவியாக இருக்கும்.

**மனதார பாராட்டுங்கள்**

நம்மை நாமே "நெகட்டிவ்"வாக நினைக்கும் போது, மற்றவர்களை பார்ப்பதும், பேசுவதும் கூட நெகட்டிவ்வாக இருக்கும்! இதிலிருந்து விடுபட முதலில் மற்றவர்களை மனதார பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள். சின்ன விடயமாக இருந்தாலும், பெரிதாக பாராட்டுங்கள், மற்றவர்கள் பற்றி குறைகூறுவதை விடுங்கள். இப்படி நடந்து கொண்டால் உங்களை மற்றவர்களுக்கு பிடித்துப் போகும். இதனால் நமக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும். மற்றவர்களின் நல்ல குணாதிசயங்களை காணும் போது, நமக்குள்ளே மறைந்திருக்கும் நல்ல குணாதிசயங்களும் தானே தெரியவரும்.

**முன்னாலே**

பாடசாலை, கல்லூரி, விழா மற்றும் கூட்டங்களில் அமரும் போது, எப்போதும் பின் இருக்கையில் அமரவே விரும்புவர். இது தன்னம்பிக்கை குறைபாடாகும். ஆகவே இனிமேல் எங்கு சென்றாலும், முன் இருக்கையில் தைரியமாக உட்காருங்கள். இதனால் உங்கள் மனதில் உள்ள பயம் போய்விடும். தன்னம்பிக்கை கூடும்.

**பேசுங்கள்**

சிலர், பலர் கூடி இருக்கும் போது பேசவே தயங்குவர். மற்றவர்கள் நம்மை முட்டாள் என நினைத்து விடுவார்களோ என்ற பயம்தான். இனி பயம் இன்றி உங்கள் மனதில் பட்டதை தைரியமாக சபைகளில் எடுத்துப் பேசவும். இதனால் நமது எண்ணத்தில் ஒரு நம்பிக்கை பிறக்கும். மற்றவர்களும் உங்களை தலைவராக ஏற்றுக் கொள்வர். எல்லோரிடத்திலும் தைரியமாக பேச ஆரம்பித்தாலே, தன்னம்பிக்கை உங்களை தேடி, ஓடி வரும்.

**உடல்வாகு**

நமது உடையும், உடல் வனப்பும், தன்னம்பிக்கைக்கு கை கொடுக்கும். அளவுக்கு மீறி குண்டாகவோ, மிக ஒல்லியாகவோ இருந்தால் நம்மீதே நமக்கு நம்பிக்கை இழக்க நேரிடும். சக்தி குறையும். ஆகவே உடற்பயிற்சி செய்து, நமது உடலை பாதுகாப்பாக வைத்துக் கொண்டால், தன்னம்பிக்கை உங்களுக்கு கிரீடமாக அமரும்!

**நாடு**

நாடென்ன செய்தது நமக்கு என கேள்விகள் கேட்பது எதற்கு? நாம் என்ன செய்தோம் அதற்கு என்று சற்று சிந்தித்தால் பலன் கிடைக்கும். நம்மை பற்றியே எப்போதும் சிந்திக்கக்கூடாது. நம்மை சுற்றி உள்ளவர்கள் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் சிந்தித்து, நம்மை ஈடுபடுத்திக் கொண்டால், தன்னம்பிக்கை வளரும். இதனால் ஏற்படும் தன்னம்பிக்கை நமது எல்லாத் திறனையும் வெளிக்காட்ட உதவியாக இருக்கும் என சொல்லவும் வேண்டுமோ?

இவற்றை நாளைக்கு என தள்ளிப்போடாமல் இன்றே "இன்ஸ்டண்ட்" முடிவு செய்து, ஆரம்பியுங்கள் இத்திருநாளை. இனி வெற்றி உங்கள் பக்கமே!!

# கழிவகற்றல் கொஞ்சம் சிந்திப்போமா?



இன்று யாழ்.நகரில் எங்கு பார்த்தாலும் நிரம்பியுள்ளதோ குப்பைகள், போதனா வைத்தியசாலை விடுதிகளை நிரப்பியுள்ளதோ டெங்கு நோயாளிகள், சூழலிலோ பெருகியுள்ளது நுளம்புகள், அவை தருவதோ பல தொல்லைகளும், நோய்களும். இதை யார் குறைப்பார், இதை யார் தடுப்பார்.

அரசு இயந்திரம் தடுக்கும் என்று எதிர்பார்த்து ஏமார்ந்தே போனோம். அப்படியானால் என்ன செய்வது? தன் கையே தனக்கு தவி என்றார்கள் எம் முன்னோர்கள்.

ஒவ்வொரு குடியிருப்பாளரும் தம் சமூக பொறுப்புணர்ந்து நடந்திட வேண்டும். சமையலறை கழிவுகளையே உள்ளூராட்சி மன்றங்கள் அகற்றும், வெட்டப்படும் பெரிய மரக்கழிவுகள், வாழைத் தோட்டத்து வாழைக்குற்றிகள் போன்ற பெருமளவு கழிவுகளை வீதிகளில் போட்டால் உள்ளூராட்சி மன்றங்களால் அப்பெருமளவு கழிவுகளை அகற்றிட முடியுமா? அவ்வாறாயின் என்ன செய்திடலாம்?

இதற்கென பிரத்தியேகமாக வுள்ள கட்டணக்கழிவகற்றும் வசதியினை பாவித்திடலாமே. அவ்வாறு செய்ய விரும்பாவிடின் எம் முன்னோர்கள் அனுசரித்த பின்வரும் முறைகளில் ஏதாவது ஒன்றை சிந்தித்திடலாமே.

1. தாவரக்கழிவுகளான இலை, தளை, குழை, சருகுகளை பயன் தரும் மரங்களுக்கு பசளையாக்கிடலாம்.

2. தாவரக்கழிவுகளை தோட்டம், வயல்செய்வோருக்கு கொடுத்திடலாம் அல்லது எங்கள் வீட்டுத் தோட்ட பாவனைக்கு சேதன பசளையாக்கி பயனடுத்திடலாம்.

3. கடதாசி, பேப்பர், மட்டை கழிவுகளை வேறாக பிரித்து அதனை கொள்வனவு செய்வோரிடம் கொடுத்திடலாம்.

4. பிளாஸ்ரிக் போத்தல்கள், கண்ணாடி போத்தல்களை மீள் பாவனைக்கு உட்படுத்திடலாம்.

5. உடைந்த பிளாஸ்ரிக் கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் நிறுவனங்களிடம் ஒப்படைத்திடலாம். (பலாலி றோட் இலுப்பையடிச்சந்திக்கு அருகாமையிலும், நாயன் மார்க்கட்டிலும் இந் நிறுவனங்கள் இயங்குகின்றன.)

6. உடைந்த கண்ணாடி கழிவுகளை அதனை கொள்வனவு செய்யும் அமைப்புக்களிடம் கொடுத்திடலாம்.

7.உக்கக்கூடிய சேதன கழிவுகளை சேதனபசளை (Compost) ஆக்கிடலாம். இதை இரசாயன உரங்களுக்கு பதிலாக பாவிக்கின்ற போது எம்மை தாக்குகின்ற கொடூரமான புற்று நோய்களை தவிர்த்துக்கொள்ளலாம். அத்தோடு நிலம், நீர், வளி மாசடைவதையும் தடுத்திடலாம் அல்லது குறைத்திடலாம்.

8. இறந்த வளர்ப்பு மிருகங்களை பயன்தரும் மரங்களின் கீழ் புதைத்திடலாம்.

9. வெள்ள வடிகால்கள் வெள்ளம் வடிந்தோட அமைக்கப்பட்டவையே அவற்றினுள் கழிவுகள், குப்பைகள், (வாழை) குற்றிகள் போடுவதை பொறுப்புடன் தவிர்த்திடலாம்.

**சமூக வைத்திஜி**

10. கழிவு இரும்புகளை இரும்பு சேகரிப்போருக்கு கொடுத்திடலாம்.

இவற்றின் மூலம் குப்பைகளின் அளவை குறைத்திடலாம். மீள் பாவனையை ஊக்குவித்திடலாம். மீள் சுழற்சிக்கு உதவிடலாம். இவை நீண்ட கால அடிப்படையில் தொடர்ந்து நடைபெறும் போது யாழ்.நகரின் எழில் பெருகுவதுடன எம்மை அச்சுறுத்துகின்ற தொற்று நோய்களும் குறைந்தே போகும்.

எனவே சிந்தை தெளிவோம்... பொறுப்பாய் நடந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் தினப்பரிசுகள்

வன்னியூர் எஸ்.ஆர்.ராம்கி
கிளிநொச்சி

சிறு கதை

காதலர் தினத்தை இனிமையாக்கிய திருப்தியில் காதலர் இதயங்கள் காலை முதல் மாலை வரை காதலருடன் அருகிருந்து பேசிய காதலின் கனிமொழி வார்த்தைகள் காதலர் கண்ணில் கனவாகக் குடியேறும் பௌர்ணமி நிலவும் காதலரை வாழ்த்திய திருப்தியில் குளிரில் நடுங்கி முகிலினுள் மறையும் நள்ளிரவு நேரம் ஓலையினால் வேயப்பட்ட குடிசையின் திண்ணையில் இருந்த விமலுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை.

காரணம் காலையில் காதலர் தினத்தில் கண்டு மனதோரம் காதலியாய் நினைந்துருக வைக்கும் அளவு விமலின் மனதினைக் கவர்ந்த கண்மணியின் ஒவ்வொரு அசைவும் விமலின் கண்களில் நினைவாக மலர அதனைக் கவியாக்க எழுத்தாளரான விமல் இமைகளை மூடி அருகில் தீபமேற்றிக் கொண்டிருக்கும் குப்பி விளக்கு ஒளியைப் போல கண்மணியை சந்தித்த நினைவுகள் விழியோரம் உலா வர தன் எழுதுகோலால் அரும்பு மீசையை வருடியபடியே கண்மணியின் ஞாபகத்தில் சிறகின்றிப் பறந்தான்.

நகரின் பிரதான வீதியில் வாகனங்கள் அசுர வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தன. எழுத்தாளன் விமல் காதலர் தினத்தில் காதல் ஆக்கங்களால் ததும்பிய பத்திரிகைகளில் தன் ஆக்கங்களும் அலங்கரித்து உள்ளதா? எனும் ஆவலில் பத்திரிகைகளை புரட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அதே சமயம் நகர்ந்த வாகனங்களில் ஓர் மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறந்து வீதியோரம் சென்று கொண்டிருந்த சிறுவனை முட்டித் தள்ளியபடி மனிதாபிமானம் இல்லாத இரும்பு இதயம் போல மோட்டார் சைக்கிளில் வந்தவன் வந்த வேகத்தினைவிட மின்னலென தோன்றி மறைந்தான். தரையில் விழுந்த சிறுவனின் தலையில் காயத்தால் இரத்தம் குபீரெனபாய்ந்து கொண்டிருந்தது.

பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்த விமல் ஓடிச் சென்று சிறுவனை அணைத்துத் தூக்கியவன் தன் கைக்குட்டையால் காயத்தை மெல்லக் கட்டி தனது சைக்கிளிலே சிறுவனைக் கொண்டுபோக முடியாது எனக் கருதியவன் நகர்ந்த வாகனங்களின் உதவியை நாடினான்.

என்ன செய்ய? பலனேதுமில்லை. நகர்ந்த மனிதர்கள் சட்டத்துக்கு பயந்து மனிதாபிமானத்தை மறந்தவர்களாய்ச் சென்றனர்.

உதவி செய்ய எவரும் முன்வராது வேடிக்கை பார்க்கும் மக்களைப் பார்த்து எழுத்தாளனான விமல் மக்களின் மனநிலையை எண்ணிவெட்கித்தலைகுனிந்தான்.

அப்பொழுது கூட்டத்தின் சப்தத்தை அமைதியாக்கிய படியே "இந்த ஸ்கூட்டியில் சிறுவனை ஏத்துங்க..." என சங்கீத மெல்லிசையாய் கூட்டத்திலிருந்து ஒரு குரல் விமலின் மனதில் சந்தோசத்தை வரவழைத்தது.

ஆவலுடன் திரும்பிப் பார்த்தவன் அழகென்னும் தேவதை புடைவை எழில் சூடி அன்புக் கரம் நீட்டினாள். திகைத்து நின்ற விமலிடம் "என்ன பாக்கிறீங்க சிறுவனை கொஸ்பிற்றல் கொண்டு போகணும் பிளட் வெளியேறிக் கொண்டிருக்கு...! டைக்ல ஏத்துங்க என விமல் அருகே ஸ்கூட்டியை கொண்டு வந்து நிறுத்தினாள்.

சிறுவனை தோளில் சுமந்தபடியே தன்மனதினுள் சுயநலம் பார்த்துக் கொண்டிருந்த மானிரில் பொதுநல எண்ணம் கொண்டு தன் மனதை மயக்கிய மங்கையின் பெயரை அறிய ஆவல் ஒரு புறம், தயக்கம் ஒரு புறம் என உள்ளத்தில் வந்த பேச்சை உதட்டோரம் மறைத் தான்.

வைத்தியசாலை வந்ததும் சிறுவனின் உயிரைக் காப்பாற்ற நினைத்தவனாய் ஆண்கள் நோயாளர் விடுதியில் சேர்த்தான். அங்கு சிறுவனைப் பரிசோதித்த டாக்டர் "சிறுவனின் உயிருக்கு ஆபத்தில்லை..." என நம்பிக்கை தரும் பதிலைக்கேட்டு மனதோரம் மகிழ்ந்து சிறுவனுக்கு உணவு வாங்குவதற்காக பத்திரிகை வாங்க வைத்த ஐம்பது ரூபாயைக் கொண்டு கடைக்கு செல்ல ஆயத்த மானவனின் இதயம் வலித்தது. "சீ... சீ... சீ... நான் நன்றி கெட்ட ஜீவன் எனக்கு உதவிய அந்த பொண்ணுக்கு ஒரு நன்றி கூட சொல்லவில்லையே! வீதியில் வேடிக்கை பார்த்த மனிதரைவிட நான் கேவலமானவன்" எனத் தனது கண்கள் கலங்க கவலைப்பட்டவனாய் அருகில் இருந்த சிற்றுண்டிச்சாலைக்கு செல்ல தயாரானவன் ஓர்கணம் அதிர்ந்தான்.

"சேர் இதில சிறுவனுக்கு சுவீட், ஃப்ரூட்ஸ் எல்லாம் இருக்கு. சிறுவனுக்கு இப்ப கெல்த்தியா இருக்கா...?" என முகத்தில் துளிர்த்த வியர்வையை புடைவை முந்தானை தலைப்பால் துடைத்தவளாய் பழக் கூடையை விமல் முன்னே நீட்டினாள். எவ்வளவு பெரிய எழுத்தாளன் என்றாலும் மனதினைக் கவர்ந்த மங்கையின் முன்னே பேச வார்த்தை கூட வராமல் அவளின் கண்களை மட்டும் பார்த்த வண்ணம் சிலைபோல நின்றான்.

"என்ன ஆச்சு உங்களுக்கு ஒண்ணுமே பேச மாட்டீங்களா...? வெறி சொறி நான் கிளிநொச்சி தனியார் கம்பனியில வேர்க் பண்ணுரன் இன்னைக்கு மோனிங் வேர்க் பண்ண போகத்தான் சிறுவனைக் காப்பாற்ற துடிச்ச உங்க நல்ல மனசப் பார்த்து கெல்ப் பண்ணினேன். சிறுவன் இப்ப கெல்த்தியா இருக்கானா...?" என மூச்சு விடாமல் பேசி முடித்து இமைகளை பல தடவைகள் அசைத்து புன்னகையுடன் விமலின் விழிகளை பார்த்த வண்ணம் கூறினாள். அவளின் புன்முறுவலும் விழிகளின் அசைவும் இடைவிடாது பேசிய இனிமைக் குரலையும் கேட்ட விமல் ஏதோ பெறி கொடுத்தவனாய்" சிறுவன் நல்லா இருக்கான் பயப்பட வேண்டாம் உள்ளே வாங்க என பழக் கூடையை வாங்கியவாறு சிறுவன் உள்ள விடுதியை அடைந்தான்.

அங்கே தனிமையில் சிறுவன் அழுது கொண்டிருந்தான். மெதுவாக ஓடிச்சென்று சிறுவனின் நெற்றியை வருடியவளாய் கண்மணி இஞ்சபாரு குட்டி அழாதப்பா நாங்கள உனக்கு இருக்கோம். உங்க வீடு எங்க இருக்கின்னு காட்டினால் அங்கிளும் அன்ரியும் உன்ன உங்க வீட்ல ட்றாப் பண்ணுவோம். எங்க ஒருக்கா அன்ரியைப் பார்த்து சிரிங்க" என குழிகள் விழச்சிரித்த கண்மணியின் அழகிய முகத்தைக் கண்ட சிறுவன் கவலை மறந்து சிரித்தான்.

கண்மணியின் அன்பான அரவணைப்புக் கண்டு கண்கள் கலங்கிய விமலின் இளமையில் தன்னை விட்டு போரிலே உயிர் நீத்த தாய், தந்தையின் பாச அரவணைப்பை அவள் உருவில் கண்டு மகிழ்ந்து தன் வாழ்விற்கு ஏற்ற காதல் காவியத்தின் நாயகியாக அவளை நினைத்து கண்மணியை காதலியாக மனதில் தேர்ந்தெடுத்தான்.

"என்னங்க போகலாமா...? இங்க நின்னா எனக்கு மெடிசன் வாங்கும் நிலை வந்திடும் போல இருக்கு என சிறுவனை அணைத்துச் சென்று ஸ்கூட்டியில் ஏற்றி தானும் உட்கார்ந்தாள். விமலும் மெல்லிய புன்னகையுடன் சிறுவனை அணைத்து உட்கார்ந்தான்.

ஸ்கூட்டி பிரதான வீதிப் பக்கம் நகர்ந்தது. தென்றலில் மெல்லக் கலைந்த கண்மணியின கூந்தல் விமலின் முகத்தில் தென்றலுடன் ஸ்பரிசமாய் இருந்தது.

"நீங்க ரொம்ப சைலன்ட் போல. ஒண்ணுமே உங்களைப் பற்றி சொல்லல. நான் தான் ரொம்ப பேசிட்டன் போல என்ற வாறு கலைந்த கார்மேகக் கூந்தலை முன்னே விட்டு சரி செய்தாள்.

"அப்படி இல்ல கண்மணி என் பெயர் விமல். நான் ஒரு எழுத்தாளன். பத்திரிகைகளுக்கு சிறுகதை, கவிதைகள் எழுதிறது என என் வாழ்வு கலைப்பயணத்துடனே தொடருது" என தொண்டையை செருமியபடி பதிலளித்தான்.

ஸ்கூட்டியின் வேகத்தைக் குறைத்த கண்மணி ஆச்சரியம் கலந்த குரலில் "நீங்களா பத்திரிகையில் ஆர்ற்றிக்கல்ஸ் எழுதிற விமல். உங்க கவிதைக்ளை கல்லூரியில்படிக்கிறகாலம்தொடங்கி இன்றுவரை தவறாது விரும்பிப் படிப்பேன்.

நீங்க இந்த சிறுவனுக்கு கெல்ப்பண்ணும் போதே உங்க நல்ல மனசைப் புரிந்து கொண்டேன்" என ஏதோ சொல்ல முயன்ற கண்மணியின் பேச்சினை இடை மறித்த சிறுவன் வீதியைக் காட்டி "அன்ரி அங்க நிக்கிறாங்க என் டாடி ... மம்மி" என சந்தோசமாக கத்தி "தாங்ஸ் அன்ரி தாங்ஸ் அங்கிள்" என விமலையும் கண்மணியையும் முத்தமிட்டே சிறுவன் தாய், தந்தையிடம் ஓடிச்சென்று அரவணைத்தபடியே நின்றான்.

சிறுவனைக் கண்டு தழுவிய இளம் தம்பதியினர் சிறுவனுக்கு முத்தம் இட்டு தமது பாசமழையைப் பொழிந்தனர். சிறுவனை அணைத்தவாறே சிறுவனின் தாய் விமல் கண்மணியை நோக்கி "தாங்ஸ் உங்களுக்கு நாங்க எப்படி நன்றி சொல்வதின்னு தெரியல்ல. விபத்து நடந்த இடத்தில இருந்தவங்க உங்கள் இருவரின் நல்ல மனசைச் சொன்னாங்க. வெறிவெறி தாங்ஸ்ங். அந்த இளம் தாய் அழுதாள்.

"நீங்க உங்க குழந்தையையும் கவனமாகப் பாருங்க, உங்க இருவருக்கு இன்றைய காதலர் தினப் பரிசாக உங்க குழந்தையை நாங்க ஆபத்தில இருந்து மீட்டுத் தந்திட்டோம் எனச் சிறுவனின் கன்னத்தை கிள்ளியவனாய் விமல் தன் மனதில் புதைந்த காதலைச் சொல்ல வழியில்லாது கண்மணியை நோக்கி நன்றி கண்மணி உங்க நல்ல மனசு எல்லோருக்கும் இருந்தால் எங்க தமிழ் பண்பாடு வளரும்" எனக் கூறியபடி காதலர்தின நாளில் கண்மணியின் ஞாபகங்களை மனதிலே காதலர்தினப் பரிசாய்ப் பெற்றவனாய் தனது சைக்கிளில் ஏறி கிராமத்தின் வீதியினை நோக்கி மிதித்தான்.

சொல்ல வந்த காதலை மனதிற்குள் அடக்கிய கண்மணி விழிகளினை நனைந்த கண்ணீரை துடைத்தவளாய் விமலின் கலைப்பணிக்கு நல்ல ரசிகையாய் விமல் எழுதிய காதல் காவியங்களை சுவாசமாய் வாசித்து நேசிக்க தனது ஸ்கூட்டியை நூல் நிலையத்திற்கு திருப்பினாள்.

கண்மணியின் நினைவுகளில் மலர்ந்த விமல் காதலர் தினத்தில் கண்மணியை சந்தித்த இன்பமான ஒவ்வொரு கணங்களையும் கவிதைகளாய் ஆக்கி காதலர்க்கு பரிசளிக்க நினைத்தவனாய் காகிதச்சாரலில் கவிதை பூக்களை மலர விட்டான் கண்மணியின் ஞாபகங்களுடனே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக்கலசம்



## தாய் மனசு

என் மண்ணைப் போல
சொர்க்கம் ஏது...
என் தாயைப்போல
பந்தம் ஏது...
அவ மனசைப்போல
பூமி ஏது...
மடி தந்து என்னைத்
தூங்க வைத்திடுவாள்...
மனதில் என்னைச்
சுமந்து நிற்பாள்
என்னில்
காயம் கண்டதும்
தன்னில்
வலி கொள்வாள்
தன்பசி போக்காள்
என்பசி போக்கிடுவாள்
அழகாக
என்னை உடுத்திடுவாள்
அழுக்கை உடுத்தே
தான் வாழ்ந்திடுவாள்
படிகள் பல ஏறினாள்
என்னைப் படிக்க வைக்க
சுமைகள் பல சுமந்தாள்
கள்ளி முள்ளும்
பூப்பூக்கும்
அவ... கைபட்டால்...
காய்ந்த தரிசும்
முளை விட்டெழும்பும்
அவ பாதம் பட்டால்...
மனசில் அவள் போல
தாயுமில்லை...
மண்ணில் அவள் போல்
தெய்வமுமில்லை...
**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**



## நெஞ்சத்தில் உள்ள அழகுதான் அழகு

கருங்கூந்தல் மேகங்களாகும்
வளைபுருவம் வில்லென வியக்கும்
கருவிழிகள் கயல்தனை நிகர்க்கும்
நாசிகள் இரண்டும் தனித்துவமாகும்
சிறு உதடு சில்லெனக் குளிரும்
முத்துப் பல் வரிசை முத்தென மிளிரும்
சங்குக் கழுத்து உவமையை ஒக்கும்
தங்கச் சங்கிலி மின்னி மறையும்
நகிலிரண்டும் குன்றென நிமிரும்
அணைக்கும் கரங்கள் இறுகப் பற்றும்
சிறுவிரல்கள் மெல்லத் தழுவும்
வாழைத்தொடையும் அல்குலும்
பிரமன் படைப்பின் தனித்துவம்
கணைக்கால் முழந்தாள் சிறு விரல்கள்
நடக்கும் உவமை அன்ன நடை
சேலைக்குள் குடியிருக்கும் பெண் உருவம்
அழகுதானே கவிஞர் சொன்னார்
புகழ்ச்சியொன்றும் புதிதல்ல
புலவர் சொன்னதும் பொய்யல்ல
எல்லா அழகும் அழகல்ல
நெஞ்சத்தின் அழகே அழகு
**குலனையூர் பாவரன்**
**வவுனியா**

## இமயம்தொட


உன்னுடைய நிபந்தனைகள்
எப்போது
உனதாக்கப்படுகிறதோ?
அப்போதே-நீ
சுயநலவாதியாகி விடுகிறாய்
உனக்காய் உழைக்காமல்
ஊருக்காய் உழை
அப்போது ஊர் தழைக்கும்
உன் பெயர் முளைக்கும்
நீ பொதுநலவாதியாய்...

**மாவை.நா.கஜேந்திரன**

## தாய்

அள்ளித் தந்தாய் முத்தம்
அன்பு மழை பொழிந்தாய்
அறிவுச் சுடர் ஏற்றுவித்தாய்
அகிலத்தில் நான் வாழ பல வழிகள்
சொல்லித் தந்தாய்
கருவறையில் நானிருக்க
கஷ்டத்தில் நீயிருந்தாய்- நான்
பூமிதனில் வந்திடவே- என்னை
புகழ்ந்தாய் கண்டு மகிழ்நதாய்
பாலுக்காக இரத்தத்தை உருக்கித் தந்தாய்
பக்குவமாய் வளர்த்தெடுக்க பத்தியமாய்
நீயிருந்தாய்
சுட்டுவிரல் பிடித்து "அ" கற்றுத் தந்தாய்-நான்
சூப்பும் விரலில் வேப்பெண்ணெய் தேய்த்தாய்
மூவேழு வருடங்கள் முழு மூச்சாய்
வளர்த்தெடுத்தாய்
உடல், உள காயங்களை வார்த்தைகளால்
மாற்றுவித்தாய்-மறவேன் தாய்
உயிருள்ள வரை
**வை.கவிஆர்வலன்**
**ஸ்கந்தபுரம்**

# மௌனத்தின் தேடல் -239



### தண்ணீரும் கண்ணீரும்

நிலமிழந்து எதிரியிடம்
நன்னீரிழந்து எண்ணெயிடம்...
வளம் குன்றியே
வாழ்வு நகர்த்திட
தள்ளாடும் குடாநாட்டில்
புகுந்திட்ட வெள்ளாடும்
வேட்டு வைக்குதே
குழாய் நீரிலும் பங்கு கேட்டு
**அராலியூர் சோ.சிவகுமாரன்**

### தெய்வீகம்

படைத்தவனை உனக்கு
தெரியாது வளர்த்தவனை
தெய்வம் என்கின்றாய்
அவன் தன் பசியும் தாகமும்
தீர்க்க உன்னை வளர்க்கின்றான்
உன் தாகமும் பசியும் போக்க
அவன் மறந்துவிடும் போது
படைத்தவன் படி
அளப்பான் என்று
நீ உணர்கின்றாய்
**க.அபர்ணா, வட்டுக்கோட்டை**

### தண்ணீர்ப்பஞ்சம்

நம் யாழ்ப்பாணத்தில் இன்று
தலைதூக்கியுள்ள கழிவு
எண்ணெய்ப் பிரச்சினையால்
மனிதர்களுக்கு மட்டுமல்ல
மிருகங்களுக்கும் நல்ல
குடிநீர் கிடைப்பது
குதிரைக் கொம்பாகவே
உள்ளது
**சு.ஜெயரூபன், பருத்தித்துறை**

### நீர் வேண்டும்

நிலத்திலும் ஒயில் நீர்
குளம் குட்டைகள் வற்றிவிட்டன
குழாயில் கூட நீர் இல்லை
உன் அப்பன் தலை இருக்கும்
கங்கையைக்கவிழ்த்துவிடு முருகா
நம்நாடு சிறப்பதற்கு
நாம் தண்ணீர் குடிப்பதற்கு
**குலனையூர் பாவரன், வவுனியா**

### அவல நிலை

கடும் வரட்சியினால்
நீர் நிலைகள் வற்றிப்போக
சோகத்தோடு தாகந்தீர்க்க
நீர்தேடி அலைந்த ஆடு
சுவரில் பொருத்தியிருந்த
குழாயில் சொட்டும் நீரை
வாயால் ஏந்திப் பருகும்
அவலநிலை ஆட்டுக்கு மட்டுமல்ல
இன்று மனிதருக்குந்தான்
**துரை,தென்மட்டுவில்**

### காலம் மாறுதே!

ஆற்று நீரும் சேறாகி
ஊற்று நீரும் வற்றிப்போக
நீர் இன்றி அமையாது
உலகென்றே
நிஜமுணர்ந்தவர் மனம்
தேறிவிட்டனர்
ஆனாலும்
மண்ணைத் தொட
மழை வருமா என்று
விண்ணைப் பார்த்த
காலம் போய்
குழாய் அருகில் நிற்கணும்
நீர்வரும் வரை
அந்த ஆட்டைப் போல
**பு.பிரசாந், அல்லைப்பிட்டி**

### போராட்டம்

குடியிருக்கும் திசை எங்கும்
குடிநீர்ப் பொதுநோக்கு
அதிரும் வார்த்தைகளில்
அளவில்லாத் தேனூற்று
நாவரண்டு சாவரினும்
நமக்கேது நிரூற்று
இயற்கையிலும் மனித
வெறியாட்டம்
மாறாதோ அரசியல்
சதிராட்டம்
வாராதோ இதில்
நீரோட்டம்
தீராதோ எங்களின்
வாழ்வுரிமைப் போராட்டம்
**சாந்தையூர் வினிஸ்**
**பண்டத்தரிப்பு**

### உணர்வாயோ

வாய்விட்டு கேட்க நாதியில்லா
ஜீவன் ஒன்று தாகத்தால்
தவிக்கிறது தெரிகிறதா மானிடா?
உன் மதிகெட்ட செயலால்
மண்ணுக்குள் மண்ணாக பல
உயிரினங்கள் மாண்டு போகும்
கொடுமையை நீ உணரும்
காலம்தான் எப்போதடா?
**யோ.காண்டீபன், மானிப்பாய்**

### ஆ...

ஊரே ஒயில் மயமாகி
ஓலமிடுகின்றோம் நீருக்காய்
வந்தநீர்கூட நாவை நனைத்திடவா
ஆ...பாவமிந்த ஆடு! சாபமிடுகிறது
மிருகசாபம் பொல்லாது
வதைக்கும் உரியவரை!
**உயிரோவியன்**


### மரணித்த மனிதம்

களைத்து வந்து
கண்மூடி அனுபவித்து பருகிய
எம் நிலத்தடி நீர்
இன்று நஞ்சானதால்
நன்னீருக்காக நாம் குடத்தோடு
மனிதம் மரணித்து விட்டதை
இந்த ஐந்தறிவு ஜீவனுக்கும்
புரிந்துவிட்டது காண்
**லீலா சிவவடிவேல்,**
**இணுவில்**

### தண்ணீரில் மாசு கலந்ததனால

கொளுத்தும் மாசி வெயிலில்
வருத்தும் தாகத்தில் தவிக்க
தொண்டைக்குழாய் வரண்டு
நீர்க்குழாய் கண்டு மகிழுது ஆடு
அன்று நீரில் மாசு கலந்ததால்
இன்று தண்ணீர்க்குழாய்
வரண்டதை
தாகத்தில் இவ் ஆடு அறிந்திடுமோ
**எஸ்.ஆர்.ராம்கி,**
**கிளி/ இந்துக் கல்லூரி**

# மௌனத்தின் தேடல் -240



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில்
தோன்றும் கவிதைள் மற்றும்
வியாசர் பதிலுக்கான
கேள்விகளை

**ஆசிரியர்**
**மௌனத்தின் தேடல்**
**சங்குநாதம்**
**இல.3,2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**


எனும் முகவரிக்கு
04.03.2015 ஆம் திகதிக்கு
முன் அனுப்பி வைக்கவும்.
குறிப்பு: குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்

**ஆசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கடந்த 15 பெப்ரவரி 2015 ஞாயிற்றுக்கிழமை, புதுஅப்பா என்ற தலைப்பில் உண்மைச்சம்பவத்தைத் தழுவிய கதை ஒன்று வெளிவந்தது. 22 பெப்ரவரி 2015 ஞாயிற்றுக்கிழமை, சம்பவ விபரிப்பு தொடர்பில் பேரா சிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் நேர்காணல் வெளிவந்தது. இந்த வாரம் அதன் தொடர்ச்சி வெளிவருகின்றது.**



3. தாயின் நிலை தொடர்பில் உங்கள் கருத்து என்ன? எங்கள் பிரதேசங்களில் சமூக கலாசாரக் கட்டமைப்பில் "பன்முகத் தொடர்பு" சற்று அதிகரித்துள்ளதே ஏன்?

சம்பவ விபரிப்பின்படி தாயின் நிலை கவலைக்குரியதாகவே இருக்கின்றது. ஆரம்பத்தில் கணவனின் குடிப்பிரச்சினையும் அதனால் ஏற்பட்ட வீட்டு வன்முறையால் வாங்கிய அடிகள், காயங்கள், உளத்தாக்கங்கள் என்பவற்றிலிருந்து விடுபடவும் முடியாமல், மூன்று குழந்தைகளுடன் மிகவும் கஷ்டமான வாழ்க்கை வாழ்கின்றார். அவருக்குச் சரியான ஆதரவும், பொருளாதார உதவியும் கட்டாயம் தேவை. பெண்களைப் பொறுத்தவரையில் குடும்பத்தைத் தலைமைதாங்கவும், நிலைத்து நிற்க வைக்கவும் பொருளாதார ரீதியில் உறு தியாக்கவும் பொறுப்பான ஆண் ஒருவனின் தேவை கட்டாயமாகின்றது. கோகுலனின் அம்மாவுக்கும் அந்தத் தேவை இருக்கின்றது. தேவைகளின் அடிப்படையில் இவ்வாறான வேறு ஓர் நபருடன் தொடர்பு கொள்வதற்கு சூழ்நிலை ரீதியாகத் தள்ளப்படுகின்றார். கோகுலனுக்கும் ஒரு தகப்பன், ஆண் முன்மாதிரி பல காரணங்களுக்காகத் தேவைப்படுகின்றது. அதே நேரத்தில் இதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியும் இருக்கின்றது.

கணவனை இழந்த, பிரிந்த பெண்களில் சிலர் தங்களுடைய சொந்தக்காலில் நின்று பிள்ளைகளை வளர்த்துப் பெரியவர்களாக்கி நல்ல நிலைக்கு கொண்டு வந்த சம்பவங்களுமுண்டு. எல்லோராலும் அவ்வாறு வரமுடியும் என்று கூறமுடியாது. ஒரு சிலர் வாழ்வின் குழப்பகரமான நிலையில் தடுமாறி, தவறான முடிவுகள் எடுக்க முயலுகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் "பன்முகத் தொடர்பு" என்பது சற்று அதிகரித்திருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். யுத்தம் முடிந்து அனைத்து சமூக கலாசாரக் கட்டமைப்புக்களும் சிதறிப் போன நிலையில் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள், குடும்ப சமூக உறவு எல்லாம் குழம்பி "தறிகெட்ட நிலை" தான் இப்போது இருக்கின்றது. தமிழ் சமூகத்தில் முன்னரும் பன்முகத் தொடர்புகள் இருந்திருக்கின்றன.

காலத்துக் காலம் இந்நிலை ஏற்பட்டாலும் தற்போது சற்று அதிகரித்த நிலையே காணப்படுகின்றது. இந்நிலையை அறிஞர்கள் பலரும் பலகோணங்களில் பார்க்கின்றனர். பல காரணங்களைச் சொல்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் ஒடுக்கப்பட்டு, அடக்கு முறைகளுக்குள் வாழும் சமூகங்களில் இவ்வாறான பன்முக தொடர்புகள் ஏற்படுகின்றது. உதாரணமாக அமெரிக்காவில் கறுப்பின மக்கள் சமூக பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டே வாழ்கின்றனர். அவர்கள் குடும்பங்களில் பன்முகத் தொடர்பு என்பது மிகவும் சாதாரண விடயமாகி விட்டது. அதே போன்று அவுஸ்திரேலியாவிலும் சமூக பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டு வாழ்கின்ற பூர்வீகக்குடிமக்களிடமும் இந்நிலை இருக்கின்றது. தமிழ் நாட்டிலும் நீண்ட தூர வியாபாரங்களைச் செய்கின்ற வியாபாரிகள் பல தொடர்புகளுடன் ஒவ்வொரு பிரதேசத்திலும் மனைவி பிள்ளைகள் என்று தங்கிச்செல்லும் வழக்கம் காணப்படுகின்றது.

இந்நிலை குடும்பக்கட்டமைப்பைச் சிதைக்கின்றது. இதனாலேயே தறிகெட்ட நிலை என்று நாம் குறிப்பிடுகின்றோம். தமிழர் வரலாற்றில் இந்நிலை ஏற்கனவே இருந்ததாயினும், தற்காலத்தில் வேறு பல காரணங்களின் செல்வாக்கும் இத்தகையதொரு மாற்றத்துக்கு காரணமாகின்றது. உதாரணமாக நவீனமயமாக்கலைக் குறிப்பிடலாம்.

மேற்கத்தேய நாடுகளில் 50 சதவீதமான திருமணங்கள் விவாகரத்தில் முடிவடைகின்றன. குடும்பம், திருமணம், உறவுமுறை என்பவற்றில் பாரம்பரியம் மறக்கடிக்கப்பட்டு மாற்றங்கள் நிறைந்த வாழ்க்கையில் முடிகின்றது.

உளமருத்துவத்துறையில் மேற்கத்தேய நாடுகளில்," உங்களுக்குத் திருமணமாகி விட்டதா?" என்ற கேள்வியைக் கேட்காமல்," உங்களுக்கு ஓர் துணை இருக்கின்றதா?" என்று கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.இந்நிலைக்கு நவீனமயமாக்கலும் ஓர் காரணமாகின்றது.

அவற்றைவிட, நமது சமூகத்தில் ஆரம்பகாலத்திலிருந்த கூட்டுக்குடும்ப முறை உடைந்து போனதும் மிக முக்கிய காரணமாகின்றது. தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, மாமா என்று நிறைந்த உறவுகளோடு கூட்டுக் குடும்பமாக இருந்த நாட்களில் ஒருவருக்கு பிரச்சினை என்றால் மற்றவர் உதவி செய்வதும், ஒருவர் தவறான வழியில் செல்லும் போது மற்றவர் ஆலோசனை வழங்குவதும் கட்டுப்படுத்தி வைத்திருப்பதும் என்று ஓர் சிறந்த கட்டமைப்பு நிலவியது. தற்போதைய காலங்களில் தனித்து வாழ்வது ஓர் சாதாரண விடயமாகிவிட்டதால், இவ்வாறாக பன்முகத்தொடர்புகளும் மக்களால் சாதாரணமாக ஏற்கப்படும் விடயமாகிவிட்டது. தனித்து கீழ்மட்ட மக்களிடம் மாத்திரம் இப்பிரச்சினை காணப்படுகின்றது என்று சொல்ல முடியாது. உயர்மட்ட மக்களிலும் இப்பிரச்சினை காணப்படுகின்றது.

அதிகரித்த தொலைபேசிப்பாவனையும், இலகு தொழில்நுட்ப முறையும் இவ்வாறான பன்முகத் தொடர்பு அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகின்றன. தொலை பேசிகளில் முகம் தெரியாத நபர்களுடன் உரையாடி அவர்களோடு தொடர்பு கொண்டு, நம்பிக்கையற்ற தற்காலிக உறவுகளை மேற்கொண்டு, ஏமாந்து கண்ணீர் வடிக்கும் நிலைகளும் காணப்படுகின்றன. தற்கால நவீனம் தொலை பேசிக்கூடாக புதிய உறவுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முறையை இலகுபடுத்திவிட்டது. அண்மையில் சிரேஷ்ட உளவளத்துணையாளரான திருமதி. சிரோமி அவர்கள் எழுதிய "முகவரியில்லாத மிஸ்கோல்கள்" ("நான்" சிறப்பிதழ், மலர் 37, 2012) என்ற கட்டுரையில் இந்நிலைபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் மற்றும் உளவியல் பிரிவு மாணவர்களால் உருவாக்கப்பட்ட "ஓணான்" என் கின்ற குறும் படத்திலும் இது தத்ரூபமாகக் காட்டப்பட்டுள்ளது.

தற்காலத்திரைப்படங்களும், தொலைக்காட்சி சீரியல்களும் சொல்லும் முக்கிய கருப்பொருள்கள் பல்முகத் தொடர்பு பற்றியதாகவே இருக்கின்றது. அவற்றைப் பார்த்து மக்கள் பழக்கப்படுத்திக் கொள்கின்றார்களோ? என்ற கேள்வியும் இருக்கின்றது. அதாவது, அதிகளவு தொலைக்காட்சிகளோடு தொடர்புடைய மக்கள் மனதளவில் இவ்வாறான விடயங்கள் சாதாரணமானவை என்ற நிலைக்கு வருவதற்கு சந்தர்ப்பங்களுண்டு. அதற்காக ஊடகங்களை குற்றம் கூறமுடியாது. ஒருவகையில் பார்த்தால் நம் பிரதேசங்களில் நடக்கின்ற விடயங்களைத்தான் ஊடகங்கள் பிரசுரிக்கின்றன, ஒளி,ஒலிபரப்புகின்றன. அவை நிலைமையைப் பொதுப்படுத்துகின்றன. மக்கள் பார்த்து அனுபவித்து இன்பம் துய்க்க விரும்பும் விடயங்களை வெளியிடுகின்றன. எனவே இங்கு நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பிருக்கின்றது. இந்நிலையிலிருந்து நாம் விடுபடுவதற்கு அனைவரும் பொறுப் புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய கட்டாயத்திலிருக்கின்றோம்.

சிதைந்து போன நம் நிஜங்களைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையிலிருக்கின்றோம். ஊடகங்கள், எழுத்தாளர்கள், பெரியோர்கள் என்று அனைவரும் இந்நிலையிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலிருக்கின்றோம்.

4. கோகுலனின் புதிய அப்பாவின் நிலை தொடர்பில் உங்கள் கருத்துக்களைக் கூற முடியுமா? பெற்றோர் இவ்வாறு இருந்தால் பிள்ளைகளின் நிலை எப்படியிருக்கும்?

கோகுலனின் முன்னைய அப்பாவின் மதுபாவனை செயற்பாடுகள் வீட்டு வன்முறையையும், பிள்ளைகளுக்கு பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளன. குடும்பத்தலைவனின் குடிப்பிரச்சினை செயற்பாடு தனித்து அவனை மாத்திரமன்றி மொத்தக்குடும்பத்தின் பொருளாதார, சமூகக் காரணிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமன்றி பிள்ளையின் ஆளுமையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எதிர்காலம் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எந்தவொரு பிள்ளைக்கும் தந்தை முக்கிய முன்மாதிரியாக இருப்பார். ஆனால் தந்தை இவ்வாறான குடிப்பழக்கத்துடன் இருப்பதும், வன்முறையிலீடுபடுவதும் என்பது பிள்ளைக்கு ஓர் சிறந்த முன்மாதிரியைத் தராது. அதே வேளை தந்தையைப் போலவே பிள்ளையும் எதிர்காலத்தில் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி தன்னுடைய மனைவியை காயப்படுத்தவும் கூடும். இந்த விடயத்தில் கோகுலனின் தவறு எதுவும் இல்லை. அவனுக்கும் நல்ல அம்மா, அப்பா, சமூக ஆதரவு,முக்கியமாக அந்த ஆசிரியரின் ஆதரவு என்பன கிடைத்தால், அவன் அவரைப்போன்ற முன்மாதிரிகளைப் பின்பற்றினால் வாழ்வில் நல்ல நிலைக்கு வர சந்தர்ப்பமிருக்கின்றது. ஆனாலும் தாயின் இத்தகைய பன்முகத் தொடர்பு அவனை பாதகமான சூழ்நிலைக்குக் கொண்டு செல்லும் வாய்ப்பிருக்கின்றது. தாயை அந்நிலையிலிருந்து வெளிக் கொண்டு வருவதுடன், குறித்த உளவளத்துணை ஆசிரியரின் கண்காணிப்பில் மாணவன் கல்வி கற்பானாயின் அவனால் பாதகமான சூழ்நிலையிலும் நல்ல எதிர்காலத்தை அடைய முடியும்.

உண்மையில் பிள்ளைகளின் உளத்தாக்கங்களுக்கு பெற்றோர்களின் சில அக்கறையற்ற தன்மையும் காரணமாகின்றது. முந்தைய காலங்களில் பெற்றோரின்"அர்ப்பணிப்பு" தன்மையானது சிறந்த மாணவர்களையும் கல்விமான்களையும் ஆளுமை மிக்க பிள்ளைகளையும் உருவாக்கியது. தற்காலத்தில் பெற்றோர் சிலர் தங்களுடைய சந்தோசங்களையும், எதிர்பார்ப்புக்களையும் ஈடுசெய்ய நினைத்து பிள்ளைகளின் பிரச்சினைகளைக் கவனிக்க மறக்கின்றனர். அர்ப்பணிப்பு மிக்க பெற்றோரை காண்பது அரிதாகவே உள்ளது. இதனால் பிள்ளைகள், தவறான பாதைகளில் போவதோடு, மனச்சுமைகளுடன் பாடசாலைக்குச் செல்கின்றனர். அதிக மணித்தியாலங்கள் பாடசாலையில் கழிப்பதால் ஆசிரியர்களின் கவனிப்பு பிள்ளைகளுக்கு கட்டாயம் தேவைப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு தமது மாணவரில் ஏற்படும் இவ்வாறான பாதகமான விளைவுகளைத் திருத்த வேண்டிய பாரிய பொறுப்பும் இருக்கின்றது. அர்ப்பணிப்பு மிக்க பெற்றோர், பாடசாலையில் உளவளத் துணை ஆசிரியரின் கவனிப்பு என்பவற்றின் வட்டத்தில் இருக்கின்ற பிள்ளைகள் தவறிழைப்பதற்குச் சந்தர்ப்பமில்லை.

குறிப்பு : இவ்வாறான தொடர்புகளை "பலதார மணம்" எனக் குறிப்பிடுவது பொருத்தமானதல்ல. அவைகள் உண்மையில் திருமணங்கள் அல்ல. தொடர்பு மட்டுமே. மேற்கத்தேய நாடுகளில் சொல்லப்படுகின்ற பன்முகத் தொடர்பினர் (Multiple Partners) என்று சொல்லப்படுவது பொருத்தமாக இருக்கும்.

**வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.**

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்;**
**Email: psych@sltnet.lk Face book : Shanthiham**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் எண்ணங்கள் என்ன சொல்கின்றன?

யாழ். தர்ஷி



நண்பா! நீஎன்னநினைக்கின்றாய் என்று யாராலும் சொல்ல முடியாது. உன் எண்ணங்களைப் பற்றியும் யாராலும் கூறிவிடமுடியாது. ஆனால் நீஎண்ணும் எண்ணங்களைச்செயல்வடிவில்வெளிப்படுத்தும் போது, எல்லோரும் கவனித்துவிடுவார்கள். நீ நாளைய உலகின் தலைவன் ஆகையால் எல்லோரும்உன்னை உற்று நோககிக் கொண்டிருப்பார்கள்.

எனவே உன் எண்ணங்களின் சேர்க்கை உன் ஒருவனைமட்டும் சுற்றிக் கொண்டிருக்காமல் உலகைச் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். அதற்காக, நீ நன்மை தரும் எண்ணங்களை உள்ளத்தில் இருத்தவேண்டும்.

ஏன் நான் யாருக்கும் தீமை தரும் விதத்தில் சிந்திப்பதில்லையே? என்று நீ கூறும் சத்தம் என் காதுகளுக்குகேட்கின்றது. அதுவும் உண்மைதான்.

உன் எண்ணங்கள் எப்படியிருக்கவேண்டும் தெரியுமா? நல்லெண்ணமுள்ளஒருவன்,

1. எதைப்பற்றியும் பாராட்டும் எண்ணமுடையவன், மனதில், கருணை உள்ளமும் அரவணைக்கும் அன்பும் குடிகொள்ளும். அதன் வெளிப்பாடுகள்தான் உன் செயற்பாடுகளாக இருக்கும். உன்னைச்சுற்றியுள்ள உறவுகளோடு கலகலப்பானசுமுகமான உறவும் இனிய சூழ்நிலையும் இருக்கும்.

2.தூய்மையானஎண்ணமுடைய ஒருவனிடம், நிதானமும் சுயகட்டுப்பாடும் நிறைந்த குணங்கள் நிறைந்திருக்கும். அவனுடைய சூழல் எப்போதும் அமைதியும் சாந்தமும் நிறைந்ததாக இருக்கும்.

3.தைரியமும், தன்னுடைய காலில் நிற்கும் தீர்மானமும் கொண்ட ஒருவனிடம், ஆண்மை நிறைந்த நேர்மை நிறைந்திருக்கும். அவன் வாழ்வில் வெற்றிகள் பலவற்றைக் கண்டு சுதந்திரம்மிக்க செல்வம் நிறைந்த வாழ்க்கையை வாழ்வான்.

4. செயற்படத்தூண்டும் துடிப்பானஎண்ணங்கள் நிறைந்த ஒருவனிடம், உற்சாகமும் உருவாக்கும் முயற்சியும், துடிப்பும் நிறைந்து காணப்படும். அவன் எப்போதும் புதிதாக ஒன்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டேயிருப்பான்.

5. சாந்தமான எண்ணமும் மன்னிக்கும் மனநிலையும் கொண்ட ஒருவனிடம், பொறுமையும் நிதானமும் நிறைந்திருக்கும். அவனால் பாதுகாப்பு நிறைந்த சூழலையும் நீடித்த நிம்மதியையும் கொடுக்க முடியும்.

6.தன்னலமற்ற எண்ணங்களும் அன்பானஎண்ணங்களும்கொண்ட ஒருவனிடம், சேவை மனப்பாங்கும், சமுதாயநோக்கும் இருக்கும். அவனிடம் நிச்சயமான, நிரந்தமான, அபரிமிதமான, உண்மையான செல்வம் நிறைந்திருக்கும்.

இத்தகைய நல்லெண்ணங்கள் தான் உன்னைச் சுற்றியிருக்கும் என்றுநான் நம்பவிரும்புகின்றேன். இருந்தாலும், தீயஎண்ணங்கள் எவை என்று உனக்கு சொல்லவும் ஆசைப்படுகின்றேன். ஏனென்றால், தவறுதலாகவும் தீய எண்ணங்கள் உன்னைநோக்கி வந்துவிட்டால் அவற்றைத் தவிர்த்துவிடு.

மிருக உணர்வுகளும், இச்சைகளும் நிறைந்த ஒருவன், குடிபோதை மயக்கத்திலும், பெண்களைதேடித்தேடி அலைந்து கொண்டும், அநியாயப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பான். அவன்நோய்நிறைந்த அழிவுவாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருப்பான்.

தூய்மையற்ற எண்ணங்கள் நிறைந்த ஒருவன், தளம்பலான நிலையில், குழப்பமான மனநிலையுடன் இருப்பான். அவன் கவனத்தைத் திசைதிருப்பும் எண்ணங்களுக்கு அடிமையாகிதனக்கு விரோதமான செயல்களைச் செய்யத் தொடங்குவான்.

பயம், சந்தேகம், முடிவெடுக்கத் தயங்கும் மனநிலைகொண்ட ஒருவன், பலவீனம் நிறைந்தவனாகவும், உறுதியற்றவனாகவும் இருப்பான். அவன் வாழ்க்கையில் தோற்றுப் போனவனாகவும், அடிமை வாழ்க்கை அல்லது யாரையாவது சார்ந்து வாழத் தொடங்குவான்.

அதிகசோம்பல் நிறைந்த ஒருவன், சுத்தமில்லாத பழக்க வழக்கங்களையும், நாணய மற்ற தன்மையையும் கொண்டிருப்பான். அவன் வாழ்க்கையில் தவறானபாதையில் செல்லமுயற்சிப்பான் அல்லதுபிச்சை யெடுத்து வாழமுற்படுவான்.

வெறுப்பும்கண்டனமும்நிறைந்த ஒருவன் ,எப்போதும் பிறரைக் குற்றஞ்சாட்டிக் கொண்டு வன்முறை நிறைந்த பழக்கவழக்கத்தைக் கொண்டிருப்பான். அவன் மற்றவர்களுக்குமனக்காயங்களையும், உடற்காயங்களையும் மற்றவர்களைப் பழிவாங்கும் மன நிலையையும் கொண்டிருப்பான்.

சுயநலமானஎண்ணங்களைக் கொண்ட ஒருவன், எதிலும் சுயலாபம் பற்றிநினைப்பவனாகவும், எப்போதும் தன்னை முன்னிறுத்துபவனாகவும் இருப்பான். அவனுடைய வாழ்வில் எந்தப்பக்கம் பார்த்தாலும் துன்பம் நிறைந்து காணப்படும்.

நண்பா நீ ஓர் இளைஞன் அல்லவா? அதனால் உன் வாழ்வில் உயர்ந்த குணங்களை உன்னுடன் இணைத்துக் கொண்டு, தன்னம்பிக்கைதரும் எண்ணங்களை நிரப்பிக் கொண்டு, உன் வலிமையை வளம்படுத்தும், வளர்த்துவிடும் எண்ணங்களை விதைத்துவிடு. எப்படி வரவிரும்புகின்றோமோ, தொழிலிலும் சரி, சொந்த வாழ்விலும் சரி, அதை மனதில் படம்பிடித்துவைத்துக் கொள். துணிவுடன் காரியங்களைச் செய். பயப்படவேண்டாம்.

நீ உன்னோடு உன் நிழலை கொண்டு செல்வதுபோல, உன்னோடுநல்லெண்ணங்களை அழைத்துச்செல்லப்போகின்றாயா? அல்லது மாடுகளுக்குபின்னர் வண்டில் சுமைதாங்கிச் செல்வதுபோல தீய எண்ணங்களைச் சுமந்து செல்லப் போகின்றாயா? முடிவை நீயே எடுத்துக் கொள். நண்பா! பாட்ஷா திரைப்படத்தில் ரஜினிசொல்லும் வசனம் உனக்குநினைவிருக்கா?

ஆண்டவன் கெட்டவனுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பான் ஆனால் கையை விட்டுவிடுவான். நல்லவனுக்கு அள்ளிக் கொடுக்க மாட்டான் ஆனால் கையைவிட மாட்டான்" உண்மையில் இந்த உலகில் தீயஎண்ணமும் தீய சேர்க்கையும்கொண்ட ஒருவனுக்கு சாதகமாகஎல்லாம் நடைபெறுவதுபோல தெரியும் ஆனால் அது உண்மைகிடையாது. மேலெழுந்தவாரியாக அப்படிதெரியலாம். எண்ணத்தில் தூய்மை உள்ள ஒருவன் இறுதியில் வெற்றி பெறுவான்.

உனக்குபுரியும் என்று நினைக்கின்றேன். நேர்மையான எண்ணங்கள் தந்தவெற்றியை கடைசிவரை சரியாககண்காணித்துக் கொண்டிருப்பவன் தான் உண்மையில் ஜெயிக்கின்றான். மகாபாரதத்தில் ஆரம்பத்திலிருந்து தன்னுடைய சூழ்ச்சியால் அனைவரையும் வெற்றிகொண்டு வந்த சகுனிகடைசியில் பரிதாபகரமாக இறக்கின்றான்.

அவன் இறக்கும் பகுதிபார்ப்பதற்குமனதுக்கு எவ்வளவு நிம்மதியாக இருந்தது. அதேபோல உன் மனதில் இருக்கின்ற தீய எண்ணங்களை நீ கொலைசெய்யும் போது உனக்கும் நிம்மதியாக் இருக்கும்.

நண்பா! உன் எண்ணம் விண்ணைத் தொடவேண்டுமென்றால், உன் வியர்வைமண்ணைத் தொட வேண்டும்.

# குளிர் காலத்தில் உடல் பராமரிப்பு

குளிர்காலத்தில் சருமத்தின் மென்மை, நெகிழ்வுத் தன்மையைப் பராமரிக்கச் சோப்புக்குப் பதிலாகக் கடலை மாவைப் பயன்படுத்தலாம்.

குளிர்காலத்தில் கூந்தல் அதிகமாக வறண்டுவிடுவதுடன் ஓரங்களில் வெடித்துப்போய் அதிக முடி இழப்பை ஏற்படுத்தும். இதைத் தவிர்க்க இளஞ்சூடான ஒலிவ் எண்ணெயைத் தலையில் தடவி, மசாஜ் செய்து ஊறிய பிறகு குளிக்கலாம்.

சிலருக்குக் குளிர் தாங்காமல் தசைப்பிடிப்பு ஏற்பட்டு வலி உண்டாக வாய்ப்புகள் உண்டு. வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு உப்பு கலந்து, அதைத்துணியால்நனைத்துப் பிடிப்பு ஏற்பட்ட பகுதியில் ஒத்தடம் கொடுத்துவந்தால் நிவாரணம் கிடைக்கும்.

குளிர்காலத்தில் பலருக்குப் பாதங்களில் உண்டாகும் பனி வெடிப்பால் ஏற்படும் வலி நீங்க எளிய மருந்து, 50 கிராம் நல்லெண்ணெயை நன்றாகப் புகை வரும்படி சூடு செய்து அதில் 2 அங்குல நீளமுள்ள மெழுகுவர்த்தியைத் தூள் செய்து போடவும். சூடு ஆறியதும் அதை எடுத்து வெடிப்பின் மீது தடவினால் விரைவில் வலி நீங்கிவிடும்.

குளிர்காலத்தில் பாத வெடிப்பு ஏற்படுவதைத் தடுக்க, ஒரு பக்கெட் சுடுநீரில் சிறிது உப்பு போட்டுக் கால் பாதங்களைப் பத்து நிமிடங்கள் வைத்து, பிறகு பாதங்களை நன்கு துடைத்துவிட்டு மாய்சுரைசிங் கிரீம் அல்லது ஹேண்ட் அண்ட் பாடி லோஷனைத் தடவிவரலாம்.

குளிர்காலம் வரும்போது, மூட்டு வலியும் வரும். வேப்ப எண்ணெயைச் சூடாக்கி வெற்றிலையை வதக்கித் தடவி மூட்டில் பத்துபோல் போட்டுக்கொண்டால் சிறிது நேரத்தல் வலி குறையை ஆரம்பித்து விடும்.

குளிர் காலத்தில் ஏற்படும் தலை வலியைப் போக்க ஒரு பாத்திரத்தில் சிறிதளவு வெந்நீர் விட்டுச் சுக்கை உரசி விழுதாக எடுத்து நெற்றியில் பற்றுப் போடலாம்.

குளிர்காலத்தில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்படும் பொதுவான பிரச்சினை உதடு வெடிப்புக்கு கரும்பு சக்கையை எரித்து அதை வெண்ணெயில் குழைத்து உதட்டில் தடவலாம். இதனால் உதட்டு வெடிப்பு குணமாவதோடு, கூடுதல் மென்மை கிடைக்கும்.

குளிக்கப் பயன்படுத்தும் வெந்நீரில் ஒரு டீஸ்பூன் தேங்காய் எண்ணெய் சேர்த்துக் கொள்ளுங்கள். இது குளிப்பதால் ஏற்படும் ஈரப்பதன் இழப்பை மீண்டும் பெற இது உதவும். மிகவும் சூடான நீரில் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால், மிகவும் சூடான நீரில் குளிப்பதால் உடலின் இயற்கையான எண்ணெய்ப் பசை குறைந்துவிடும்.

தேநீர் தயாரிக்கும்போது அத்துடன் சிறிதளவு துளசி இலைச் சாறு, சர்க்கரைக்குப்பதிலாகத் தேன் ஆகியவற்றைக் கலந்து அருந்தினால்ஜலதோஷம் நீங்கும்.

குடிப்பதற்கு வெந்நீர் காய்ச்சும் போது சில துளசி இலைகளுடன் சிறிதளவு ஓமம் போட்டுக் காய்ச்சினால் மணமாக இருப்பதுடன்



ஜலதோஷம் பிடிக்காது.

தொண்டையில் கரகரப்பு, வலி இருந்தால் சமையல் உப்பை வெதுவெதுப்பான நீரில் கரைத்து வாய் கொப்பளிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலி மாமா

# பேராசை பெரும் நஷ்டம்



ஒரு குக் கிராமத்தில் பழம்பெரும் சிவன் கோவில் இருந்தது. இக்கோவிலில் விக்கிரகங்கள் இருந்தன. சிவன், அம்மன், பிள்ளையார். இக்கோவிலை அவ்வூரின் பண்ணையார் (ஜெமீன்தார்) பரிபாலித்து வந்தார். இக்கோவிலுக்கு அண்மையில் கந்தன் என்ற ஏழை வசித்து வந்தான். இவன் பண்ணையாரின் வயலில் கூலி வேலை செய்து வந்தான்.

இக்கந்தன் தினசரி அதிகாலையில் எழுந்து சிவன் கோவிலுக்குச் சென்று கூட்டிக் கழுவித் துப்பரவு செய்வது வழக்கம். ஜெமீன்தார் தான் விரும்பிய எப்போதாவது ஆலயத்துக்கு வந்து வணங்குவார்.

ஜெமீன்தார் கோவிலுக்கு வருகிறார். அப்போது கோவிலுக்குள்ளே பேச்சரவம் கேட்கிறது. ஜெமீன்தார் அப்படியே மறைந்து நின்று பேசுவதைக் கேக்கிறார். உமையம்மை சிவபெருமானைப் பார்த்து; சுவாமி! என்று விழித்தார். சிவபெருமான் என்ன தேவி என்று கேட்டார்? இந்த ஏழைக்கந்தன் தினசரி இங்கு வந்து தொண்டு செய்கின்றான். அவனுக்கு ஏதும் பொருள் கிடைக்கச் செய்யுங்கள் சுவாமி என்று கூறினார். இதைக் கேட்டுப் புன்னகைத்த சிவன் குழந்தாய் என்று பிள்ளையாரை அழைத்தார். என்ன அப்பா என்று அருகில் சென்றார். பிள்ளையார் நாளைக்கு விடிவதற்கு முன் ஏழைக் கந்தனுக்குப் பத்தாயிரம் பொன் சேர்பித்து விடு என்றார்.

இவைகள் யாவையும் கேட்ட ஜெமீன்தார் எனக்குக் கொடுக்கச் சொல்லி உமையம்மை சொல்லவில்லை. இந்தக் கந்தனுக்குக் கொடுக்கும்படி சொல்லி இருக்கிறார். நான்தானே அபிஷேகங்கள் திருவிழாக்கள் எல்லாம் செய்கின்றேன். எனது மூதாதையர்கள்தானே இக்கோவிலையும் கட்டினார்கள் என்று மனதுள் சொல்லிக்கொண்டு, கந்தனுக்குப் பணம் கொடுப்பதையும் பார்ப்போம் என்று கூறி கோவில் கும்பிட வந்தவர் கும்பிடாமல் வந்த சுவடு தெரியாமல் தனது வீடு நோக்கி விரைந்தார்.

வீடு சென்று பணப் பெட்டியைத் திறந்து கொஞ்சப் பணத்தை ஒரு பட்டுத் துண்டில் கட்டிக் கொண்டு கந்தன் வீடு நோக்கி விரைவாக நடந்தார்.

கந்தன் ஜெமீன்தாரைக் கண்டதும் பயந்து நடுங்குகிறான். ஜெமீன்தார் சொன்னார் இன்றைக்கு நீர் எனது வீட்டுக்கு வேலைக்கு வரவேண்டாம். வாரும் உம்முடைய வீட்டுக்கே போவோம் என்று கையைப் பிடித்து, தான் கொண்டு சென்ற பணமுடிப்பை கந்தனது கையில் திணித்தார். கந்தன் கேட்டான் இது என்ன? ஜெமீன்தார்! சொன்னார் இது பணமுடிப்பு. இன்று உமக்கு ஒரு தொகை பணம் கிடைக்கும். அதை எனக்குத் தாரும். இந்தப் பண த்தை நீர் வைச்சிரும் என்று.

கந்தன் நடுங்கும் குரலில் கூறினான், ஐயா! நான் பரம ஏழை. உங்களது வயலில் வேலை செய்தால்தான் எனக்குக் கூலி கிடைக்கும். ஆகவே, எனக்கு வேறு பணம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. இப்பண முடிப்பு எனக்கு வேண்டாம் என்று கூறி அழுதான்.

ஜெமீன்தார் அவனைத் தேற்றி கையில் பிடித்து அவனது ஓட்டைக் குடிசை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அன்று பகல்ப் பொழுது கழிந்தது. கந்தனுக்கு எசமானின் செயல் ஒன்றும் புரியவில்லை.

இரண்டு பேருக்கும் அன்று சாப்பாடு தண்ணி ஒன்றும் கிடையாது. சாமக் கோழி கூவியது. கந்தனை அங்கும் இங்கும் நகர்வதற்கு ஜெமீன்தார்விடவில்லை. தனக்குப் பக்கத்திலேயே இருத்தி வைத்திருந்தார். ஏனென்றால், பணம் கிடைத்தால் தனக்குத் தெரியாமல் மறைத்து விடுவான் என்று.

ஜெமீன்தார் மிகக் கவலையுடன் சிந்திக்கிறார். கடவுள்களும் பொய் சொல்கிறதோ? விடிவதற்கு முன்தானே பத்தாயிரம் பொன் கந்தனுக்குச் சேர்ப்பிக்கும்படி சிவன் கூறினார். எதற்கும் கோவிலுக்குப் போய்ப் பார்ப்போம் என்று கோபத்துடன் கந்தனைக் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகக் கோவிலுக்குச் சென்றார்.

இப்போதும் கோவிலுக்குள் பேச்சரவம் கேட்கின்றது. ஜெமீன்தார் நின்று பேச்சைக் கேக்கிறார். சிவபெருமான் பிள்ளையாரைப் பார்த்துக் கேட்டார், குழந்தாய் ஏழைக்கந்தனுக்குப் பத்தாயிரம் பொன் சேர்ப்பித்து விட்டாயா என்று. பிள்ளையார் சொன்னார் அப்பா அரைவாசி சேர்ப்பித்துவிட்டேன். மற்ற அரைவாசியும் இப்போது சேர்ப்பிப்பேன் என்றார். இதைக் கேட்ட ஜெமீன்தாருக்குக் கோபம் கோபமாக வந்தது. கந்தனின் கையை விட்டு விட்டு கோவிலுக்குள் ஓடிப்போனார். அங்கு நிசப்தம் நிலவியது. மூன்று தெய்வங்களும் சிலையாகிவிட்டன. ஓடிச்சென்ற ஜெமீன்தார் ஆத்திரத்தில் பிள்ளையாரின் தும்பிக்கையில் பிடித்துக்கொண்டு கேட்டார் கந்தனுக்குப் பணம் நீ கொடுத்தாயா? பொய் ஏன் சொன்னாய்? நான் எவ்லோ பணம் கொடுத்தேன் என்று.

பிள்ளையார் சரித்துக் கொண்டு கதைக்கத் தொடங்கினார், பேராசை கொண்ட பித்தனே! கந்தனுக்குப் பத்தாயிரம் பொன்னுக்குக் கணக் காக மிகுதிப் பணம் நீ இப் போது கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் தான் எனது தும்பிக்கையில் இருந்து உனது கைவிடுபடும் என்று கூறினார். ஜெமீன்தார் அழுது சத்தம் போட்டும் கைவிடுபடவில்லை. அக்கிராமத்து மக்கள் எல்லோரும் கோவிலுக்கு வந்துவிட்டனர். விடயம் அறிந்து ஜெமீன்தாரின் மனைவியும் வந்து விட்டார். ஜெமீன் தாருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நாணித் தலைகுனிந்து கொண்டு நின்றார்.

மனைவியிடம் வீட்டுக்குப் போய் ஐயாயிரம் பொன் கொண்டு வந்து கந்தனுக்குக் கொடு என்றார். அவர் ஓடிச் சென்று ஐயாயிரம் பொன் கொண்டு வந்து கந்தனுக்குக் கொடுத்ததும் பிள்ளையாரின் தும்பிக்கையிலிருந்து ஜெமீன் தாரின் கை விடுபட்டது. தப்பினேன் பிழைத்தேன் என்று ஜெமீன்தார் வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றார்.

**நேர்மைக்கு எந்நாளும் அழிவு இல்லை.**
**சத்தியம் வெல்லும்**

## விடுகதைகள்

கதைகள் சொல்வது போல் குழந்தைகளுக்கு விடுகதைகளை சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களது சிந்தனைத் திறனை விடுகதைகள் வளர்க்கும்.

1. சருகுச் சேலைக்காரி சமையலுக்கு உதவுவாள். அவள் யார்?
2. கோடையில் சுற்றி வரும் வாடையில் முடங்கி விடும். அது என்ன?
3.கொலுவிலும் இருக்கும். குழந்தையிடமும் இருக்கும். அது என்ன?
4.கையை வெட்டுவார். கழுத்தை வெட்டு வார். ஆனாலும் நல்லவர். யார் அவர்?
5 கூடவே வருவான். ஆனால் பேசமாட்டான் யார் அவன்?
6. கையில்லாமல் நீந்துவான். கால் இல்லாமல் ஓடுவான். அவன் யார்?
7. குட்டிப் போடும். ஆனால் எட்டிப் பறக்கும். அது என்ன?

**விடைகள்** :1.வெங்காயம், 2. மின்விசிறி, 3. பொம்மை, 4. தையல்காரர், 5. நிழல், 6. படகு, 7. வௌவால்.


## பொது அறிவு

1. உலகில் மிகப்பெரிய விலங்கு எது? திமிங்கிலம்
2. உலகில் உயரமான விலங்கு எது? ஒட்டகச் சிவிங்கி
3. உலகில் மிக உயரமான மலை எது? இமயமலை
4. உலகிலேயே மிக நீளமான நதி எது? அமேசன்
5. உலகிலேயே மிக நீளமான நதியாகக் கருதப்பட்ட நதி யாது? நைல் நதி .
6. உலகிலேயே மிக ஆழமான ஆழி எது? மரியானா ஆழி
7. உலகிலேயே மிகப்பெரிய நகரம் எது? லண்டன்
8. உ லகிலேயே மிகப் பெரிய பாலைவனம் எது? சஹாராப் பாலைவனம்
9. உலகிலேயே மிகச் சிறிய அரசு எது? வத்திக்கான்
10. உலகிலேயே பெரிய சமுத்திரம் எது? பசுபிக் சமுத்திரம்

## உங்களுக்குத் தெரியுமா?


முள்ளம்பன்றியை நீரில் அமிழ்த்தி மூழ்கடிக்கவே முடியாது. காரணம் அதன் மேலுள்ள முட்கள்.

இந்த முட்களில் வெற்றிடம் நிரம்பியுள்ளது. இவை பலூன் போல முள்ளம் பன்றியை மேலே மிதக்க வைக்குமே தவிர மூழ்கடிக்காது.



ர. சௌமியா
தரம் - 5F
[illegible] ஆரம்ப பாடசாலை

## ஆனை ஆனை



ஆனை ஆனை
அழகர் ஆனை

அழகரும் சொக்கரும்
ஏறும் ஆனை

கட்டிக் கரும்பை
முறிக்கும் ஆனை

காவேரி தண்ணீரை
கலக்கும் ஆனை

குட்டி ஆனைக்குக்
கொம்பு முளைச்சுதாம்

பட்டணமெல்லாம்
பறந்தோடிப் போச்சுதாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நிலக்கரியும் நிறைய அரசியலும்!

"2ஜி அலைக்கற்றை ஊழலில், 1.76 இலட்சம் கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் இழப்பு' எனச் செய்தி வந்தபோது, அந்தத் தொகை அதிர்ச்சியடைய வைத்தது. ஆனால், "நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் அரசுக்கு 1.86 இலட்சம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு' என்ற செய்தி, மக்களிடம் அத்தனை அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை. ஒப்பீட்டளவில் 2ஜி-யைவிட, நிலக்கரி ஊழல் குறித்து பேசப்பட்டது மிகக் குறைவு. மக்களின், ஊடகங்களின் இந்த மௌனத்தை, தனக்கான கேடயமாகப் பயன்படுத்திக்கொண்டது அப்போதைய காங்கிரஸ் அரசு.

"அரசியல் ஆசை வந்துவிட்டதால்தான் மத்திய தணிக்கை அலுவலர் (CAG) வினோத ராய் இப்படி எல்லாம் உளறுகிறார்' என காங்கிரஸ் அப்போது குற்றம் சாட்டியது. அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர்கள், "மத்திய தணிக்கை அலுவலகத்தில் ஊடுருவியுள்ள வைரஸ்' என வினோத் ராயை வர்ணித்தனர். "இப்படிப்பட்ட அதிகாரிகளால் மத்திய தணிக்கை அலுவலகத்துக்கே அசிங்கம்' எனத் திட்டக் கமிஷனின் அப்போதைய துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா தோள்களை நாகரிகமாகக் குலுக்கி அலுத்துக் கொண்டார். "நிலத்திலிருந்து வெட்டியே எடுக்கப்படாத நிலக்கரிக்குக்கூட விலை நிர்ணயித்து ஊழல் நடந்துவிட்டதாகச் சொல்வது பிதற்றல்' என வினோத் ராயை, அப்போதைய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கிண்டலடித்தார்.

"நிலக்கரி ஊழல் நடந்தபோது அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தது நீங்கள்தான். அதனால் நீங்கள் பதில் சொல்லுங்கள்' என எதிர்க்கட்சியினர் அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கேள்விகள் எழுப்பி நாடாளுமன்றத்தை முடக்கியபோது, அவரிடம் இருந்து ஒரு பதில்கூட வரவில்லை. மாறாக "அது சம்பந்தமான கோப்புகள் தொலைந்துவிட்டன' என்ற செய்தி மட்டுமே வந்தது. பின்னர் இந்த வழக்கு சி.பி.ஐ விசர்ரணைக்கு சென்றது. உச்ச நீதிமன்றத்தின் கிடுக்கிப்பிடி விசாரணையின் காரணமாக வழக்கு சூடுபிடித்தது. "1993 முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்ட நிலக்கரிச் சுரங்க உரிமங்கள் அனைத்துமே சட்ட விரோதமானவை' என அறிவித்த உச்சநீதிமன்றம், 200 இற்கும் மேற்பட்ட சுரங்க ஒதுக்கீட்டு உரிமங்களையும் ரத்துசெய்து உத்தரவிட்டது. பின்னர் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபரில், நிலக்கரிச் சுரங்கங்கள் மின்னணு முறையில் ஏலம்விடப்படும் என அரசு அறிவித்தது.

இப்போது முதற்கட்டமாக 15 சுரங்கங்களுக்கான ஏலம் நடந்து முடிந்துள்ள நிலையில், அரசுக்குக் கிடைத்துள்ள ஏலத்தொகை பலரையும் புருவம் உயர்த்த வைத்துள்ளது.

15 சுரங்கங்களுக்கான ஏலத்தின் மூலம் மத்திய அரசுக்கு 83 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. இந்தச் சுரங்கங்கள் அமைந்திருக்கும் மாநில அரசுகளுக்கு 13 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்க விருக்கிறது. இதையெல்லாம்விட கவர்ச்சியான அம்சம், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் மின் கட்டணம் சுமார் 37 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குக் குறையவும் வாய்ப்பு இருக்கிறது. காரணம், "ரிவர்ஸ் ஆக்ஷன்' என்ற, ஏலத்தின் முக்கிய விதிமுறையி லேயே மின் கட்டணம் தொடர்பான முடிச்சும் போடப்பட்டிருப்பதுதான்.

இதுவரை ஏலம் விடப்பட்டிருப்பது 15 நிலக்கரிச் சுரங்கங்கள் மட்டும்தான். இதிலேயே இவ்வளவு பலன் என்றால், மீதம் இருக்கும் சுரங்கங்களில் இருந்தும் இன்னும் பெருந்தொகையைத் திரட்ட முடியும் என்பது உறுதி. "குறைந்தது 15 இலட்சம் கோடி ரூபாய் திரட்ட முடியும்' என்கிறார்கள் நிபுணர்கள். இதற்கு மேல் மதிப்பிடுவோரும் உண்டு. www.mstce-commerce.com/coalauctionhome என்ற இணையதளத்தில் நிலங்கரிச் சுரங்க ஏலத்தை நேரலையாகவே பார்க்கலாம். இவ்வளவு பிரமாண்டமான தொகை அரசுக்கு வருமானமாகக் கிடைத்திருக்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தி என்றால், இதைச் சாத்திய மாக்கியது உச்ச நீதிமன்றத்தின் கண்டிப்பும், கண்காணிப்பும், கறாரான அணுகுமுறையும்தான். கடந்த காலங்களில் இதேபோன்ற பெருந்தொகை ஈட்டும் சாத்தியம் இருந்தும், ஏன் அரசு அதைச் செய்யவில்லை? இதைப் புரிந்துகொள்ள நமது சுரங்க ஏல விதிமுறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.


1990-களுக்கு முன்பு வரை நாட்டில் இரும்பு, சிமெண்ட் போன்ற மூலப்பொருட்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவியது. இதற்கு முக்கியக் காரணம், மின் பற்றாக்குறை. போதுமான அளவுக்கு மின் உற்பத்தி நிலையங்கள் அப்போது இல்லை. இருந்தவற்றை முழுத் திறனுடன் இயக்கப் போதுமான நிலக்கரியும் கிடைக்கவில்லை. அரசின் "கோல் இந்தியா' நிறுவனத்தின் மந்த செயல்திறன்தான் இதற்குக் காரணம். இதனால் இரும்பு, மின் உற்பத்தி, சிமெண்ட் போன்ற துறைகளில் ஈடுபட்டுவந்த தனியார் நிறுவனங்களுக்கு நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் உரிமத்தை, இலவச மாக வழங்க வழி செய்யும் வகையில் Coal Mines (Nationalisation) Act 1973 சட்டத்தை அரசு திருத்தியது.

நிலக்கரிச் சுரங்கங்களை இப்படி இலவசமாக தனியாருக்குத் தாரைவார்க்கும் நடை முறை கடந்த 20 ஆண்டுகளாக இருந்ததுடன், மன்மோகன் சிங் பிரதமராக இருந்த 2004- 2014 காலகட்டத்தில் இது அதிவேகமாக நடந்தது. நவீன் ஜிண்டால், விஜய் தார்தா, சுபோத்காந்த் சகாய் போன்ற பண முதலைகள், பணத் திமிங்கிலங்களாக உருவெடுத்தனர். முறையான ஏலம், வெளிப்படைத்தன்மை எதுவுமே இல்லாமல் பெயருக்கு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு கை காட்டும் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. இதன் பின்னணியில் ஊழலும் கொள்ளை இலாபமும் இருந்தன என்பதை தனியே சொல்லத் தேவையில்லை.

என்னென்ன காரணங்களுக்காக இந்தத் தனியார் நிறுவனங்களுக்குச் சுரங்க உரிமம் வழங்கப்பட்டதோ, அதுவும் நிறைவேறவில்லை. நிலக்கரி உற்பத்தியையும் அவர்களால் அதிகரிக்க முடியவில்லை. இதுதான் பின்னணி. கடந்த காங்கிரஸ் ஆட்சியில் வழங்கப்பட்ட சுரங்க ஒதுக்கீடு, அதில் ஏற்பட்ட வருமான இழப்பு, இப்போதைய மின்னணு ஏல முறையில் கிடைத்துள்ள ஆதாயம்... இவற்றை இணைத்துப் பார்த்தால் இதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

முன்பு இருந்ததைவிட இப்போது நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு குறித்த புரிதல் மேம்பட்டிருக்கிறது. கூடவே உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பும் இருப்பதால், ஏல முறையில் வெளிப்படைத்தன்மை நிலவுகிறது. ஆனால, முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் பலனடைந்த அதே நவீன் ஜிண்டால் நிறுவனம், இப்போதும் பெரும் ஆதாயம் அடைந்துள்ளது. ஒரு தொன் 108 ரூபாய் என்ற மதிப்பில் சட்டீஸ்கரில் இரண்டு சுரங்கங்களை இந்த நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. நிலக்கரிச் சுரங்கத்தைப் பொறுத்தவரை ஒவ்வொன்றுக்கும் ஏல மதிப்பு மாறுபடும். என்றாலும், ஏலம் விட்ப்பட்டுள்ள மற்ற அனைத்துச் சுரங்கங்களையும் ஒப்பிடும் போது, நவீன் ஜிண்டால் நிறுவனம் மிகக் குறைந்த தொகைக்கே ஏலம் பெற்றிருக்கிறது. இதிலிருந்து நமக்குத் தெரிவது ஒன்றே ஒன்றுதான்... அரசுகள் மாறலாம், ஏல முறைகள் மாற்லாம், நிறுவனங்களும் மாறுகின்றன. ஆனால், அவை தங்களின் லாபியை மாற்றிக்கொண்டு இலாபத்தை உறுதிப்படுத்திக் கொள்கின்றன!

-ஆனந்த விகடன்-



வினோத் ராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினிமா செய்தி



# காக்கிச் சட்டை

## திரைவிமர்சனம்

சினிமாவுக்குள் வந்த குறுகிய காலத்திலேயே ஸ்டார் அந்தஸ்துக்கு உயர்வது என்பது எல்லோருக்கும் நடப்பது அல்ல... அந்த வகையில் சமீபகால்லத்தில் கார்த்திக்கு அப்புறம் அப்படி ஸ்டார் ஆகியிருப்பவர், சிவகார்த்திகேயன். காமெடியனாக ஆவோம் என்று வந்தவர் சட்டென்று உயரே போய்விட்டார். அதற்கு இரண்டு முக்கியகாரணங்கள்... ஒன்று, அவரது காமெடி சென்ஸ், அடுத்து அவரது தன்னடக்கம். இது இரண்டும் கேட்டுத் தொலைக்கிறது மைண்ட் வொய்ஸ். இருந்தாலும், ஒரு ஆக்ஷன் ஹீரோவுக்கே உரியலுக், பொலிசுக்கே உரிய ஃபிட், நடை என தன்னை அப்பட்டமாக மாற்றியிருக்கிறார். ஸ்ரீதிவ்யா... அட ஏம்பா அந்தப் பொண்ணுக்கு இவ்வளவு மேக்கப். படம் முழுக்க பிங்க் லிப்ஸ் பிங்க் லிப்ஸ் பாட்டே பாடலாம் போல அப்படி வர்றாங்க. நர்ஸ் எஃபெக்ட்டே வரல. ஆனாலும் மென்மையா வந்துகிட்டு இருந்த ராஸ். லைட்டா நமக்கு ரகுவரன் கெடச்சுட்டாருன்னுகூட சொல்ல வெச்சுருக்காரு.முதல் பாதி போன இடமே தெரியலை, அவ்ளோ ஃபாஸ்ட். இரண்டாம் பாதிதான் கொஞ்சம் நீளம். ஆக்ஷன் கதைக்கு அதிரடி தெறி தெறிக்குது அனிருத் பின்னணி இசை. 'காதல் கண் கட்டுதே' பாட்டு படம் முடிஞ்ச பிறகும் கேட்டுகிட்டே இருக்கு. சுகுமார் கமரா சுப்பர். பொலிஸ் கிட்டையே காசு கேக்கறியேய்யா, அட... பொலிஸே பொலிசுக்கு குடுக்கலைன்னா எப்படியா', உங்களையெல்லாம் பாத்தா பிச்சையெடுக்கற மாதிரியா இருக்கு, பின்ன ஐ.பி.எல். டீம ஏலம் எடுக்கற மாதிரியா இருக்கு' - இப்படி படம் முழுக்க பட்டுக்கோட்டை பிரபாகரோட டைமிங் காமெடி வசனங்கள் அள்ளுது. முதல்பாதியில் இந்தப் படம் பெயர் பெற்றுத் தரும்.. ரொம்ப நாளாக சரியான களம் கிடைக்காமல் தடுமாறிக்கொண்டிருந்த அண்ணாச்சி, இதில் பட்டையைக் கிளப்பியிருக்கிறார். தூத்துக்குடி பாஷையில் அண்ணாச்சி பேசும் வசனங்கள் சிரிப்பை வரவைக்கின்றன. கூடவே, சிவா வில்லன்களை ஒழிப்பதில் கூடவே இருந்து உதவுகிறார். இனி அதிக படங்களில் இவரைப் பார்க்கலாம். நல்ல கமர்ஷியல் ஆக்ஷனுக்குரிய அத்தனை சிறப்பு அம்சங்களும் படத்துல இருக்கு. பாத்து பழகின சீன்தான். ஆனாலும், சிவகார்த்திகேயன் தன்னோட பாணியிலயே மொத்த படத்தையும் முதுகுல தூக்கியிருக்காரு. சரி... படம் பார்க்கலாமா? சிவகார்த்திகேயனோட அப்டேட் வெர்ஷன பாக்கணும்னா கண்டிப்பா பாக்கலாம் பாஸ்!





ஷ்ரியா ஷர்மா



இருக்கும்வரை, அவரது வளர்ச்சி தொடரவே செய்யும். நடிகரா பொறந்த எல்லாரும் ஒரு நாள் பொலிஸ் டிரெஸ்ஸ மாட்ட வேண்டிய நிலைமை வரும். இப்போ அந்த நிலைமை நம்ம சிவகார்த்திகேயனுக்கு. உடல் உறுப்புத் திருட்டு உலக அளவுல நடக்குது. இன்ஸ்பெக்டராகி படு ஃபோர்ஸா வேலை பாக்க நினைக் குற புத்திசாலி கான்ஸ்டபிளான சிவகார்த்திகேயனுக்கு இந்த கேஸ் கிடைக்குது. என்ன ஆச்சுங்கிறது மீதி கதை. சிவகார்த்திகேயன் நல்லாத்தான் நடிக்கிறாரு. ஆனாலும், மாஸ் சீன்கள் வரும்போது நம்மையும் மீறி சிவகார்த்திகேயனுக்கு மழையில ஃபைட்டா.... அவருக்கு சேஸிங்கா? என கேட்டுத் வந்துகிட்டு இருந்த பொண்ணு, இந்தப் படத்துல கொஞ்சம் நல்லாவே வேலை பாத்துருக்கு. பிரபு, மனோபாலா, மயில்சாமி, இமான் அண்ணாச்சி, வித்யூலேகா... இப்படி படம் முழுக்க நட்சத்திர பட்டாளம்தான். கதையோடு ஒட்டி எல்லாரையும் சரியா பயன்படுத்தி, காமெடி டிராக்கைக்கூட கதையோட பின்னியிருக்காரு இயக்குநர் துரை செந்தில்குமார். கதை மட்டும் கொஞ்சம் வேற யோசிச்சுருக்கலாம். 'என்னை அறிந்தால்' படத்த ஞாபகப்படுத் திட்டீங்களே! அடடே வில்லன்! அலட்டாம ஆர்ப்பாட்டம் இல்லாம சால்ட் ரு பெப்பர் முடியை ஸ்டைலா தள்ளி விட்டுகிட்டே நின்னு விளையாண்ட்ருக்காரு விஜய் கதைக்கு வராமல் லவ் காமெடியிலேயே ஓட்டுவது. இரண்டாம்பாதியில் சிவாவுக்கும் வில்லனுக்கும் நடக்கும் கண்ணாமூச்சி ஆட்டம் நீள்வது ஆகியவற்றைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், படம் போரடிக்காமல் நல்ல டைம் பாஸ் மூவியாக வந்திருக்கிறது. தாவணி அளவிற்கு மாடர்ன் ட்ரெஸ்ஸில் திவ்யா நம்மைக் கவரவில்லை. நர்ஸாக வந்து, ஹீரோவுக்கு உதவி செய்யும் வேடம். பெரிதாக நடிக்காவிட்டாலும், ஃபுல்மேக்கப்பில் பளிச்சென்று இருக்கிறார். வழக்கம்போல் படத்தில் கவர்ச்சி காட்டவில்லை, அது வாட்ஸப்பில் மட்டும் தான் போலும். ரசிகரான நடிகைக்கு ஜோடி என்று இந்த

## ஜில்லாவிலேயே நடக்க வேண்டியது புலி படத்தில் தான் நடந்ததா?

புலி படம் எப்போது திரைக்கு வரும் என ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இதில் விஜய் இரண்டு விதமான கெட்டப்புகளில் நடிக்கிறார் என கூறப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்படத்தின் ஒளிப்பதிவாளர் நட்ராஜ் ஒரு பேட்டியில் ருசிகர தகவல் ஒன்றை கூறியுள்ளார். இதில் 'ஜில்லா படத்திலும் நான் தான் ஒளிப்பதிவாளராக பணியாற்ற வேண்டியது.ஆனால், ஒரு சில காரணங்களால் தள்ளிப்போனது, புலி படத்தில் கண்டிப்பாக நீங்கள் தான் பணியாற்ற வேண்டும் என்று, விஜய் கூறியதால் இந்த முறை தவறவிடக்கூடாது என்று சம்மதித்து விட்டேன்' என தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org